# கலங்கரை



பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், காரைநகர்
2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை

## பிரதேச மலர்-II

**பிரதேச கலாசாரப் பேரவை**

**பிரதேச செயலகம்**

**காரைநகர்**

**2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | "கலங்கரை-பிரதேச மலர் II" |
| வெளியீடு | : | பிரதேச செயலகம்<br>காரைநகர் |
| பதிப்பு | : | 16.12.2015 |
| தொகுப்பாசிரியர் | : | ம.மேர்சி சுஜந்தினி, கலாசார உத்தியோகத்தர் |
| பக்கங்கள் | : | 99 + 11 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்பகம் | : | ஈஸ்வா டியிற்றல் அச்சகம்,<br>இல:172174,<br>இராமநாதன் வீதி<br>யாழ்ப்பாணம் |
| **Title** | : | "Kalankarai Divisional Malar - II" |
| **Published by** | : | Divisional Secretariat<br>Karainagar |
| **In Published** | : | 16.12.2015 |
| **Compile** | : | M.Mercy Sujanthini,Cultural Officer |
| **Pages** | : | 99 + 11 |
| No.of copies | : | 500 |
| **Printed By** | : | Eeswaa Digital Press,<br>No:172/174, Ramanathan Road<br>Thirunelvely. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தமிழ்த்தாய் வணக்கம்**

(பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.....

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பலஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

"மனோன்மணியம்"
பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

ஏழ் கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே (வாழ்க)

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்றிட
சுடர்க தமிழ் நாடே (வாழ்க)

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் பிரதேச கீதம்

வாழிய வாழிய வாழியவே — காரை
நகர் என்றும் வளமுடன் வாழியவே!
சூழுக இன்பமும், வெற்றியுமே — மாந்தர்
சொர்க்கம் இம் மண்ணென வாழ்ந்திடவே!

ஈழத்துச் சிதம்பர ஆலயமும் - வாழும்
எண்ணற்ற கோவிலின் அதிசயமும்
கோவளக் கலங்கரை, கசூரினாவும் - சூழ்ந்து
கொழித்திட அலையிடை தவழும் நிலம்!

பெருவயல், கடல்படு திரவியங்கள் - தெங்கு,
பனைவளம், வாணிகம், கைத்தொழில் வகைகள்
பரந்து சென்றுழைப்பவர் இடும் முதல்கள் - காரைப்
பதிதனை வளர்த்திடும் பெரும்பலங்கள்!

கலைஞர்கள், கவிஞர்கள், இசைநிபுணர் - ஞானக்
கல்வியில் சிறந்தவர், உடல் வினைஞர்
தமிழ்ச் சைவந் தளைத்திடத் தமை விதைத்தோர் - தோன்றித்
தனித்துவம், தனிப் புகழ், பொறிக்கும் நகர்

தருமத்தின் விழுமியம் செழிக்கும் பதி — செல்வம்
தடையின்றிப் பெருகிடும் எளிமை மடி!
குறைகளைந் தெழுந்து இங்கொரு உயர்ச்சி – கண்டு .. எம்
கொடி அசைத்து அடைவோம் நல் அபிவிருத்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேசக் கொடியினுள் உள்ளடக்கப்பட்ட அடையாளங்கள் பிரதிபலிக்கும் விளக்கம்

01. வெளிச்சவீடு:- எமது பிரதேசத்தின் தனித்துவம் காட்டப்பட்டுள்ள கோவளம் வெளிச்ச வீடு 1916ம் ஆண்டு கட்டப்பட்டதுடன் இலங்கையின் பெரிய வெளிச்ச வீடுகளுள் ஒன்றாகும்.

02. பனை:- எமது வட பிரதேசத்தையும் எமது பகுதியில் பிரதானஇயற்கை வளம் ஒன்றினையும் குறிக்கும்.

03. நெல்:- எமது பிரதேசத்தின் பிரதான தொழிலான விவசாயத்தினைக் குறிக்கும்.

04. உடுக்கு, மேளம், நாதஸ்வரம்:- எமது பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளையும் இன்றும் போற்றப்படும் கலைகளையும் குறிக்கும்.

05. மீன்:- எமது பிரதேசத்தின் மேலுமொரு முக்கிய தொழிலான கடற்றொழிலைக் குறிக்கும்.

06. சவுக்கு:- கசூரினா கடற்கரையை குறிக்கும்.

07. கொடி நிறம் (நீலம)்:-எமது பிரதேசம் நான்கு புறமும் கடலால் சூழப்பட்டதைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் ஆசிச்செய்தி

காரைநகர் பிரதேச செயலத்தால் வருடந்தோறும் வெளியிட்ப்படும் "கலங்கரை" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சிடைகிறேன்.

காரைநகர் பிரதேச மக்களில் பெரும்பாலோனோர் இன்றும் பழைமையான சைவ ஆகம, ஆசார முறைமைகளை பேணிக் கடைப்பிடித்து வருகின்றமை பராட்டத்தக்கதாகும். இம்மலரானது காரைநகர் பிரதேசத்தின் கலை, கலாசார, வாழ்வியல் தொன்மைகள், மற்றும் நாட்டுப்புறவியல் சார்ந்த, பல விடயங்களை தாங்கி வெளிவருவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

பிரதேச மக்களின் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை பிரதேச செயலகங்கள் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி மருத்துவம் கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவுகளையும் சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர் பணிபாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இ. இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ். மாவட்டத்திலுள்ள ஸப்த தீவுகளில் ஒன்றாகிய காரைநகர்ப் பிரதேசம் கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலப்பரப்பினைக் கொண்டமைந்த பகுதியாகும்.

இப் பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படுகின்ற "கலங்கரை" பிரதேச மலர் -02 என்னும் பண்பாட்டு மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"கலங்கரை" பிரதேச மலர் 02 பண்பாடு சார்ந்த வழியில் கலை, சலாசாரப் பாரம்பரியங்களை மட்டுமன்றி நிறைவான ஆலயங்களையும் சிறப்பாக ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரை நகர் சிவன் கோவில் குறிப்பிடத்தக்க சிறப்பினை உடையதாகும். இதே வகையில் கடலில் வரும் கப்பல்களுக்கெல்லாம் கலங்கரை விளக்கினைக் கொண்டிருக்கும் கோவளம் வெளிச்ச வீட்டு பகுதியினையும் இங்கு குறிப்பிடுவதும் சாலப் பொருத்தமாகும்.

மேலும் பல்வேறு தொழில் நடவடிக்கையினை கொண்டு விளங்கும் அதேவேளையில் இப்பிரதேச மக்கள் வர்த்தகத்திலும், ஒழுக்க விழுமியங்களிலும் நன்நிலை பெற்றிருப்பதினை விளக்கும் வகையில் இப்பிரதேச சிறப்புக்களை எல்லாம் ஆவணப்படுத்தும் நன்முயற்சியின் பயனாக "கலங்கரை" பிரதேச மலர் 02 சிறப்பாக அமையவும், இம்மலர் மலர அனைத்து வழிகளிலும் உழைத்த மலர்க்குழு, பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

காரைநகர் பிரதேச செயலகமும் கலாசாரப்பேரவையும் இணைந்து வருடா வருடம் நடத்தும் கலை, இலக்கியப் பெருவிழாவில் "கலங்கரை" பிரதேச மலரானது வெளியிடப்பட்டு வருகின்றமைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

காரைநகர் பிரதேசமானது கடல் வளத்தினாலும் விவசாயத்தினாலும் வியாபாரத்தினாலும் செழித்தோங்கி விளங்குகின்றது என்றால் மிகையாகாது. இப்பிரதேசத்தின் வனப்புக்களை எடுத்தியம்பும் வகையில் இம்மலரானது காரைநகர் பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், சிற்பங்கள், பழமொழிகள், பிரதேசத்தின் மதசார் தொன்மை, வரலாறுகள், மருத்துவ முறைமைகள், நாட்டார் நடைமுறைகள், இலக்கியபடைப்புக்கள் முதலான பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடனும் கலை, பண்பாட்டியல் ஆர்வலர்களுக்கு அவர்களது திறன்களை வெளிக் கொணரும் வளர்நிலைக் களமாகவும் அமைந்துள்ளமை மிகவும் சிறப்பான அம்சமாகும்.

எம் இனத்தின் மொழியும் பண்பாட்டு விழுமியங்களும் பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அவை இன்று வரை அழியாது சீரும் சிறப்புமாக வனப்புடன் திகழ்வதற்கு இவ்வாறான கலைஞர்களினதும், இலக்கிய கர்த்தாக்களினதும் ஆக்கங்களே சான்றாகவுள்ளன.

அந்த வகையில் தொடர்ச்சியாக இரண்டாவது தடவை வெளிவரும் "கலங்கரை" பிரதேச மலரானது சிறப்பாக வெளி வருவதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இச்செயற்பாட்டினை முன்னெடுத்த குழுவினருக்கு மனம் நிறைந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. வனஜா செல்வரத்தினம்,
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகவுரை

ஒரு இனத்தின் அல்லது குழுமத்தின் இருப்பை வெளிக்காட்டுவதும் தக்க வைத்துக் கொள்வதும் அதனது பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், இலக்கியங்கள், தொல்பொருட்கள், சமய ஆசாரங்கள், சடங்கு முறைகள் என்பனவாகும். காரைநகர் பிரதேசத்தினது வழக்காறுகளை ஆவணப்படுத்துமுகமாக காரைநகர் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து வெளியிடுகின்ற "கலங்கரை" பிரதேச மலர் – 11 ற்கு முகவுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏழு தீவுகளில் ஒன்றாகிய காரைதீவு நாற்புறமும் கடல் சூழ்ந்து விளங்கி 1923ம் ஆண்டு முதல் காரைநகர் எனப் பெயர் சூட்டப்பட்டு ஈழத்துச் சிதம்பரம் என சிறப்புப்பெயரால் அழைக்கப்படும் சிவன் ஆலயமும் ஏனைய ஆலயங்களும் அருள்பாலித்துக் கொண்டிருக்க 1916ல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட "கோவளம்" வெளிச்ச வீடு வரலாற்றுத் தொல்லியல் சான்றாக விளங்கி நிற்பதுடன் அழகிய சவுக்கடிக் கடற்கரை அழகை மேலும் மெருகூட்டி நிற்பதுடன் நகரின் மத்தியிலே வயல் சூழ்ந்து வளம் கொழிக்க ஏராளமாக கேணிகள், மடங்கள் அமைந்து கலை, கலாசாரம், பாரம்பரியங்கள், ஆசாரங்கள் பேணும் மக்கள் வாழும் காரைமண் வாணிபத்தில் சிறந்தோங்கிக் காணப்படுகின்றது.

இந்நூலில் இப்பிரதேசத்தின் தொன்மை, மக்களின் வாழ்வியல் நிலை அன்றும் இன்றும், கலைப்பாரம்பரியம், கடல் வளம் மற்றும் ஏனைய வளங்களின் பயன்பாடு, சமூக நிறுவனங்கள் தொடர்பான விளக்கக் கட்டுரைகளும், விபரணக் கட்டுரைகளும் மற்றும் படைப்பாளிகளின் சிறுகதை, கவிதை மற்றும் ஏனைய விடயங்களும் இடம்பெற்று இந்நூலை அணி செய்கின்றன.

காரைநகரின் தொன்மையை ஆவணப்படுத்துவதோடு எதிர்கால சந்ததியினருக்கு இதனை கையகப்படுத்தும் முயற்சியாகவும் காலவோட்டத்தை அறிந்து கொள்ளும் ஆவணமாகவும் இது அமைந்துள்ளது. இந்நூலாக்கத்திற்கு நிதியுதவி வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் இம்மலரை அலங்கரிக்க ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் பாராட்டுக்களைக் கூறுவதுடன் இம்மலர் வெளிவர பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதுடன் இம்முயற்சிகள் மேலும் தொடர இறைவன் திருவருள் கிடைக்கவும் வேண்டி நிற்கின்றேன்.

தே.பாபு,
பிரதேச செயலரும் கலாசாரக் பேரவைத் தலைவரும்,
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ் மொழி வாழ்த்து

பிரதேச கீதம்

வாழ்த்துச் செய்திகள்

முகவுரை

| | | |
|---|---|---|
| 01 | அசோதரத்து அரங்கில் நாடகம் | 01 |
| 02 | காரைநகரைப் பெருமையுற வைத்த மூதறிஞர் சிவஸ்ரீ. கு. வைத்தீசுவரக்குருக்கள் | 07 |
| 03 | காரை மண்ணின் பண்பாட்டு – கலாசார விழுமியங்கள் அன்றும் இன்றும் - ஒரு கண்ணோட்டம் | 11 |
| 04 | காரைநகரில் நடமாடிய சித்தர்கள் | 16 |
| 05 | என் மண்ணே | 31 |
| 06 | காரைநகர் பிரதேச கடற் பொருண்மிய வளம் | 33 |
| 07 | "இசையில் நவரசங்களின் பங்கு" | 39 |
| 08 | எமது தேசத்தின் எழுச்சி | 43 |
| 09 | ஆயுளை அதிகரிக்கும் உத்தி | 45 |
| 10 | நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் | 49 |
| 11 | கலைகளின் சிகரம் கலாசாரம் | 55 |
| 12 | தமிழிலக்கியத்தில் சமண பௌத்த மதங்களின் செல்வாக்கு | 57 |
| 13 | வேட்டை | 62 |
| 14 | காரைநகரில் வழக்கிலிருந்த நாட்டுப்புறப் பாடல்கள் | 70 |
| 15 | வெடி அரசன் கலாமன்றம் | 75 |
| 16 | ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கலைக்கல்லூரி | 77 |
| 17 | காரைநகரில் கலைப் பணியாற்றும் முத்தமிழ் பேரவை | 78 |
| 18 | களபூமி கலையகம் | 82 |
| 19 | பெண்மை காப்போம் | 84 |
| 20 | தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்களும் அதனை வழங்கும் நிறுவனங்களும் | 86 |
| 21 | நறுக்கெண்டு நாலு வார்த்தை............ | 90 |
| 22 | " வறுமையின் சின்னம்" | 92 |
| 23 | " மாற்றம்" | 96 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசோதரத்து அரங்கில் நாடகம்

**கலைஞானசுரபி, கலாவித்தகர்**
**லெப்ரினன்ட் வி.அனிருத்தன்,**
**விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை**

குஞ்சரகிரி, சாகதீவு, அசோதரம், அம்ஸ்ரர்டம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்ட காரைநகர்ப் பிரதேசத்தில் ஏனைய துறைகளைப் போலவே அரங்கியற்கலைகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, அண்ணாவியார். ஆழ்வார் பொன்னர், தவில் நாதஸ்வரக் கலைஞர். கைலாயக் கம்பர், அண்ணாவியார். கணபதிப்பிள்ளை, சங்கீதபூசணம். நடராசா, மத்தளக் கலைஞர். கந்தையா, ஓவியர். இராசரத்தினம், கலாநிதி காரை.சுந்தரம்பிள்ளை, கலாபூஷணம். மூ.தேவதாஸ், காவடிக்கலைஞர்.கலாபூஷணம் மு.மயில்வாகனம், நடனக் கலைஞர். மாலதி தர்மா, சின்னமேளக் கலைஞர்கள் நாகேஸ்வரி, நாகபூஷணி சகோதரிகள் மற்றும் கலாபூஷணம் மா.சிவஞானம் போன்ற விற்பன்னர்களின் கலைப்பணிகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் இவ்வூருக்கென்ற தனித்துவம் கொண்ட நாடகக் கலையின் தொன்மைக்கும், சிறப்பிற்கும் 1882 களில் அண்ணாவியார் ஆழ்வார் பொன்னர் நாடக ஆற்றுகைகளைச் செய்துள்ளமையையும், கிழக்கில் உடுக்கடி வேலன் என்பவர் உடுக்கடித்துக் கதைகூறியமையையும் (வடஇலங்கை நாட்டார் அரங்கியல் ப.125), முருகேசையர் ‘குருகேந்திரன்’, ‘வாளபிமன்’ நாடகங்களை எழுதி ஆற்றுகை செய்தமையையும் குறிப்பிடலாம். மேலும், F.X.C.நடராசாவின்,

**“வாரிக் கதிர்வெட்டி வைத்தபின்**
**ஆடும் ஆட்டம் பள்ளு நாடகம்**......” என்ற பாடலடியும், கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களின்,

**‘முக்குவனார் கூத்தும் முதுதிமிலர் காவடியும்**
**திக்கரையார் சிந்தும் சிறப்பேனும்-ஒக்கவே**...

போன்ற பாடலடிகளும், கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளைஅவர்களின்,

**‘பட்டங்கட்டியினர் படைத்த பவளக்கொடி வடமோடி-அவர்**
**வீறுடனே ஆடிவந்த வெடியரசன் தென்மோடி**....’

போன்ற முனைவர்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளபாடலடிகளும் காரைநகர் நாடகக் கலையின் தொன்மையினையும் பெருமையினையும் எடுத்தியம்புகின்றன.

அரங்கவியல் ஆற்றுகைகள் பற்றிய பார்வையின் முன்னர் ஆலயங்களில் சித்தரிக்கப்படும் கரண நாடகங்களைப் பற்றிய பார்வை அவசியமாகின்றது. இறைவனையும் அசுரர்களையும் பாத்திரங்களாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்படும் சூரசங்காரம் போன்ற கரணங்கள் பரவலாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

அரசடிக்காடு கதிர்காமசுவாமி கோயில் வேட்டைத் திருவிழாவில் சிறுவர்களை வேடுவர் போல் ஒப்பனை செய்து அவர்களது கையில் ஆயுதங்களைக் கொடுத்து முருகப் பெருமானுடன் அவரது பரிவாரங்களாக ஞானியார் கோயிலுக்குச் சென்று மான் வேட்டையாடுவதும், காரை.கிழக்கிலுள்ள அண்ணமார் கோயிற்பூசாரி தம்மைக் கடவுளர்கள் போல் அலங்கரிப்பதும் அதே கடவுளர்கள் அவரில் உருவேறி வாக்குச் சொல்வதும் பண்டதரிப்பான்புலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாமிஅம்பிகா சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத் திருக்கல்யாணத் திருவிழாவில் சிவனை வெள்ளைத் துணியால் மறைத்து அவரை மாறுவேடத்தில் கள்ளமாகப் பெண்பார்க்கக் கொண்டு செல்வதும் மணமகனாகவும், மணமகளாகவும் அவர்களை அலங்கரித்து மணவறையில் வைத்து சகல திருமணச் சடங்குகளையும் செய்து தாலி கட்டுவதும் நிகழ்விற் கலந்து கொண்டவர்களுக்கு பீடா, வெற்றிலை என்பன பாமாறுவதும் பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கும்.

நாடக ஆற்றுகைகள் பற்றி நோக்குமிடத்து, கல்வந்தாள்வில் 1935 களில் **'இராமாயணம்'** வட்டக்களரியில், எண்ணெய் விளக்குகளின் ஒளியில் ஆட்டக்கூத்தாக ஆடப்பட்டதோடு, **'அரிச்சந்திரன்'**, **'வள்ளி திருமணம்'**, **'சத்தியவான் சாவித்திரி'**, போன்ற இசை நாடகங்களும், மருதபுரத்தில் 1947 களில் அண்ணாவி கோவிந்தனின் **'நல்வேந்தன் நல்கூந்தன்'**, 1959 களில் ச.மார்க்கண்டுவின் **'அரிச்சந்திரன்'** போன்ற வடிவங்களும், ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பொன்னன், கந்தசாமி, கணபதிப்பிள்ளை, சற்குணன் போன்றோர் நடித்துள்ளனர். பிட்டியெல்லையில் 1955 களில் **'பராசக்தி'**, **'பவளக்கொடி'**, 1965 களில் மு.கந்தரின் **'அரிச்சந்திரன்'** போன்ற நாடகங்களும், கந்தையா, கணபதி, ஏகாம்பரம் போன்றோரின் நடிப்பில் **'காத்தவராயன் கூத்து'**, 1985 இல் மார்க்கண்டுவின் திருமணமான பெண்களை மட்டும் நடிக்க வைத்த **'காலனை வென்ற கற்புக்கரசி'** போன்ற படைப்புக்கள் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. இந் நாடகம் திருமதிகள் மோகனலீலா, ரங்கம்மா, சரஸ்வதி, வள்ளியம்மை (காரை. செ.சுந்தரம்பிள்ளையின் சகோதரி) போன்றோரின் நடிப்புத் திறனையும், பெண்மையின் மேன்மையினையும் பறைசாற்றுவதாக அமைந்திருந்தது. இதேபோன்று, ஊரியில் 1986 இல் பெண்பிள்ளைகளின் நடிப்பில் **'காத்தவராயன் கூத்து'** ஒன்றும் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

தோப்புக்காட்டில் 1960 களில் **'ஸ்ரீ வள்ளி'**, 1967 இல் **'பக்த நந்தனார்'**, **'பவளக்கொடி'**, போன்ற இசை நாடகங்களும், வலந்தலையில் 1964 இல் 'சிவகௌரி நாடக மன்றம்' ஸ்தாபிக்கப்பட்டு **'மார்க்கண்டேயர்'**, **'பக்த மாணிக்கவாசகர்'**, **'கௌரியின் திருவிளையாடல்'**, **'மூர்த்தி நாயனார்'**, **'பக்த பிரகலாதன்'**, **'சத்தியவான் சாவித்திரி'** போன்ற படைப்புக்கள் சாமிகிருஷ்ணரின் நெறிப்படுத்தலிலும், பரதையா, கந்தையா, வடிவேலையா போன்றோரின் பின்னணி இசையிலும் ஆற்றுகைப்படுத்தப்பட்டுள்ளன.

காரைநகர் மத்திப் பிரதேசத்தில் இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை என்பனவும், கரகம், காவடி, பொம்மலாட்டம், குதிரையாட்டம் போன்ற நாட்டுப்புற வடிவங்களும், அழகுக் கலைகளும் சிறந்து விளங்குகின்றன. இங்கு ஐந்து நாடகக் குழுக்கள் முப்பதிற்கும் அதிகமான படைப்புக்களைப் பிரசவித்துள்ளன. 1882 களில் வாழ்ந்த அண்ணாவியார் ஆழ்வார் பொன்னர் (கலாபூஷணம் மூ.தேவதாஸ் அவர்களின் பூட்டனார்) **'அரிச்சந்திர நாடகம்'**, **'தருமபுத்திர நாடகம்'**, **'ஒட்டநாடகம்'** ஆகிய வடிவங்களை ஆற்றுகை செய்ததோடு, இவரது **'கோவலன் கண்ணகி'**, **'வீரகுமாரன்'** போன்றவற்றின் ஏட்டுச்சுவடிகளும் (ஓலைகள்) இவர் பயன்படுத்திய மத்தளத்தின் கொட்டு, கைத்தாளங்கள் என்பவற்றினையும் இவரது சந்ததியினர் இடப்பெயர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைக்கும் பாதுகாத்து வைத்திருந்தனர்.

1925 களில் சிவகாமிஅம்மன் கே-ாயில் ஏழாம் திருவிழாவின் போது 'ஒட்ட நாடகம்' பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆற்றுகை செய்யப்பட்டு வந்துள்ளது. இந்திய அரச கை-தயினைக் கருவாகக் கொண்ட இந்நாடகத்தில் சாமிஒட்டனாக சின்னையா முருகேசு, கள்ளஒட்டனாக காசி நல்லதம்பி, டில்லி இராசன-ாக பெருமாள் சபாபதி போன்றோர் நடித்துள்ளனர். 1940 களில் வரகவி பொன்னாலைக் கிருஷ்ணரின் நெறிப்படுத்தலிலும், சி.முருகேசு, வை.சின்னத்துரை (சாத்திரியார்), ச.சின்னையா, க.வைத்திலிங்கம், வே.கந்தையா (கொத்தவால்), நா.தம்பியையா, த.வடிவேலு, மு.ஆறுமுகம், இ.தருமலிங்கம், க.முருகையா, அ.குணராசா போன்றோரின் நடிப்பிலும் 'பவளக்கொடி' அரங்கிற்கு வந்துள்ளது. இது ஒரு வடமோடிக்கூத்து (வடஇலங்கை நாட்டார் அரங்கியல் ப.163). 1946 இல் கார்த்தி சின்னையா, வை.சின்னத்துரை, பெருமாள் கணபதிப்பிள்ளை (இயமன்), அம்பலம் கந்தையா போன்ற கலைஞர்களினால் **'சத்தியவான் சாவித்திரி'** ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

1956 இல் அண்ணாவி வீரசுப்பிரமணியம் (திருகோணமலை), மாதகல் சின்னத்தம்பி (நடனக் கலைஞர்) ஆகியோரின் தயாரிப்பிலும், சி.நாகராசா (பூதத்தம்பி), சு.சிவப்பிரகாசம் (ஜெயில்க்காப்), த.செல்வராசா போன்றோரின் நடிப்பில் **'வீரபாண்டிய கட்டப்பொம்மன்'**, 1960 இல் த.செல்வராசாவின் முயற்சியில் பல சமூகக் கலைஞர்களை ஒன்றுதிரட்டி, சின்னமேளக் கலைஞர் கன்னிகா பரமேஸ்வரியை நாயகியாக வைத்து **'வீறுகொண்ட மைந்தன்'** என்பன ஆற்றுகை செய்யப்பட்டன. முதன்முதலாகப் பெண் பாத்திரத்தை வைத்தும், பல சமூகக் கலைஞர்களை ஒரே அரங்கிற்குக் கொண்டுவந்தும் காரைநகர் நாடக வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய பெருமை த.செல்வராசா அவர்களையே சாரும்.

எம்மூரின் மூத்த பெண் இயக்குனர் திருமதி சிவஞானம் தையல்நாயகி அவர்கள் இளம் கலைஞர்களை உருவாக்கும் பணியில் 1960 இல் **'சத்தியவான் சாவித்திரி'**, 1961 இல் 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி', 1962 இல் **'மங்கையற்கரசி'**, **'மார்க்கண்டேயர்'** ஆகியவடிவங்களை மா.கணிதபூஷணிஅம்மா, வே.கருணாநிதி, செ.லிங்கராசா, ஆ.விநாயகமூர்த்தி, த.கோமளாதேவி, சி.சிவபாலன், சோ.விமலதர்மஜயா, சோ.கௌரிதேவி அம்மா, மா.தவ-மணி, க.துரைசிங்கம் போன்ற கலைஞர்களின் நடிப்பில் அரங்கப் பிரவேசங்களைச் செய்துள்ளார்.

**'வெடியரசன் நாடகமன்றம்'** அண்மைக் காலங்களில் தனக்கென்ற பதிவினை ஏற்படுத்திக்கொண்ட போதும், தனது பணியினை 1965 இலிருந்தே ஆரம்பித்துவிட்டது. ஆரம்பத்தில் 'பொ.சி.' நாடகமன்றம், **'அம்பாள் நாடகமன்றம்'** என்ற பெயர்களில் மத்தியின் இரு கண்களாகத் தனது படைப்புக்களைப் பிரசவித்துள்ளது. இதன் சேவைகளைத் தனித்தனியாக நோக்கவேண்டிய கடைப்பாடு இருக்கின்றது.

'பொ.சி. நாடகமன்றம்' கலாபூஷணம் மூத்ததம்பி தேவதாஸ் அவர்களின் நெறிப்படுத்தல்களிற் பல படைப்புக்களை ஆற்றுகை செய்து வந்துள்ளது. 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் **'பூதத்தம்பி'**, 1968 இல் 'வெடியரசன்', 1969 இல் **'சங்கிலியன்'**, 1970 இல் **'சமுத்திரகேசரி'**, 1971 இல் **'வீரகுமாரன்'**, 1972 இல் **'அங்கதன் சபதம்'** போன்ற நாடகங்கள் பல சாதனைகளையும், பதக்கங்களையும் பெற்றுள்ளன. இவ்வாக்கங்களில் சி.நாகராசா, சி.சோமசேகரம்பிள்ளை, மூ.தேவதாஸ்(நெறியாளர்), த.செல்வரத்தினம், நா.தம்பியையா, சி.சின்னைராசா, சி.பிரமநாதன், மு.குணரத்தினம் போன்றோரின் நடிப்புத் திறன்களும், நெறியாளரின் பாரம்பரியம் நழுவாத நவீன உத்திகளும், உடை, ஒப்பனை, காட்சியமைப்பு என்பவற்றின் சிறப்பும் ரசிகர்களை வியக்க வைத்துள்ளன. இப் படைப்புக்களின் பின்னணியில் பொ. சின்னையா (பொ.சி.), கா.சின்னையா (சட்டம்பி), ச.கிருக்ஷ்ணர், அ.தம்பையா, வை.சின்னத்துரை (சாத்திரியார்), க.நடராசா(இலிகிதர்) போன்றோரின் பணிகள்அளப்பரியன.

**'அம்பாள் நாடகமன்றம்'** உருவாக்கப்பட்டு 1966 இல் **'சிறுத்தொண்டன்'**, 1967 இல் **'பூதத்தம்பி'** ஆகியன அரங்கப் பிரவேசங்களைக் கண்டன. செ.சேனாதிராசாவின் நெறிப்படுத்தலில் **'பூதத்தம்பி'** பலஉள்ளூர், வெளியூர்அரங்கங்களை அலங்கரித்தது. இப்படைப்பு சங்கானைக் கலையகத்தால் நடாத்தப்பட்ட இலக்கிய நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று, கலையரசு சொர்ணலிங்கத்தால் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் சி.நாகராசா, சி.சோமசேகரம்பிள்ளை, ந.செல்வரத்தினம், செ.லிங்கராசா, செ.துரைராசா போன்ற கலைஞர்கள் நடித்துத் தமது திறமைகளை நிலைநாட்டியுள்ளனர். இவர்களின் நடிப்பும், உடை, ஒப்பனை, காட்சியமைப்பு, பாவனைப் பொருட்களின் சிறப்பும், கலாநிதி.சி.மகேந்திரன் (விரிவுரையாளர்), திருவாளர் மரியாம்பிள்ளை போன்றோரின்பின்னணிஇசையும்மேலும்மெருகு சேர்த்து இன்றுவரை ரசிகர் மனதை விட்டு விலகாது நிலைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. 1978 இல் **'சிறுத்தொண்டன்'** மீள் மேடையேற்றப்பட்ட போது, குழந்தையை உரலில் இடிக்கும் காட்சியில் மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோது அரங்கிற்குக் கொண்டுவரப்பட்டமையும், 1989 இல் **'பூதத்தம்பி'** நாடக மீள் மேடையேற்றத்திற்காக பதினொரு வயதில் பங்கேற்றமையும் இந்நாடக வரலாற்றில் அடியேனும் இடம்பெற்றுள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

விக்காவில் பகுதியில் த.உத்தமசீலனின் **'பவளக்கொடி'**, **'சத்தியவான் சாவித்திரி'**, **'கோவலன் கண்ணகி'**, **'காத்தவராயன்'** போன்ற நாடகங்கள் தென்னிந்தியத் திரைப்படப் பாணியில் அமைந்திருந்த போதிலும், ஜனரஞ்சகமாக இருந்தன. இந் நெறியாளர் பாண்டவாஸ் கணபதிப்பிள்ளையுடன் இணைந்து நடித்த **'கௌரியின் திருவிளையாடல்'** அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது. **'விநாயகர் கலையகம்'** என்ற பெயரில் ஆறுமுகம் விநாயகமூர்த்தியின் படைப்புக்களாக 1973 இல் **'பண்டாரவன்னியன்'**, 1974 இல் **'சிறுத்தொண்டன்'**, 1975 இல் 'பாஞ்சாலி சபதம்', 1976 இல் **'வீரேந்திரன்'**, 1977 இல் **'வணங்காமுடி'** போன்ற நாடகங்கள் நெறியாளர் மற்றும் செ.லிங்கராசா, பொ.தருமலிங்கம், ஆ.இராசலிங்கம், வ.நமசிவாயம், த.ஜெகராசா போன்றோரின் நடிப்பில் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன.

1994 இல் இடப்பெயர்வின் பின்னர் கலாபூக்ஷணம். மூ.தேவதாஸ் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுப்புண்ணுற்ற போராளிகளின் அபிவிருத்தி நிதிக்காக சுழிபுரம், யாழ்ப்பாணம், அரா-லி, வடமராட்சி ஆகிய நான்கு இடங்களிலும் **'பூதத்தம்பி'** நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. 2004 இல் மீண்டும் வெடியரசனும், 2011 இல் 'நஞ்சப்பவதம்' என்பனவும் படைக்கப்பட்டுள்ளன.

சமூக நாடகங்களின் தாக்கங்களை எடுத்துநோக்கின், 1950 களில் மாதடைக் கலைஞர்களால் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது இலங்கையில் பிரித்தானிய இராணுவ ஆக்கிரமிப்பைச் சித்தரிப்பதான நாடகமொன்று மேடையேற்றப்பட்டுள்ளது. நீலங்காட்டுப் பகுதியில் வெள்ளையருக்கும், காப்பிலிகளுக்கும் சேவகம் செய்வதற்கு ஊர் மக்கள் செல்லும் போது ஏற்பட்ட அவஸ்தைகளை இது நகைச்சுவையுடன் எடுத்தியம்பியுள்ளது.

**"நீலங்காட்டு வேலை நிச்சயமில்லாச் சாலை நினைக்கப் படைக்கச் செய்துமுடிக்கும் நீலங்காட்டு வேலை....."**

என்ற வரிகள் இவ்வாறு குறிப்பிடுகின்றன. 1960 களில் 'சோலையான் நாடகமன்றம்' என்ற பெயரில் திருவாளர் மிருதங்க வைத்திலிங்கத்தின் நெறிப்படுத்தலிலும், நடிப்பிலும் **'மணியோசை'** ஆற்றுகை செய்யப்பட்டது. இவருடன் மணியம், அருணாசலம், சற்குணம் போன்றோர் இணைந்து நடித்துள்ளனர். 1981 இல் **'பாதைமா-றிய பைரவன்'**, 1986 இல் **'திருந்திய உள்ளங்கள்'** போன்ற படைப்புக்கள் K.C.கந்தசாமி(C.T.B), செ.பாலசிங்கம் போன்ற கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. கோவளம் இளைஞர் மன்றத்தால் 1981 இல் **'வரவர மாமியார்'** சர்வானந்தாவின் தயாரிப்பிலும், கந்தசாமி, சோதிலிங்கம், சிவபாலன், இந்திரன் போன்றோரின் நடிப்பிலும் ஆற்றுகை செய்யப்பட்டது. 1982 இல் தோப்புக்காட்டுக் கலைஞர்களால் **'கைதி'**, 1989 களில் காரை.மேற்குப்பகுதிக் கலைஞர்களால் **'எதிர்நீச்சல்'**, 1991 இல் பத்மானந்தனின் நெறிப்படுத்தலில் சி.நாகராசா, மூ.தேவதாஸ், சி.சோமசேகரம்பிள்ளை போன்றோரால் 'எங்கள் வாழ்வு' போன்ற நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. **'எங்கள் வாழ்வு'** தாயக மண்மீட்பினைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளது. 1988 இல் அல்வின் வீதியைச் சேர்ந்த கலைஞர்களால் நடிக்கப்பட்ட நகைச்சுவை நாடகமும் இரசிகர்கள் மனதைத் தொட்டுள்ளது. பாலாவோடையில் இசையா-சிரியர் கந்தையாவின் நெறிப்படுத்தலில் மதுவிலக்கல் சம்பந்தமான நவீன கூத்துருவ நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

நாடகக் கலைஞர்களை உருவாக்கும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் பணியில் பாடசாலைகள் பெரும் பங்கு வகித்துள்ளன. விழாக்கள், போட்டிகளுக்கு நாடகங்களைத் தயாரிப்பதில் பாடசாலை ஆசிரியர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. 1952 களில் யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயத்தில் **'மகாபாரதம்'** கந்தையா தருமலிங்கம் உள்ளிட்ட மாணவர்களால் நடிக்கப்பட்டுள்ளமையும், 1993 இல் பண்டிதர் சு.வேலாயுதபிள்ளையின் நெறிப்படுத்தலில் **'வாதவூரர்'**, த.பரஞ்சோதி, ஜெ.ஜெயலன், யசோதரன் போன்ற மாணவர்களால் நடிக்கப்பட்டு மாவட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கன. அத்துடன், வாரிவளவு நல்லியக்கசபை திரு.ச.பத்மநாதன் அவர்களாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களபூமி முத்தமிழ்ப் பேரவை திரு.திருமதி நடராசா இராசமலர் அவர்களாலும் சிவகாமி அம்மன் கோயிலடியில் இலவசக்கல்வி நிலையம்ந.கிருக்ஷ்ணபவன் அவர்களாலும் நிறுவப்பட்டுமாணவர்களூடாக இக்கலை வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

நாடகக் கலையைப் பாடநெறியாகப் போதிக்கும் ஆசிரியர்களின் பணிகளையும், நூல்கள், கட்டுரைகள் பற்றியும் நோக்குமிடத்து, யாழ்/காரைநகர் ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராகவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தலவாக்கலை (கொட்டகலை) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், அதிபராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'நாடகமும் அரங்கியலும்' பாட விரிவுரையாளராகவும் சேவையாற்றிய கலாநிதி. காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் பதினைந்திற்கும் மேற்பட்ட கூத்துக்கள், பல சமூக, இதிகாச, சிறுவர் நாடகங்கள் என்பவற்றை எழுதியும், நடித்துமுள்ளார். இவர் வடஇலங்கை நாட்டார் அரங்கியல், சிங்களப் பாரம்பரிய அரங்கு, மலையகக் கூத்துக்கள் பற்றிய ஆய்வு மற்றும் '**தேனாறு**'(1968), '**சங்கிலியம்**'(1970), '**ஈழத்து இசை நாடக வரலாறு**'(1990), '**நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்**'(1996) ஆகிய சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற படைப்புக்களையும் தந்துள்ளார்.

இப் பணியினைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கும் இரு தேசிய விருதுகளைப் பெற்றுள்ள திரு.க.பேரின்பகுமார், பத்துத் தேசியவிருதுகளைப்பெற்றுள்ளதிருமதி.ஸ்ரீலேகா பேரின்பகுமார் ஆகியோரது நாடகப் பணிகள் குறிப்பிடத்தக்கன. ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் இலங்கைக் கலாசாரத் திணைக்கள விருதுகளைப் பெற்ற '**வேப்பங்குச்சி**', '**கிண்கிணிநாதங்கள்**' என்பன கலாசார அமைச்சு, கல்வி அமைச்சின் தேசிய நூலாக்கல் அபிவிருத்திச்சபை என்பவற்றால் பாடசாலைக்கான நூலகப் புத்தகங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் '**கிண்கிணி நாதங்கள்**' சிறந்த சிறுவர் இலக்கிய விருது பெற்றுள்ளதோடு, பத்து நாடகங்களைக் கொண்ட '**கிணற்றங்கரை**' என்ற நூலும் பெருமைக்குரியதாகின்றது. இவர்களுடன் திருமதி.விஜயலட்சுமி ரமணன் உள்ளிட்ட நாடக ஆசிரியர்களின் சேவைகளும் குறிப்பிடத்தக்கன.

காரைநகர்ப் பிரதேச நாடக வளர்ச்சி தொடர்பாக ஆதாரபூர்வமாகவும், செவிவழிச் செய்திகளூடாகவும், மூத்தோரின் கருத்துக்களின் படியும் மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் திரட்டி வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆராயப்படுமிடத்து, இக் கலையின் தொன்மையினையும், இன்னும் பல தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரைப் பெருமையுற வைத்த மூதறிஞர் சிவஸ்ரீ. கு. வைத்தீசுவரக்குருக்கள்

பண்டிதர். மு.சு. வேலாயுதபிள்ளை
தலைவர்,
காரைநகர் மணிவாசகர் சபை.

சைவமும் தமிழும் வளர்த்த ஆறுமுகநாவலரால் நல்லூரும் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் தெல்லிப்பழையும் சீரும் சிறப்பும் பெறுவதுபோல் குருக்கள் ஐயா அவர்களால் காரைநகர் பெருமை பெறுகின்றது. கலைமகளும் திருமகளும் ஒன்றித்து வாழும் காரைநகரில் ஈழத்துச்சிதம்பரச் சூழலில் அந்தண குலத்தில் 1916.09.22 இல் பிறந்தவரே வைத்தீசுவரக்குருக்களாவார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற கூற்றுக்கிணங்க குருக்கள் அவர்களின் தந்தையாரான கணபதீசுவரக்குருக்களும் ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானத்தில் பிரதம சிவாச்சாரியாராக அறுபத்து நான்கு ஆண்டுகள் ( 1888-1967) சுந்தரேஸ்வரப்பெருமானின் திருமேனியை முப்போதும் தீண்டி உயிராக, உணர்வாக பூசை புரிந்தவராவர். அகில இலங்கை சைவ சமய குருமார் சபையின் தலைவராக பதினான்கு ஆண்டுகள் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிவத்திரு குருக்களின் தாயார் சிவயோக சுந்தராம்பாள் ஆவார். இவர் தமிழறிஞராகவும் பத்திரிகையாசிரியராகவும் விளங்கிய சிவஸ்ரீ.கா. சிவசிதம்பர ஐயரின் மகளும் திண்ணபுர அந்தாதி பாடிய கார்த்திகேயப்புலவரின் பேர்த்தியுமாவார்.

இவர் தமது ஆரம்பக்கல்வியை தனது தந்தையார் கணபதீசுவரக்குருக்கள், பண்டிதர் ச. பஞ்சாட்சரக்குருக்கள், பண்டிதர் சுப்பிரமணியதேசிகர். ஆகியோரிடமும் சமஸ்கிருதக் கல்வியை சுன்னாகம் பிராசீன பாடசாலையிலும் கற்றார். மேலும் பரமேசுவர பண்டித ஆசிரிய பயிற்சிக்கல்லூரியில் கற்று பண்டித பரீட்சையிலும், ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் கற்று ஆசிரியர் தகுதிநிலையை அடைந்தார். 1940 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி பல பாடசாலைகளில் கற்பித்து தலைமை ஆசிரியராகவும் பதவி உயர்ந்து பணியாற்றி 1970 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

இவர் ஈழத்துச்சிதம்பர ஆலயத்தை மையப்படுத்தித் தமது பணியை ஆரம்பித்தார். இவ்வாலயத்தை உயிரினும் மேலாகக்கருதி அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த பெருமகனார். காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவிலை ஊரறிய உலகறியச்செய்த பெருமை இவரைச்சாரும். பூசைகள், வழிபாடுகள், நடராஜப்பெருமானின் திருவுருவம் ஆகியன தமிழகத்தில் இருக்கும் சிதம்பரக் கோயிலோடு ஒத்து விளங்கிய காாரணத்தால் ஈழ்த்துச்சிதம்பரம் என இக்கோயிலை பெருமையோடு அழைத்த சிறப்பு இவரைச் சார்ந்த தாகும். 1960 ஆம் ஆண்டு "ஈழத்துச்சிதம்பரம்" எனும் பெயரில் தந்தையார் கணபதீசுவரக்குருக்களினால் எழுதப்பட்ட நூலை பதிப்பித்து வெளியீடு செய்தார். இந்நூல் மூலமாக ஈழத்துச்சிதம்பரம் என்னும் பெயர் பிரபலமடையத் தொடங்கியது. 1971 ஆம் ஆண்டு "ஈழத்துச்சிதம்பரபுராணம்" என்னும் நூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாலியூர்ப்புலவர் சோ.இளமுருகனார். இயற்ற அவரின் துணைவியார் பண்டிதை பரமேஸ்வரி அவர்கள் உரை எழுத ஐயா அவர்கள் பதிப்புச் செய்து வெளியிட்டார். இதனால் ஈழத்துச்சிதம்பரம் என்னும் பெயர் மேலும் மிளிர்ந்தது. ஈழநாட்டில் நீண்டகாலமாக தலபுராண வெளியீடுகள் அருகியிருந்த காலப்பகுதியில் ஐயாவின் முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்கதொன்றாகும். மேலும் ஐயா அவர்கள் 2012 ஆம் ஆண்டு அவ் ஆலயத்தில் வீற்றிருக்கும் ஐயனாருக்கு ஆண்டிகேணி ஐயனார் புராணம் என்னும் தலபுராணத்தை வட்டுக்கோட்டை பண்டிதமணி க.மயில்வாகனனார் மூலம் இயற்றுவித்து சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களால் உரைசெய்து பதிப்பித்து வெளியீடு செய்து வைத்தார். மேலும் பல்லாண்டு காலமாக மார்கழித் திருவாதிரை தேர் திருவிழாவின்போது இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நேரடி அஞ்சல் சேவையை ஒழுங்குபடுத்தி ஈழத்துச்சிதம்பரக் கூத்தனின் பெருமையை உலகறியச் செய்தார்.

திருவாசகத்தினால் ஈர்க்கப்பட்ட ஐயா அவர்கள் இருபத்துநான்கு வயது இளைஞனாக இருந்த வேளையில் யோகர்சுவாமிகளின் ஆசீர்வாதம் பெற்று 01.01.1940 ஆம் ஆண்டு மணிவாசகர் சபையை ஆரம்பித்தர். அன்று தொட்டு ஈழத்துச்சிதம்பர ஆலய வசந்தமண்பத்தில் ஆண்டுதோறும் மணிவாசகர் விழா நடந்து வருகின்றது. முதலாவது மணிவாசகர் விழாவில் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ சிகணேசையர் நந்திக்கொடி ஏற்றித் தொடக்கி வைத்தார். அப்போது அமைச்சராக இருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்த சிறப்புச் செய்த பெருமை குருக்கள் ஐயா அவர்களைச சாரும். ஆண்டு தோறும் விழாக்கள் மூன்று அல்லது நான்கு நாட்களில் நடைபெறும் போது ஈழத்திலும், தமிழகத்திலும் தலைசிறந்த பேச்சாளர்கள் விழாவை அணி செய்வார்கள்.

ஈழநாட்டிலிருந்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் பொன் முத்துக்குமாரன், வித்துவான் கா.கி. நடராசன் க.சிவராமலிங்கம், வித்துவான் மு.சபாரத்தினம், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், த.குமாரசாமிப்புலவர், அருட்கவி. சி.வினாசித்தம்பி, செஞ்சொற் செம்மல் விநாயகமூர்த்தி, வித்துவான் சொக்கலிங்கம், அருள்மொழி வசந்தா வைத்தியநாதன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், பிரம்மஸ்ரீ. ந.வீரமணிஐயர், கலாநிதி சண்முகதாஸ், கலாநிதி.ப.கோபாலகிருஷ்ணன், தவத்திரு.நா.முத்தையா,சைவப்புலவர் செல்லத்துரை, திரு.கு.பாலசண்முகம், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், தமிழருவி சிவகுமாரன் ஆகிய சிறப்புச் சொற்பொழிவாளர்கள் சபையை அலங்கரிப்பார்கள்.

தமிழகத்திலிருந்து திருமுருக கிருபானந்தவாரியார்,செஞ்சொற்கொண்டல் சொ.சிங்காரவேலன்,வச்சிரவேலுமுதலியார், மகாவித்துவான்ச.தண்டவாணிதேசிகர்,தொ. மு பாஸ் கரத் தொண் டமான் , வித் துவான் ஐ.ஜெகநாதன், வித்துவான் வி.குரசாமித்தேசிகர், வித்துவான் இரா.செல்வக்கணபதி, அருமை ஆதீனப்புலவர் கு.சுந்தரமூத்தி, வித்துவான் லீலா, தேசமங்கயற்கரசி, சுந்தரமூத்தி தம்பிரான் சுவாமிகள், பேராசிரியர் சிவ. அ.தியாகராசா, புலவர் மணி. ச. அருணசடேசன் முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞப்பெருமக்கள் வருகை தந்து விழாவை சிறப்பித்துள்ளனர். இதனை ஈழத்துச்சிதம்பர புராணத்தில்

**மற்றிந்த மாணிக்க வாசகனார்**
**மன்றம்பின் நான்கு நாளும்**
**உற்ற விழா நனி அயரும் ஓங்குதிருக்**
**கோவையினை யுலக மாந்தர்**
**கற்றறிந்து கடைத்தேறும் வாசகத்தை**
**வரலாற்றைக் கருத்தாய்க் கற்ற**
**குற்றமில்லா சிவத்தார் ஆற்றமுரைத்து**
**செவிச்செல்வம் குறையாதம்மா**
**தென்னாட்டில் ஈழத்தின் நிகழ்ந்துவருஞ்**
**சிவஞானச் செல்வரெல்லாம்**
**மன்றுமாசின் மணிவசந்த மண்டபத்து**
**மணியரங்கு மலரவேறிக்**
**கன்னலொடு முக்கனிசெந் தேன்கலந்த**
**நறுங்குழையல் கலைவநாண**
**நன்னார்பொழி மழையன்பர் செவிததும்ப**
**பேரின்ப நல்குமன்றே**

புலவர்மணி சோ.இளமுருகனார் குறிபபிட்டுள்ளார்.

விழாச்செய்திகளை பத்திரிகைகள், வானொலிகள் மூலம் பிரச்சாரப்படுத்துவதில் ஐயா அவர்கள் வல்லவர். இதனால் யாழ் குடாநாட்டின் பலபாகத்திலிருந்தும் ஈழத்துச்சிதம்பரத்தை நாடி மக்கள் திரள்வர். மக்களுக்கு பக்தி வித்தை விதைத்து உரமூட்டி நல்வழிப்படுத்தும் செயலில் ஈடுபட்டார். மணிவாசகர் சபைமூலம் ஈழத்துச்சிதம்பரம் உயர்பெருமையடைந்துவருகின்றது.

மேலும் மணிவாசக சபையின் வெள்ளிவிழா மலர் (1979) பொன்விழா மலர் (1993) திருவாதிரைமலர்கள் ஆகியவற்றின்மலராசிரியராகவும்,2013இல் வியாவில் ஐயனார் கோவிலில் வெளியீடு செய்த சைவக்களஞ்சியம் என்னும் மலருக்கு பிரதம ஆசிரியராக (97 வது அகவையில்) விளங்கியுள்ளார்.

காரை மாதாவின் கலங்கரை விளக்காக விளங்கிய குருக்கள் ஐயா அவர்கள் ஈழத்துச்சிதம்பரத்தில் இரு இராஜகோபுரங்கள் அமைக்க அறிவுரைகள், ஆதாரங்கள் வழங்கி பின்னின்று ஊக்குவித்து நெறிப்படுத்தியவராவர்.

தமிழ்மாணவர்களின் தமிழ்மொழி அறிவை விருத்தி செய்யவும் 1960ஆம் ஆண்டு தமிழ்வளர்ச்சிக்கழகம் ஸ்தாபித்து அதன் செயலாளராக பல ஆண்டுகள் கடமை புரிந்தார். சிதைவடைந்து செல்லும் நூல்களைப் பதிப்பித்தும் உரையில்லாத நூல்களுக்கு உரைஎழுதுவித்தும்புதியநூல்களை ஆக்குவித்தும் தாமும் ஆக்கியும் பணிசெய்தார். மாணவர்களுக்கு பாடநூல் சம்பந்தமான உசாநூல்கள் பலவற்றை வெளியிட்டார், இவ்வாறு 26 நூல்களைஆக்குவித்தபெருமை இவரைச்சாரும்.

காரைநகரில் இயங்கிவரும் சைவம–காசபையின் பொன்விழா மலராசிரியராக பொறுப்பேற்று சிறந்த மலரினை 1963 இல் வெளியீடு செய்தார். உலகப் பெருமை மிக்க ஜவகர்லால் நேரு, மகாத்மாகாந்தி, விவேகானந்தர்,கி.வா.ஜெகநாதன்போன்றவர்கள் காரைநகருக்கு வருகை தந்து இச் சபையில் கால் பதிப்பதற்க்கு பின்புலத்தில் நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் குருக்கள் ஐயா அவர்கள்.

தன் தந்தையார் கணபதீசுவரக்குருக்கள் ஞாபகார்த்தமாக – அறிவாலயமாக விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய பெரிய நூலகம் வியாவிலில் அமைப்பதற்கு ஐயா அவர்கள் தன் வாழ்க்கையில் வாங்கிப்படித்துச் சுவைத்துச் சேகரித்த ஐயாயிரத்திற்கு மேற்பட்ட நூல்களையும் பல ஏட்டுப்பிரதிகளையும் கையளித்தபெருமகனாவார்.

தமிழ் அறிஞர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் புதிய ஆக்கங்களை வெளியீடு செய்யும் போதோ அவர்கள் பட்டங்கள் விருதுகளைப் பெறும்போதோ அவர்களைக் கௌரவிப்பதில் முன்னின்று உழைப்பவர் குருக்கள் ஐயா அவர்கள். காரைநகர் பண்டிதமணி அருளம்பலவாணர் மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு ஆய்வுரை எழுதி வெளியீடு செய்தபோதும் பதிற்றுப்பத்து என்னும் சங்ககால நூலுக்கு சிறந்த உரை எழுதியமைக்காக சங்கநூற்ச்செல்வர் என்னும் பட்டம் வழங்கியபோது அருளம்பலவாணருக்கு நாடறிய விழா எடுத்து சிறப்புச் செய்தவராவர். ஆண்டுகள் பல சொற்பொழிவாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு "சிவத்தமிழ்ச்செல்வி" என்னும் பட்டமளித்து கௌரவித்தார்.

கம்பன் கழகத்தினால் 1995இல் மூதறிஞர் எனும்பட்டமும்யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தால் 2002 இல் தத்துவக்கலாநிதி (Dr of Philosphy) பட்டமும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சிவாகம கிரியா பூஷணம் என்னும் பட்டமும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் (2008 இல்) கலைஞானகேசரி என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டதால் காரைமாதா சான்றோன் என்னும் பெயர் கேட்டுப் பூரிப்படைகின்றாள்.

சைவப்பாரம்பரியத்திற்கும் சிவாச்சாரிய பாரம்பரியத்திற்கும் நல்லதோர் இலக்கண புருஷராகத்திகழ்ந்த குருக்கள் ஐயா அவர்கள் எளிமையான தோற்றமும் தம் செயலில் பெருமையற்றவராகவும் பாராட்டு, கௌரவம் எதனையும் எதிர்பார்க்கமலும் எடுத்த கருமத்தை தொடுத்து முடித்த வேளையிலும் தான் செய்தேன் என்று தம்பட்டம் அடிக்கும் செயலும் இவரிடத்து கிஞ்சித்தும் இருக்கவில்லை. இதனாலன்றோ பாமரமக்கள் சிலர் ஐயா என்ன செய்தார் என்ற கேள்விக்கணையை தொடுத்து நிற்கின்றனர்.

**"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்.**
**உள்ளத்துள் எல்லாம் உளன்"**

எனும் பெய்யா மொழி வாக்கிற்கிணங்க அவர் இன்று எல்லோர் உள்ளத்திலும் வாழ்ந்து வருகின்றார்

ஐயா அவர்கள்

**பழுத்தபழம் சிவப்பழம் தமிழ்ப்பழம் நம் பண்பாட்டின்**
**பயன்விளைந்த கனிந்தபழம் காவிய**
**நற்சோலையிலே**
**விளைந்தபழம் வியனுலகம் சுவைக்கும்பழம்**
**வியக்கும்பழம்**
**வேறெங்கும் காணாத வித்த கநற்பொற் பழமாம்**

இத்தகைய பழத்திற்கு நூற்றாண்டு அகவை விழாவை இன்னும் சில மாதங்களில் மணிவாசகர்சபை நடாத்த இருந்த வேளையில் 24.05.2015 இல் **"போவோம் காலம் வந்தது காண் பொய்விட்டு உடையான் கழல்புகவே"** என்று மணிவாசகப்பெருந்தகை கூறியது போல இவரும் புறப்பட்டு வெளிக்கதிரையில் உட்கார்ந்து யோகர்சுவாமிகள் மடத்திற்குச் செல்லப்போகின்றேன் என பிள்ளைகளுடன் உரையாடி திருவாசகம் பாடும்படி கேட்டு பால் வாங்கிக்குடித்து இறையடி சேர்ந்த மகான்.

**"வாழ்க அவர் நாமம்**
**வளர்க அவர் நற்செயல்கள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரை மண்ணின் பண்பாட்டு - கலாசார விழுமியங்கள் அன்றும் இன்றும் - ஒரு கண்ணோட்டம்

கலாபூஷணம் பண்டிதை
செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்

காரை மண் வளமான மண் கல்வியாலும், செல்வத்தாலும், பணபாட்டாலும் புகழ் பூத்த மண். தனக்கெனத் தனித்துவமான கலை,கலாசார விழுமியங்களையும் பாராம்பரிய பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுட மண் பழமையும் பெருமையும் மிக்க நீண்ட வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட மண்

நம்மவர் மண்ணின் பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் தம் வாக்காலும், நோக்காலும், ஸ்பரிசத்தாலும் பேணப் பாதுகாத்தனர். அவற்றைத் தம் உயிரென மதித்தனர்.

காலத்தின் தேவையறிந்து சமூகம் என்ற கட்டமைப்பின் ஊடாக தம் முழு ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிப்படுத்தி கலாசார செயற்பாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தனர்.

தொன்மை மிக்க நீண்ட வரலாற்றுப் பயணத்தில் எமது முன்னோர் பதித்த காலடிச் சுவடுகள் ஒவ்வொறும் கனமானவை காத்திரமானவை

வாழ்வியல் முறைகள், விழாக்கள், பண்டிகைகள் கொண்டாட்டங்கள் என சமூகத்தில் இடம் பெறும் ஒவ்வொரு நிகழ்விலும் தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டு வந்த பாரம்பரியத்தைக் காப்பாற்றுவதில் மிகுந்த அக்கறை செலுத்தினர். ஒவ்வொரு நிகழ்வையும் உன்னிப்பாகக் கவனித்தனர். "யோசிக்கவும் வேண்டும் செயலில் இறங்கவும் வேண்டும். இரண்டு எதிர் எதிரான குதிரைகளை ஒரே வண்டியில் பூட்டும் அதிசய ஆற்றல் இருந்தால் தான் வாழ்க்கை வசப்படும்" என்றார் சுகி.சிவம்

இழப்புக்கள் இரண்டு வகைப்படும் ஒன்று பொருள்கள் நம்மை விட்டு விடுதல்" அப்பொழுது நாம் அதற்காக அழுது கொண்டிருப்போம் இன்னொன்று "நாமே பொருள்களை விட்டு விடுவோம் " அப்பொழுது நாம் பொருள்களை விட்டு விடுவோம் " அப்பொழுது நாம் கவலைப்பட மாட்டோம்" மகிழ்ச்சியாக இருப்போம். எமது இன்றைய நிலை இதுவே ஒரு சாரார் எல்லாவற்றையும் தாமோ தொலைத்து விட்டார்கள் இன்னொரு சாரார் தொலைந்ததை எண்ணி வருந்துகிறார்கள்.

இடப்பெயர்வால் மக்கள் சமநிலை-யை இழந்து விட்டனர். பின்னுக்குத்தள்ளப்பட்டு விட்டனர்.வாழ்க்கையை விட்டே தள்ளி வைக்கப்பட்டு விட்டனர். பண்பாடு சிதைந்து மரபு மீறப்படுகிறது.

சமூக மாற்றங்களால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்கத் தவறி விட்டனர். நமக்கு வரும் நன்மையும் தீமையும் அதன் விளைவாக நாம் பெறும் இன்பமும் துன்பமும் நாம் தேடிய தேட்டங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொட்டு இன்று வரை மாற்றங்களையே வாழ்வாகப் பெற்றிருக்கின்றோம். எனினும் மனிதனாகப் பிறந்த குறிக்கோளை உணர்ந்து எமது பாணபாட்டைச் சிதைக்காமல் வாழ்வதே எமது தலையாய கடமை என்பதை மறந்து விட்டோம்

தமிழ் மணமும் சிவமணமும் கமழ, பூமகளும் நாமகளும் போற்றும் வண்ணம் எம்முன்னோர் வாழ்ந்த இப் பூமியில் எல்லாமே சீர்குலைந்திருப்பதாகக் கருதப்படுகிறது சமூகக் குறைபாடுகளை நீக்கும் பணியில் மக்களோ, பெற்றோரோ, சமூக நிறுவனங்களோ ஆலயங்களோ முயன்றதாகவோ திருப்திகரமாகச் செயற்பட்டதாகவோ தெரியவில்லை

பலன் கண்டால் அமோகமான ஆதரவும் வரவேற்பும் கிட்டும் சமய நம்பிக்கை வளரும் இன்று நாம் எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்ள வழியும் கிட்டும்.

நம்முன்னோர் மத்தியில் அறிவுப் பரிவர்த்தனை, அன்புப் பரிவர்த்தனை, பண்பாட்டுப் பரிவர்த்தனை என்பன இருந்தது. அதனால் அவர்கள் வாழ்க்கையைத் தம் வசப்படுத்தினர்.வ் விழிக்க வேண்டிய நேரத்தில் சும்மா இருந்து விட்டு பிரச்சினை பேயாய் வந்ததும் ஒரே படியாகப் பதறக் கூடாது மனதை சிதற விடக் கூடாது எதிலும் நிதானம் தேவை. சில வகைப் பழக்கவழக்கங்கள் மறுபரிசீலனைக்கு உரியவை மாற்றப்பட வேண்டியவை ஆனால் மாற்றப்பட முடியாமலும் போய் விடலாம். ஏனெனில் பழக்கங்கள் பலமானவை திட்டமிட்டபடி எதிர்பார்த்தபடி எல்லாமே நடக்கும் என்று எண்ணக் கூடாது நடக்காமல் போகவும் வாய்ப்புண்டு என்றதெளிவுநமக்கிருந்தால்போதும்

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் போல் நமது வாழ்விலும் இரண்டு பக்கங்கள் உண்டு ஒன்று தொண்ணூறுக்கு முந்தியவை மற்றையது தொண்ணூறுக்குப் பிந்தியவை . மக்கள் வாழ்வில் ஏற்பட்ட இடப்பெயர்வு அதனால் விளைந்த மாற்றங்களை விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி என்பன சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திப பற்பல விளைவுகளைச் சந்திக்க சிந்திக்க வைத்துள்ளன. என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. இடப்பெயர்வினால் இழந்த கலை, கலாசாரம் பண்பாடு சொத்துக்கள், கல்வி, வாழ்விடம் ஆகிய எல்லாவற்றையும் மீளவும் தேடுவது என்பது கேள்விக் குறியாகி விட்டது. எனினும் நாட்டு நிலைமை காரணமாக அழிவுற்றுச் சீரழிந்த எமது மிகப்பெரிய சொத்து மீட்டெடுக்க முடியாத சொத்து, எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஜீரணிக்க முடியாத ஒன்று எமது பாரம்பரியப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பகிரப்பட்டன நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று கூறும் வகையில் குடும்பங்கள் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின. கூடி வாழும் வாழ்க்கை, பிறர் நலம் பேணல் ஒற்றுமை என்பன குடும்பங்களில் மேலோங்கிக் காணப்பட்டன. எதையும் நாகரிகமாகச் சொல்லும் மரபு பேணப்பட்டது. உற்றார், உறவினர் ஒன்றிணைந்து ஒருவரது இன்பதுன்ப வாழ்வியல் சடங்குகளில் பங்குபற்றினர் தாம் வேறு அவர் வேறு என்று கருதாது தாமும் குடும்பத்தில் ஒருவன் என்ற உணர்வுடனும் உரிமையுடனும் நடந்து கொண்டனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பழக்கவழக்கம் இல்லை உண்மையான உள்ளன்புடன் பழகினர். எல்லோரும் ஒரே குடும்பமாக தாத்தா, பாட்டி, பொரியப்பா, பெரியம்மா, சித்தப்பா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி,மாமா, மாமி, அண்ணன், அண்ணி தம்பி, தங்கை, ஆச்சி, அப்பு என்ற உறவு முறை வைத்துக் கொண்டாடினர். ஒரவருக்கொருவர் அந்நியோன்மியமாக வாழ்ந்தனர். அதே நேரம் மரியாதை கலந்த பயமும் இருந்தது. நல்லதன் நலனையும், தீயதன் தீமையையும் கண்ணால் தெரிந்து கொண்டனர். ஆதனால் இளைய சமுதாயம் கட்டுக் கோப்புடன் இருந்தது பெற்றோரின் கண்காணிப்பிலும் அரவணைப்பிலும் இருக்கும் சிறுவர்கள் தவறு செய்வது மிக்க கடினம். காலத்துக்கேற்றசிந்தனைகளை வளர்த்துக் கொண்டாலுங் கூட விழாக்கள் பண்டிகைகளிலும் ஒழுக்கமும், சுகாதாரமும், ஆரோக்கியமும் பேணப்பட்டன.

இன்று உறவுகள் அலக்கலக்காகத் திக்குத் திசை மாறிச் சென்று விட்டனர், வயது முதிர்ந்தவர்களும் சிறியவர்களுமே தனித்து விடப்பட்டனர். அவர்களைக் கண்காணிப்பவர் யாரும் இல்லை மனம் போல வாழ்வு "தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிர சண்டன்" என்ற கதையாகி விட்டது

சமூகத்திற்குப் பயப்படுதல், செய்யத்தகாத செயல்களைச் செய்ய அஞ்சுதல், பழி பாவங்களிற்குப் பயப்படுதல் போன்ற எதுவும் இல்லை "இளங்கன்று பயம் அறியாது" என்பர். மதுபாவனை, போதைப் பாவனை போன்ற சமூகப் பிறழ்வு நடத்தைகள் பெருகிவிட்டன. "கருமத்தால்நாணுதல்நாணம்"என்றார்வள்ளுவர் அஞ்சவேண்டியதற்கு அஞ்சி, வாழும்வகையறிந்த வாழ்வதே உயர்ந்த உன்னதமான வாழ்வு ஆகும் "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்றார் வள்ளுவர் பண்புடையவர் சிலர் இழுருப்பதனாலேயே இன்றும் உலகம் நல்ல முறையில் இயங்கி வருகின்றது. பண்புடையவர்கள் சழகத்தால் மதிக்கப்பட்டார்கள்

இன்று பணபாட்டுக்குப் பதில் பணம் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. உறவினர்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணம் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் பெறும் பணம், சமுர்த்தி போன்ற நிறுவனங்கள் வழங்கும் பணம் மக்களைச் சோம்பேறிகளாக்கி அவர்களது பண்பாட்டையும் சீர்குலைத்து விட்டது.

பணத்தையும், செல்வாக்கையும் கொண்டு எதனையும் பெற்றுவிடலாம் என்ற மனப்பாங்கு வளர்ச்சியடைந்து விட்டது, வீடு,குடும்பம், மனைவி மக்கள் உற்றார் உறவினர் என்ற கட்டுக்கோப்பு சிதறிவிட்டது. இன்று அவசர யுகம் கணவன் மனைவி ஆகிய இருவரும் வேலைக்குச் செல்கிறார்கள். எதனையும் நின்று நிதானித்துச் சீர்தூக்கிப் பார்க்கவோ, சிந்திக்கவோ கால அவகாசம் இல்லை ஒய்வு ஒழிச்சில் இன்றி பம்பரமாகச் சுழலும் வாழ்க்கை.

பணம், அந்தஸ்து, செல்வாக்கு இவையே வாழ்வின் குறிக்கோள் பிள்ளைகளின் ஒழுக்க வளர்ச்சியிலோ நன்னடத்தையிலோ பெற்றோர் கவனம் செலுத்துவது இல்லை பிள்ளைகளிற்கு வேண்டிய வாழ்கைக வசதிகளை மட்டும் வழங்கி விட்டால் போதுமா? நல்லொழுக்கம், குடும்ப கௌரவம் ஆரோக்கிய வாழ்வு ஆகிய இவற்றைப் பணத்தினால் பெற்றுக் கொள்ள முடியுமா? சில தியாகங்களைச் செய்ய முன்வர வேண்டும்

**"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்"**

எனவே பிள்ளைகளிற்காகத் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகதுக்கங்களைத் தியாகம் செய்தல் வேண்டும் பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

குடும்பம் திருந்தினால் சமூகம் திருந்தும் நாட்டில் சாந்தியும் சமாதா-னமும், நிம்மதியும், மகிழ்ச்சியும் நிலவும்

மனஅடக்கம்இன்மையே

இன்மையே இன்பதுன் பங்களுக்கு எல்லாம் காரணம் அடுத்தவரைப் பின்பற்றி வாழவேண்டும் என்ற விருப்பம் நம்மை நாமே கட்டுப்படுத்தத் தவறி விட்டோம்

உள்ளத்தை ஆரோக்கியமாகவும், தெளிவாகவும் வைத்திருப்பது அவசியம் குளத்தில் சேறு பாசி படிந்து காணப்பட்டால் நீர் சுத்தமாகவும் தெளிவாகவும் இருக்கமாட்டாது.

மனதில் அழுக்குகள் மண்டிக் கிஜடைக்கும் போது மனிதன் தனது மனதை முன்னே விட்டுத் தான் பின் செல்கின்றான் மனதிற்குக் கை கட்டிச் சேவகம் செய்கின்றான் தன் நிலையையும் உரிமையையும், இயல்பையும் இழக்கின்றான்.

சமூகத்தோடு ஒட்டாமலும் முரண்பாட்டுடனும் பொருத்தப்பாடு இன்றியும் வாழ்கின்றான் இன்றைய எமது நாட்டின் நிலை இதுவே மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பயனில்லை

கோள்விகளே பதில்களாக பதில்களே கேள்விகளாகியும் விட்டன. இருண்ட வாம்வில் இருபது வருடங்கள் ஓடி விட்டன.

மனித தேவைகளின் அதிகரிப்பு அவற்றை நிறைவேற்றக் கையாளும் வழி-முறைகள், பண்பாட்டை கலாசாரத்தை தொலை தூரத்துக்குப் புறந்தள்ளி விட்டன.

சாதனை மேல் சாதனை படைத்து வரும் உலகம் சோதனை-களையும் சந்திக்கின்றது மகிழ்ச்சியை மட்டுமன்றி கவலையையும் சுமக்கின்றது.

குறைகளைக்கூறிக்கொண்டிருப்பதைவிட பெற்றோரின் அன்புக்காக அரவணைப்பிற்காக கணிப்புக்காக, பாதுகாப்பிற்காக, வழிகாட்டலுக்காக ஏங்கும் குழந்தைகள் எத்தனை? குடும்ப உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு விட்டன. கணவன், மனைவி ஆகிய இருவரும் தனித்தனியாக வேறு வேறு வாழ்க்கைகளை அமைத்துக் கொண்டு விட்டனர். உண்மையான சுகம் எது என்பதை அறியத் தவறுகின்றனர். பிள்ளைகள் தனிமைப்படுதப்படும் போது ஏற்படும் விரக்தி நிலை உணர்வு நெறி பிறழ்விற்குக் காரணமாக அமைகின்றது.

பெற்றோர் தான் சரியான வழி காட்டிகள். அவர்கள் கண் காட்டும் வழியில் பிள்ளைகளும் செல்லத் தலைப்பட்டு விட்டனர். ஓட்டு மொத்தமாக அனைவருமே இன்றைய சமுதாயச் சீரழிவிற்குப் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு உடையவர்கள் எனவே பாரதுமான விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

நம் முன்னோர் சமய நூல்களில் இடம் பெற்ற புராண இதிகாசக் கதைகள், கருத்துக்கள், நீதிகள், நெறி முறைகள் என்பவற்றை இளைய தலை முறையினருக்கு எடுத்துக் கூறி அவர்களை நல்வழிப்படுத்தி வரும் மரபு இருந்தது பெற்றோர் தாமும் அவ்வழியில் நடந்து வழி காட்டினர் இன்று எல்லாமே அருகியும் மறைந்தும் போய் விட்டன.

பெற்றோர் பிள்ளைகளிற்குப் பயப்படுகின்றனர் அவர்கள் சொற்படி நடக்கின்றனர். அதுவே நாகரிகம் என்று கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் ஒரு புற வளர்ச்சி அது என்றும் நிலைத்து நிற்க மாட்டாதது பண்பாடு என்பது நிலைத்து நிற்க்க கூடியது.

**"அஞ்சுவது அஞ்சாமை பேதமை"**

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய முடியுமா? பேற்றோரின் வழிகாட்டல் இன்றி இளைஞர்கள் தடுமாறுகின்றனர் பிள்ளைகளின் அரவணைப்பை இழந்த பெற்றோரும் முதியோர் இல்லங்களை நாடுகின்றனர்.

பிள்ளைகளிற்காகப் பெற்றோர்கள் துணிந்து தவறுகளை அறிந்து உணர்ந்து பரிகாரங்களைக் கண்டறிந்து விரைந்து செயற்படுவதே எமது இன்றைய தலையாய கடமை விழிப்பாக இரு! எப்பொழுதும் விழிப்பாக இருக்கக் கற்றுக் கொள்! விழிப்பாக இருக்கப் பழகிக் கொள்! வாழ்க்கைஆரோக்கியமாகவும்சுகமாகவும்அமை யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் நடமாடிய சித்தர்கள்

**கலைஞானச் சுடர் – அருளையா நமசிவாயம்பிள்ளை**
**ஓய்வு பெற்ற ஆசிரியர்**
**காரைநகர்**

சித்தர்கள் என்றால் ஆன்மீக சித்தி பெற்றவர்கள் முற்கன்மங்களைக் கழுவியவர்கள் பேரின்பபேற்றினைஅடைந்தவர்கள்.சிவபெருமான் கூட சித்தராக இருந்தாராம். கடந்த இரண்டு, மூன்று நூற்றாண்டுகளாக காரைநகரில் நடமாடிய ஞானிகள், சித்தர்கள், சுவாமிமார் அநேகர். அதாவது சிவனும் – சீவனும் ஒன்றெனக் கண்டு கொண்ட தெளிந்த அறிவுடையவர்கள், இவர்கள்

**ஞானிகள்,யோகிகள்,சுவாமிகள்,வேதர்கள்**
**சித்தர்கள்,தவத்தோர், துறவிகள்**

என்று பற்பல பெயரில் அறியப்படுகின்றனர். புலன்களை அடக்கி, பற்றுக்களைக் குறைக்க உலக ஆசைகள் நீங்கி மனிதன் தெய்வம் ஆகின்றான். அவனது முகத்தில் தெய்வீக ஒளி தேஜஸ் பிரவாகிக்கும். அவன் உலகத்தினருக்கு போதிக்கும் தகமையைப் பெறுகிறான். மனதில் நற்சிந்தனைகள் ஊற்றெடுக்கும் உலக வாழ்வினைப் புரிந்து கொள்வான்.

**பரலோக இராச்சியம் உன்னுள்ளே இருக்கின்றது"**
**"யார் தேடுகிறானோ அவனதையடைவான்"**
**"யார் தட்டுகிறானோ அவனுக்காககதவு**
**திறக்கப்படும்"**

என்கின்றார் இயேசு கிறீஸ்து நாதர்.

**"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே யுறு பொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்**
**றுடம்பினை யானிருந் தோம்புகின்றேனே"**

என்கின்றார் திருமந்திரத்தில் திருமூலர். இவ்வுலகம் இன்ப துன்ப கலப்புடையது. "ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்" என்றவெற்றிவேற்கைப்படி யார் ஒருவன் தன்னை இன்ப துன்பத்திற்கப்பால் வைத்துக் கொள்கின்றானோ அவனே ஞானி. அவனே சுவாமி. அவனே துறவி. அவனே யோகி. அவனே உலக பந்தத்திலிருந்து விடுபட்டோன். இவனே இனிப் பிறவாத நிலையடைந்து பரகதி பெறுவான்.

வேகவைத்த நெல் மீண்டும் பூமியில் முளைக்காது. அதுபோல ஞானம் பெற்றவர் மீண்டும் பூமியிற் பிறப்பதில்லை.

ஞானிகள் மக்களினின்றும் வேறுபட்ட வாழ்வு நடாத்துபவர்கள். பொதுவாகத் தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்வர். இருப்பினும் அவர்கள் வாழும் போது மக்கட்கு

**நல்லுரை ஒழுக்கம் புகட்டலிலும்,**
**தெய்வீகம் காட்டுதலிலும்,**
**அட்டமாசித்துக்கள் செய்வதிலும்,**
**மக்கள் உடற்பிணிகள் தீர மருத்துவம் செய்தலிலும்,**
**அவர்கட்கு முக்காலமுணர்த்தி**
**ஞானமறிவிப்பதிலிலும் – ஈடுபடுவர்.**

ஞானிகள் பிராணன் போன பின்னர் உடலை அவர்களுக்கு இஸ்டமானஇடத்தில் காய்ந்த எரு(விறாட்டி), விபூதி, விளைவு கற்பூரம், உப்பு ஆகியவற்றால் நிரப்பி சப்பாணி கொட்டிய இருக்கை நிலையில் சமாதி வைத்து சமாதிக்கோயில்ஆக்குவர். தேகத்தின் ஆதாரமாகிய பஞ்சபூதங்கள் புவியில் தம் உற்பத்தி பூதங்களுடன் சேரும்.இச்சமாதிக் கோயில் அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிநிறைந்தது. மனிதனின் ஊனக்காதுகளுக்கு கேளாத தெய்வீக தொனி சதா காலமும் ஒலித்துக் கொண்டிருக்கும். நிஸ்டையில் இருக்கும் மற்றைய ஞானிகளினால் இது உணரப்படுமாம். பக்தர்களும், சீடர்களும் அவர்களது பிறந்த தினத்திலும், சமாதியான தினத்திலும் சமாதிக் கோயிலுக்கு விசேட பொங்கல் பூசை செய்து அன்னதானம் கொடுப்பார்கள். **"குருவருளின்றி திருவருள் இல்லை"** என்பது முதுமொழி

**"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்றே"**

என்றுஔவைப் பிராட்டியார் கூறுமாற் போல இலங்கை வரலாற்றில் பிரதேச செயலக – கலாசாரப்பகுதியினர் தமது பகுதியில் கடந்த காலத்தில் வாழ்ந்த ஞானிகள் தொடர்பான முழு விபரங்களையும் ஆராய்ந்து நூலுருவில் வெளியிடும் இக்கைங்கரியம் எதிர்கால சரித்திரத்திற்கும், ஆன்மீக நாட்டமுடையவருக்கும் பேருதவியாக திகழும். அவர்களின் முயற்சி மெச்சிப்பாராட்டத்தக்கது.

## தூர்வாச முனிவர்

காரைநகரின் வடகீழ் மூலை கடற்கரையோரமுற்ற பிட்டியான பகுதி தூம்பில்பிட்டி அல்லது தூம்பில் முனையென்று அழைக்கப்படுகின்றது. இற்றைக்கு முந்நூறாண்டுகளுக்கு முன்னர் தூர்வாச முனிவர் என்பவர் தூம்பில்பிட்டியில் பர்ணசாலை அமைத்து தவம் செய்து முத்தியடைந்ததாக 1971ல் பதிப்பிக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பரபுராணம் கூறுகின்றது. இவரே இவ்வூரில் வசித்த தவமுதல்வனாக கருதப்படுகின்றது. இவரது புகைப்படமோ அல்லது வேறெந்த எழுத்துமூல விபரமோ கிடையாது. இம்முனிவர் நீராடிய கடற்கரையே இன்று சிவன் தீர்த்தமாடும் தீர்த்தக்கரை –தூர்வாச சாகரமென அழைக்கப்படுகின்றது.

**"அம்முனிவர் நீராடி வினை தீர்த்த வருந்தீர்த்தம்**
**செம்மை தரு தூர்வாச சாகரமென் றோதுவரால்**
**வெம்மை தரும் பிறப்பொழிக்க வேண்டுதவர் செய்ததலம்**
**நன்மை தருந் தூர்வாச கிரியென்று நவில்கின்றார்**

ஈழத்துச் சிதம்பரபுராணம்

## அகத்திய முனிவர்

தூர்வாச முனிவருக்கு பின்னைய காலத்தில் அகத்திய முனிவர் என்று மற்றொரு தவத்தோன் காவிரிப்பூம் பட்டினம் வழியாக இங்கு வந்து தூம்பில்பிட்டியில் காரை மரநிழலில் பர்ணசாலையமைத்து தவமியற்றி முத்தியடைந்ததாக ஈழத்துச் சிதம்பர புராணம் தவம்புரி சுருக்கம் குறிப்பிடுகின்றது.

**"இத்திறத்துப் பல்லாண்டு சிவயோகத் தனிதிருந்து**
**பைத்தமணி கண்டத்துப் பரமசிவனருள் காட்ட**
**மெய்த் தவத்தின் வரம்பாகி மெய்ஞ்ஞானத் தலைக் கூடி**
**முத்தியெனு மானந்தப் பெருங்கடலின்மூழ்கினரே"**

காரைமண்ணில் நடமாடிய இரண்டாவது தவத்தோன் அகத்திய முனிவராக சரித்திரம் பகிர்கின்றது. இவரைப் பற்றியவேறொரு எழுத்துமூலதகவலும்கிடையாது.

## தினகரன் முனிவர்

பாரதத்தில் துளுவ நாடு என்னும் பகுதியிலிருந்து ஏறத்தாழஇருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தினகரன் என்னும் அந்தண முனிவர் திண்ணைக்கழிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அங்குள்ள சிவஞான வைரவர் கோவிலடியில் வாசஞ் செய்து இங்குள்ள பிள்ளைகளுக்கு கல்வி புகட்டியும், வைரவர் மூலஸ்தானத்தின் பின் ஆலமரத்தை நாட்டி வளர்த்தும் மேலான தவஞ்செய்து முத்தியடைந்துள்ளார்.

**"அத்திருக் கோயின் மன்னு**
**மருட்குறிக் கையன் நாளுஞ்**
**சித்திர விளக்க மேற்றிச்**
**செயிரறப் பூசை செய்து**
**பத்திமை பூண்டு நின்றான்**
**பதிக்கொரு விருக்க வேண்டி**
**மெய்த்தவர் போற்று மாலங்**
**கன்றினை மருங்கில் நட்டான் "**....... ஈழத்துச் சிதம்பரபுராணம்

இங்கு வதிவோர் தமக்கு ஏற்படும் இடர்களை, கெடுதிகளை, இழப்புக்களை, பிணிகளை வைரவரிடம் சென்று நேர்த்திசெய்து சமர்ப்பிக்க அவை குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்யப்படுவது அனுபவறிவு. தினகரன் முனிவரால் நாட்டப்பட்ட ஆலமரம் இன்றும் இருநூற்றைம்பது வயதுடன் பரந்தகன்று தலவிருட்சமாக ஈழத்துச் சிதம்பர மூன்றாம் - ரத வீதியின் தென்மேற்கே வைரவர் கோவிலின் பின்னே சடைத்து நிற்கின்றது. இன்று இக் கோவில் புதுப்பிக்கப்பட்டு வலது பக்கம் புதியதாக கேணியும் இடது பக்கம் பஜனை மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. வைகாசி மாத விசாக நட்சத்திரத்துடன் கூடிய மாலைப் பொழுதில் பக்தர்கள் பொங்கல் செய்து, மடைபரப்பி — விசாகப் பொங்கலினை சிறப்பாகக் கொண்டாடுவர். வாராந்தம் வெள்ளிக் கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். மேற்படி இடத்தை தினகரன் முனிவர் தவஞ் செய்த காரணத்தால் தினகரன் பிட்டியென்றும், கோவிலை தினகரன் பிட்டி வைரவர் கோவிலென்றும் அழைக்கின்றனர்.

### ஆண்டி முனிவர்

இராமநாதபுரம் - சேதுக் கரையை காவல் செய்த மறக்குடி பரம்பரையில் உதித்த ஆண்டி முனிவர் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாக ஈழத்தில் உள்ள ஆலயங்களை தரிசித்து வருங்கால் வியாவிலில் இருந்த ஏழு நிலை கோபுரத்துடன் கூடிய ஐயனார் ஆலயத்தினை தரிசிக்க வந்த போது கோவில் அழிக்கப்பட்டிருப்பதைக்கண்டுமனம்கலங்கினார்.

ஐயனார் முனிவர் கனவில் தோன்றி **"நாம் தூர்வாசகிரிக்கு சமீபமாகவுள்ள அரசமரத்தின் கீழ் இருக்கின்றோம் வந்து தரிசிப்பீர்"** எனக் கூறினார். அதன்படி ஆண்டி முனிவர் திண்ணைக்கழியில் அவ்வரச மரத்தினைக் கண்டு அதனருகே தாம் கொண்டு வந்த சூலத்தை நாட்டி ஆத்மார்த்த பூசை செய்து வரும் போது ஒரு அந்திமாலைப் பொழுதில் தீப ஒளிதென்பட்டது. அவ்விடத்தை அகழ்ந்த போது ஐயனார் திருவுரு கிடைக்கப் பெற்றது. அந்தக்காணி உரித்தாளர் களபூமி விளானைச் சேர்ந்த சைவப்பெரியார் அம்பலவிமுருகர். ஆண்டிமுனிவரும் அம்பலவிமுருகருமாக அவ்விடத்தில் சிறு கொட்டில் அமைத்து வழிபட்டுவரலாயினர்.

**"அண்டர்க ளமுதுபெற் றடைந்த வின்பமே**
**கொண்டமெய் யாண்டியா ரரச கோமரத்**
**தெண்டருஞ் சூலத்தி னியைந்த பக்கலில்**
**மண்டொழ வையனார் வடிவை வைத்தனர்."**.....
**தவம் புரிசுருக்கம் 85**

இப்படியாக வழிபட்டு வருங்காலத்தில் ஐயனாருக்கு தனிப்பெருங்கோயில் கட்டப்படல் வேண்டுமென அம்பலவிமுருகருக்கு உணர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிமுனிவர் அங்கேயே சிவபதமடைந்தார். ஆண்டிமுனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட வைரவர், பாரிய ஆலவிருட்சத்துடன் இன்று இரண்டாம் வீதி வைரவர் கோவிலாகவும்,ஐயனார் ஆண்டிகேணி ஐயனாராகவும், அத்தோடு அருகே சிவ-னும் அம்பலவிமுருகரால் ஸ்தாபிக்கப்பட்டு ஈழத்துச் சிதம்பரமென அழைக்கப்படுகின்றது.

**"ஆரார் காவடி ஐயன் காவடி**
**தேரிலே ஏறி தெருவீதி வாறார்**
**காவடிக் குள்ளே கலந்து வாறார்**
**பச்சை மயில் ஏறி பறந்து வாறார்"**
**"ஆண்டிகேணி ஐயனாருக்கு அரோகரா அரோகரா"**
**"ஆண்டிகேணி ஐயனாருக்கு அரோகரா அரோகரா"**
**"அம்பலவிமுருகர் வைத்த கல்லுக்கு அரோகரா அரோகரா"**

என்றெல்லாம் பாடி தாம் வைத்த நேர்த்திக் கடனை காவடி எடுத்து ஆண்டி முனிவர், அம்பலவிமுருகர்,ஐயனார் - சி-வனை வணங்கி நேர்த்தியை நிறைவு செய்யும் அருள்மிகு காட்சியினை இன்றும் காணலாம்.

திருச்செந்தூர் ஆறுமுகப்பெருமானை சிறுகோவிலமைத்து வழிபாடு செய்து வந்தார். ஒரு மாரிப் பொழுதில் உதய காலத்து பூஜை செய்வதற்கு முன்னர் கோவில் கிணற்றில் நீராடச் சென்ற போது கால் வழுக்கி கிணற்றில் விழுந்து விட்டார். அங்கு எவரும் இல்லை.

யாரோ ஒருவர் வந்து விழுந்தவரை தூக்கி விட்டார். வந்தவரை மறுகணம் காணவில்லை.



துர்வாச முனிவர், அகத்திய முனிவர், தினகரன் முனிவர்,ஆண்டிமுனிவர். இவ் நால்வரது வரலாறுகளும் ஈழத்துச் சிதம்பரபுராணத்திலிருந்து கிடைக்கப் பெற்றது.

**ஞானியர்**

கந்தர் அம்பலவாணர் என்ற ஆதிசைவர் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மணற்பிட்டி பதியில் வாழ்ந்து வந்தார். அவரது ஏழு வயதிலே கனாவில் தொடர்ந்து பல நாட்களாக ஆறுகுமாரர்கள் தென்பட்டவண்ணம் இருந்தனர். நீங்கள் யா-ரென வினாவ "நாம் திருச்செந்தூர் முருகன். இவ்விடத்திலும் குடியமர விரும்புகின்றோம்." இதன் விளைவாகவே அம்பலவாணர் முருகனே இக்கைங்கரியத்தை செய்து மறைந்தாராம். அம்பலவாணரின் மனைவி சீதா-தேவி இறைபதமடைந்ததும் காவிவஸ்திரம் தரித்து தவவாழ்வுடன் கோவிற் பூஜை செய்து வந்தார். முக்காலமும் உணர்ந்த அம்பலவாணரை மக்கள் ஞானியார் என்றும், கோவிலை ஞா-னியார் கோவிலென்றும் அழைக்கலாயினர். ஆரோக்கியத்துடன் (108) நூற்றெட்டு வயது-வரை வாழ்ந்த ஞானியார் 1962 கார்த்திகையில் சமாதியானார். ஞானியார் சிவபதமடைய அவரது பெறாமகன் வேலுப்பிள்ளை தெண்டாயுதபாணி குருக்களும், அவருக்குப் பின்னர் தற்போதைய பூசகர் தெண்டாயுதபாணி சோமசுந்தரக் குருக்களும் கடமையாற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்வ மேதயாகம் - குதிரையாகம் - 2013 ஸ்கந்த மகாயாகம் - மயில்யாகம் - 2014 சற்குண சந்தான பாக்ய மஹாயாகம் - 2015 ஆகிய மாபெரும் யாகங்கள் அண்மைக் காலமாக நடைபெற்று மணற்பிட்டி பகுதியில் அருள்மிகு முருகனாகத் தினமும் இரண்டு காலப் பூஜை ஆராதனையுடன் சிறப்பாக திகழ்கின்றார். இவரது வரலாறு சோமசுந்தரக்குருக்களிடம், அவரது தாயார் மற்றும் உறவினர் சரஸ்வதிதேவி, பாலசுப்பிரமணியம் VC - அவர்களிடமிருந்தும் பெறப்பட்டது.

## சாமி தம்பையா

இயற்பெயர் கார்த்திகேசு தம்பையா. வட்டுக்கோட்டை பிளவத்தை கேணியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். காரைநகர் இலகடியைச் சேர்ந்த அன்னம்மா என்ற பெண்ணை மணம் முடித்தவர். இவருக்கு இளமைக் காலத்தில் ஏற்பட்ட கொடிய நோய் காரணமாக பொன்னாலை திருவடிநிலை வாகையடி வைரவரை வணங்கி நோய் தீரப் பெற்றவர். அவ் வைரவர் ஆணைப்படி மேற்குப் புறமாகவுள்ள மனைவியின் ஊராகிய காரைநகரில் வசித்தவர். திறமையான மேசன் தொழிலாளர். திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களின் காலத்தில் குருகுல மண்டபம், அன்னதான மடாலயங்கள் என பல கட்டடப் பணியில் ஈடுபட்டவர். இங்கும் காரைநகரில் பற்பல இடங்களில் தலைமை மேசனாகத் தொழிற்பட்டவர்.

திண்ணைக் கழி ஐயனார் கோவிலுக்கு வடமேல் திசையிலமைந்த கசூரினா பீச் - தீர்த்தக் கரைக்கு சமீபமாகவுள்ள தமது காணியில் வைரவருக்கு சிறு கோவிலமைத்து பூஜை செய்து வாழ்ந்து வந்தார். இளவயது முதலே தாடி, சடாமுடி, காவிவஸ்திரம் தரித்து உயர்ந்த சிவபெருமானை ஒத்த உருவினர். பாத யாத்திரையாக வற்றாப்பளை ஊடாக கதிர்காம முருகனை தரிசிக்க வருடாந்தம் ஆடித் திருவிழாவிற்கு போவதை வழக்கமாகக் கொண்டவர்.

பிரபஞ்சம் அழியும் தன்மையுடையது. கோவில் என்பது சுடுகாடு என்பவற்றை உணர்ந்தவராய் அர்த்தஜாம வேளையில் சிவன் கோவில், தினகரன் பிட்டி வைரவர் கோயில், சாம்பலோடை மயானம் சென்று சிவனது நடனம் தரிசிப்பவர்.

**"கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை**
**தாயும் இலி தந்தைஇலி தான் தனியன் காண் ஏடீ**
**தாயும் இலி தந்தைஇலி தான் தனியன் ஆயிடினும்**
**காயில் உலகு அனைத்தும் கல்பொடி**
**காண்சாழலோ" - திருச்சாழல்**

நோய், பிணி, குறைகள் உள்ளோர் கசூரினா பீச்சடியில் உள்ள இவரது வைரவர் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து இவர் ஜெபம் செய்து திருநீறு போட குணமடைவார்களாம். இவர் பூஜை வழிபாட்டில் உள்ள போது நடைபெற உள்ள விடயங்கள் யாவற்றையும் துல்லியமாகக் கூறுவாராம். இவர் தமது எழுபத்திரண்டாவது வயதில் 10.03.1968ல் சிவபதமடைந்தார். இவரது வரலாறு புஸ்பவதி அம்மா, பரலோகேஸ்வரி மகளிடமும், சீடர் பாலசுப்பிரமணியம் ஆகியோரிடம் இருந்து பெறப்பட்டது. புகைப்படம் ஏதும் இல்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேப்பர் சுவாமிகள்**

**நண்டுப்பாளியில்சமாதிக் கோயில்**

**வெளித்தோற்றம்**







**சமாதிக் கோயில் உள்தோற்றம்**

இயற்பெயர் வேலுப்பிள்ளை முருகேசு. தனது மனைவியின் சிவபதற்கு மேல் கோவளம் வெளிச்ச வீட்டிற்கு அருகாமையில் 1930ம் ஆண்டளவில் ஆச்சிரமம் அமைத்து தவ வாழ்வு வாழ்ந்தார். இளமைக் காலத்தில் TIMES OF CEYLON என்ற ஆங்கில நாளிதழ்க்கு ரிப்போட்டராக கடமையாற்றியவர். இதன் காரணமாக பேப்பர் சுவாமிகள் என அழைக்கப்பட்டார். இவர் ஆச்சிரமத்தில் அவ்வப் போது யாகம் செய்வதுண்டு. அவ் வழிபாட்டினைத் தரிசிக்க ஏராளம் மக்களும், அரச உயரதிகாரிகளும் செல்வதுண்டு. கொழும்பில் கடமையாற்றிய இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீமான் ஏ.ஏ.கிரி (பின்னாட்களில் இந்திய உப ஜனாதிபதியாக கடமையாற்றியவர்) அவர்கள் அடிக்கடி தரிசனத்திற்கு வந்து போவாராம்.

அத்தோடு முன்னாள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்களான வேணன் அபயசேகரா, விமல் அமலசேகரா போன்ற உயரதிகாரிகளும் வந்து தரிசித்து போவதுண்டு. பேப்பர் சுவாமிகளிடம் பல நோய், பிணியுள்ளோர் தொழில் தடையுள்ளவர்கள், விவாகம் கைகூடாதவர்கள் என்பவர்கள் தரிசனம் பெற்று தத்தம் குறைகளைத் தீர்த்துள்ளனர்.

இவர் ஜோதிடக் கலையிலும் விற்பனராகத் திகழ்ந்தவர். ஒருவரைக் கண்டவிடத்து அவரைப் பற்றிய பூர்வீகம் யாவும் கூறும் ஞானம் பெற்றவர்.

1971ம் ஆண்டளவில் வெளிச்ச வீட்டிற்கு தெற்குப் புறமாக சுமாராக ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்த நண்டுபாழி கேணியருகே தமது வளவில் பர்ணசாலை அமைத்து வாழ்ந்து வந்தார். அவரினால் அங்கு உண்டாக்கப்பட்ட நந்தவனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமரங்கள் இன்றும் பூத்துக் குலுங்குகின்றது.

1976 வைகாசிப் பரணி நட்சத்திரத்தில் அவ்விடத்தே சமாதியானார். அவரது விருப்பப்படி அவ்விடத்திலே சப்பாணி கொட்டிய இருக்கை நிலையில் சமாதி வைக்கப்பட்டு மேலே கிடுகினால் வேயப்பட்டுள்ளது. பக்தர்களுக்கு இன்றும் அபயக்கரம் காட்டுவாராம்.

அச்சமாதிக் கோவிலில் அவரது பிறந்த தின ஆவணி சதுர்த்தி திதியிலும், சமாதியான வைகாசி பரணி நட்சத்திரத்திலும் சீடர்களாலும், கிராமத்தவர்களாலும் பொங்கல் செய்து,பூஜை வழிபாடியற்றி அன்னதானமும் வழங்கப்படுகின்றது. அருகேயுள்ள நண்டுப்பாழிக் கேணி தற்சமயம் கமநல சேவைகள் திணைக்களத்தால் ஆழமாக்கப்பட்டு, விசாலிக்கப்பட்டு அதிக கொள்ளளவுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இவர் காலத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த வெளிச்சவீடு இப்போ பல்லாண்டு காலமாக ஒளிர்வதில்லை. புனரமைப்பை வேண்டி நிற்கிறது. இவரது சமாதிக் கோவிலை இப் பகுதியைச் சேர்ந்த பிரபல புகைப்படக்காரர் அருளம்பலம் திருநாவுக்கரசு அவர்கள் இலவசமாக படம் பிடித்து தந்துதவியுள்ளார். சீடா காசிப்பிள்ளை அம்பிகைபாகன்

## செல்லம்மாச்சாமி



கேவளம் பாலைக்காடு செல்லம்மா சாமி – தனது கணவர் அம்பலவாணர் சிவபதத்திற்குப் பின்னர் காவிவஸ்திரம் தரித்து உச்சியில் கொண்டை முடித்து உருத்திராக்க மாலை அணிந்து தவ வாழ்வு வாழ்ந்தவர். ஈழத்துச் சிதம்பரம் கோவிலில் உற்சவ காலத்தில் சாம்பிராணி தூபமிடுவார். இறைவ-னாலும், ஞானிகளாலும் உணரப்படும் பிரண-வநாதம் என்னும் சங்கொலி எழுப்பி சேவித்து வழிபடுவார். இந்திய தெய்வத் தலங்கள் தோறும் யாத்திரை செய்தவர். வர்ணகாசி – காசி யாத்திரை செய்து காசி விஸ்வநாதரை தரிசித்தவர். அருகே இருந்த பேப்பர் சுவாமிகளிடம் ஞானம் பெற்று சீடரானார். தினமும் நிஷ்டையில் இருந்து தியானம் செய்து சிவபதமடைந்தவர். மேலதிக தகவல்கள் தெரியாதென பேரன் சிற்சபேசன் கூறுகின்றார்.

ஞானியார், பேப்பர் சுவாமிகள், செல்லம்மாச் சுவாமி, தொண்டர் அருளம்பலம் சுவாமிகள் ஆகிய நால்வரும் காரைநகர் மேற்கு கோவளம் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டுப்பரியாரி பேரம்பலம் சுவாமி

காரைநகர் பாலாவோடைக் குறுச்சியிலே 1895 சித்திரை மாதத்தில் அவதரித்தவரே ஆறுமுகம் வேலுப்பிள்ளை பேரம்பலம். சுப்பர் சின்னக்குட்டி இவரது மனையாட்டி.

பேரம்பலம் இளமைக்காலத்தில் ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் நோய் பரிகாரத்தினை ஆயள்வேத வாகடமுறைப்படி கற்று புகழ் பெற்ற மாட்டு பரியாரியா-கத் திகழ்ந்தவர். அத்தோடு மானிடருக்கும் வாகடமுறைப்படி ஓரளவு வைத்தியம் செய்வார்.

மெல்லிய தேகம். தாடி, சடைவளர்த்த தோற்றம். நான்கு முழவேட்டி கட்டி, தோளில் சிறிய துண்டு. மடியிலே கால்நடை நோய்களுக்குத் தேவை-வயான மருந்துப் பொதிகள். பொல்லுப்பிடியுடன் துரித நடையில் வீதியால் செல்வார்.

பாலாவோடை குறுஞ்சாகுழி அம்பாள் பக்தர். மார்கழி திருவெம்பாவைக் காலத்தில் ஈழத்துச் சிதம்பரம், அம்மா மடம் (சிவாச்சிரமம்) ஆகியவற்றில் திருவெம்பாவை பத்து நாட்களும் சஞ்சரிப்பார். தெய்வீக சூழலில் சிவதாண்டவம் ஆடுவார். சைவ விரதங்கள் யாவும் அனுஷ்டிப்பார். விரத காலங்களில் வாழையி-லை அல்லது தென்னோலையில் இழைக்கப்பட்ட தகட்டிலே உணவு உண்பார். பெரும்பாலும் சுற்றுப் புறங்களில் காணப்படும் முல்லை, முசுட்டை, குறுஞ்சா, பிரண்டைத் தளிர், அகத்தி, பசளி, கீரை, வாத நாராணி, பொன்னாங்காணி, வல்லாரை, கறிவேப்பிலை போன்றவையே கறியாக இருக்கும். மோரும் சேர்த்துக் கொள்வார்.

சோதிட சாஸ்திரத்திலும் புலமை-மயுடையவர். நவக்கிரகங்களின் ஆதிக்கத்திலே நடைபெற உள்ளவற்றை முன் கூட்டியே துல்லியமாகக் கூறுவார். தமது உடன் பிறப்புக்கள் இருவர் வாய் பேசாது இருந்த போது அவர்கள் இருவரையும் கால்நடை யாத்திரையாகக் கதிர்காம முருகனிடம் அழைத்துச் சென்று

**"கதிர்காம கந்தனுக்கு அரோகரா அரோகரா**
**சரவணபவனுக்கு அரோகரா அரோகரா"**

என்று கூறி கூத்தாட அவர் இருவரும் வாய்பேசத் தொடங்கினராம்.

இவரது 65ம் வயதில் (1960) இரண்டு கண்களும் பார்வை இழந்து வீட்டிலே சில மாதங்கள் தங்க வேண்டியேற்பட்டது. அப்போது கனாவில் பாலாவோடை அம்பாள் வந்து தனக்கு பின்னே கோவிலுக்கு வரும்படி அழைக்க இருவரும் கோவிலுக்குப் போக இரண்டு கண்களும் பார்வை பெற்றனவாம்.

கோவிலில் கலையாடி வருங்காலத்தில் பாலாவோடைக்கிராமம் வெறிச்சோடப் போகின்றது என்று கூறினார். அப்படியே 1991ம் ஆண்டு மக்கள் இடப்பெயர்வுடன் வெறிச்சோடிய கிராமம் இன்றுவரை மிகக் குறைந்த குடிசனத்துடனே சிறிய காடாகவே உள்ளது. இப்படி பற்பல அற்புதங்கள் செய்த இச் சுவாமியார் 11.06.1976ல் சிவகதியடைந்தார். இவரது ஆன்மீக சக்தியோ என்னவோ இவரது வதிவிடத்துக்கு அண்மையாக விளானையில் அரசினர் கால்நடை வைத்திய நிலையம் அமைக்கப்பட்டு இன்று முழுக் காரைநகர் கால்நடை பிணிகளுக்கும் சிகிச்சையளித்து வருகின்றது. இவரது புகைப்படம் ஏதுமில்லை எனப் பேரன் சோமசுந்தரம் கூறுகின்றார்.

## சரஸ்வதி சுவாமியார்

விஸ்வலிங்கம் சரஸ்வதி சுவாமியார் - பாலாவோடை அம்மன் கோவிலுக்கு தென்மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மூலையில் வாசஞ் செய்த ஞானம் பெற்ற சுவாமியார் ஆவார். அம்பாள் பக்தர். வீட்டில் வைரவரை ஸ்தாபித்து வணங்கியவர். வெள்ளிக் கிழமைகள் தோறும் கலையாடி சாஸ்திரம் சொல்வார். 1991ல் மக்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் இராணுவம் வரப்போகின்றது. வருங்காலத்தில் தூரமொரு மக்கள் குடியிருப்பர் என்றெல்லாம் அச்சொட்டாக கூறிய பெண் சுவாமியார். இவரும் இடம் பெயர்ந்து சென்று மகனுடன் கிளிநொச்சியில் வாழ்ந்து 1997ல் சிவபதமடைந்து விட்டார். மேலதிக தகவலோ அன்றிப் புகைப்படமோ பெறமுடியவில்லை. தகவல்சுந்தரம்பிள்ளைஆறுமகம் கந்தப்பு நடராசா

## சங்கரப்பிள்ளை சாமியார்

இவர் இடைப்பிட்டி காரைநகரில் 18.05.1904ல் அவதரித்தவர். கிழக்கு, வடக்கு மாகாணங்களில் விவசாயப்போதனாசிரியராகக்கடமையாற்றியவர். மெல்லிய உயரமான தோற்றமுடையவர். நான்கு முழ வேட்டி கட்டி கழுத்தில் உருத்திராக்க மாலையணிந்திருப்பார். "ஓம் முருகா" என்று அடிக்கடி கூறுவார். கோவில்களில், சிவாச்சிரமம் - அம்மா மடம் ஆகியவற்றில் திருமுறைகள் ஓதியவண்ணம் இருப்பார். வருடாந்தம் கதிர்காம யாத்திரை செய்வார். 1971ம் ஆண்டில் கண்டி தபோவனம் ஆச்சிரம தொடர்பு ஏற்பட்டு சிவானந்த சுவாமியிடம் ஞானம் பெற்றுக் கொண்டார். 1979ல் மனையாட்டி பார்வதிப்பிள்ளை சிவகதியடைய சிவனை விட்டு சக்தி பிரிந்து விட்டதெனக் கூறியவர். பிரதி வியாழக்கிழமை தோறும் மௌன விரதம் அனுஷ்டிப்பதை வழக்கமாகக் கொண்டவர். திருக்கேதீஸ்வரத்திலும் சிலகாலம் வாசஞ் செய்தார். இறுதிக் காலத்தில் கண்கள் பார்வை இழந்த போதும் சிகிச்சைகள் ஏதும் செய்யாது வாழ்ந்தவர். ஓய்வூதிய பணத்தினை பொது அமைப்புகளுக்கு வழங்கி உலகியல் ஆசைகளை நீக்கி எந்நேரமும் சிவசிந்தனையுடன் தியான நிஷ்டையிலிருந்து 1987ல் சிவகதியடைந்தார். புகைப்படம் கிடையா-தெனப் பேரன் யோகேஸ்பரன் கூறுகின்றார்.

## தொண்டர் அருளம்பலம் சுவாமி

தொண்டர் - இராசம்மா தம்பதிகள் படம்






கீரிமலையில் தொண்டர் சுவாமி சமாதிப்படம்

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அருளம்பலம் அவர்கள் 25.04.1913ல் அவதரித்தார். இளம் பராயத்தில் வியாபாரத்திலும் பின்னர் சுருட்டு சுற்றுவதிலும் ஈடுபட்டார். தனது 18ம் வயதில் ஆன்மீக நாட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு காவிவஸ்திரம் தரித்து பேப்பர் சுவாமிகளை ஞான குருவாக உறவு கொண்டார். 1967ம் ஆண்டு யாழ்ப்பாணம் - சைவபரிபாலன சபை ஆதரவில்தமிழ்நாடு—காஞ்சிபுரம்-சைவசித்தாந்த கலைச் செல்வர் ஸ்ரீமான் க.வச்சிரவேல் முதலியார் அவர்களால் நடாத்தப்பட்ட சைவசித்தாந்த வகுப்பில் சைவசித்தாந்தத்தை கற்றுக் கொண்டார். இந்து சமயத்தின் பெயரில் கோவில்களில் நடைபெறும் அநியாயங்களை சுட்டிக் காட்டுவதில் பின்னிற்கமாட்டார்.

"யதார்த்த வாதி வெகுஜன விரோதி" என்பதற்கு ஏற்ப அனேக பூசகர்கள் ஆதீன நிர்வாகிகளுடன் முரண்படுவதுண்டு.

**"அப்பனும் அம்மையும் சிவமே**
**அரிய சகோதரரும் சிவமே**
**ஒப்பில் மனைவியும் சிவமே**
**ஓதரும் மைந்தரும் சிவமே**
**செப்பில் அரசரும் சிவமே**
**தேவாதி தேவரும் சிவமே**
**இப்புவி யெல்லாம் சிவமே**
**என்னை ஆண்டதும் சிவமே"**

என்றவாறு ஊரவரின் வீட்டுப்பணிகள், மணற்காடு — மாரியம்மன் கோவில், ஈழத்துச்சிதம்பரம், ஏனைய கோவில்கள், பொதுத் தொண்டுகள் சகல விடயங்களிலும்முன்னிற்பார். இதனால்"தொண்டர் அருளம்பலம்" என மக்கள் அழைக்கலாயினர்.

**"அடிசிற் கினியாளே யன்புடை யாளே**
**படிசொற் றவறாத பாவாய் - அடிவருடிப்**
**பின்றூங்கி முன்னெழுந்த பேதையே"**

என திருவள்ளுவர் பெருமான் கூறுமாற் போல 1937ம் ஆண்டில் இராசம்மா எனும் தொண்டி மனையாட்டியாக வாய்க்கப் பெற்றார். இவரும் ஞானப்போக்குடையவர். திருமணத்தின் பின் இருவருமாக ஆலடியில் "பாரதவிலாஸ்" என்ற சைவ ஹொட்டலை நடாத்தி வந்தனர். பின்னர் 1976ல் வலந்தலை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக "ஆனந்தபவன்" சைவஹொட்டலை ஆரம்பித்து பிள்ளைகளுக்கு ஆதரவாக நடாத்தினார்கள்.

1947ம் ஆண்டில் பாரதத்தில் தருமபுர ஆதனம்சென்றுசிவதீட்சைபெற்று"சைவபூசணம்" என்னும்பெயரைப்பெற்றுக்கொண்டார். இக்காலம் தொடங்கி தினமும் ஸ்நானம் செய்து சிவபூசை செய்து ஆகாரம் உட்கொள்ளும் வழக்கத்தைக் கடைப்பிடித்தார். அத்தோடு பிரதி திங்கட்கிழமை தோறும் மௌன விரதம் அனுஷ்டிப்பார்.

ஜோதிடக் கலையிலும் பரந்தறிவுடையவர். நோய் பிணியுள்ளோருக்கு ஜெபம் செய்து திருநீறு போடுவார். இறைபணியாளர். வைத்தியப்பணி, ஆசிரியப்பணி, இறை-பணி, ஜோதிடப்பணி, தொண்டு — பரோபகாரம். இவற்றுடன் தொடர்புள்ளோருக்கு தெய்வீக ஆன்மீகம் இலகுவாகத் தென்படும். 1972ம் ஆண்டில் கொழும்பு தாளையன் அச்சகத்தில் இயங்கும் மெய்கண்டான் ஆச்சிரமத்தில் - மெய்கண்டார் சுவாமிகளிடம் "ஞானப் பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்" என்ற நாமம் சூட்டப் பெற்று ஞான நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1987ம் ஆண்டில் கிளிநொச்சி குருகுலத்தில் இணைந்து தியான நிஷ்டை அதாவது ஐம்புலன்களை அடக்கி — சித்தத்தை பிரமத்தில் நிறுத்தி

**- செயல் அடங்கி**
**- பேச்சு அடங்கி**
**- மனமடங்கி,**

சிவசொருபத்தை நீண்ட நேரம் காண்பார். ஓரிரு நாட்கள் கூட கலையாத நிஷ்டையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்வதில் இவருக்கு நிகர் இவரே. இப்படியாகத் தலை சிறந்த சிவயோகியா-னார். சன்னதி ஆனந்த ஆச்சிரமத்திற்கும் சென்று தங்கி தவ வாழ்வு வாழ்ந்தார். தனது சமாதிக் காலத்தை முன் கூட்டியே உணர்ந்தவராய் குடும்பத்தினருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் தெரிவித்து இறுதிக் காலத்தில் மகள் கலைவாணியுடன் கரும்பானை – கீரி-மலையில் வந்துறைந்து 25.04.1990ல் சமாதியடைந்தார். அவரது விருப்பப்படி பூதவுடல் கீரிமலை கடற்கரையோரம் சப்பாணி கொட்டிய இருக்கை நிலையில் சமாதி வைக்கப்பட்டு இன்றும் அருள் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. அவரைத் தொடர்ந்து தொண்டி அம்மாவும் 1997ல் சமாதியானார். புகைப்படங்களை மகன் புகைப்படக் கலைஞர் அருளம்பலம் திருநாவுக்கரசு அவர்களும், விபரமான தகவல்களை மகள் நாகேஸ்வரியும் தந்து உதவினார்கள்.



தியாகராஜர் சுவாமிகள்
கண்மணி அம்மாள்



### திருப்புகழ் சுவாமி தம்பதிகள்

### இணுவில் காரைக்கால் மயானத்தில் உள்ள திருப்புகழ் சுவாமியின் சமாதி

இணுவில் - காரைக்காலடியைச் சேர்ந்த இவரது இயற்பெயர் வைத்திலிங்கம் தியா-கராசா. 18.05.1918ல் அவதரித்தவர். இளமைக் காலத்தில் கல்வி கற்று புத்துவாட்டி வித்வான் சோமசுந்தரம் முதலானோருடன் பண்ணிசை, சங்கீதம், ஆர்மோனியம் பயின்று இசை மேதையானார். அத்தோடு ஜீவனோ-பாயமாக சுருட்டு சுற்றுதல், தோட்டம் செய்தல் என்பவற்றைக் கைக்கொண்டு வந்தார்.

மகாதேவா சுவாமிகளிடம் வேதாந்தம், சித்தாந்தம், ஞானநூல்களையும் கற்றறிந்தார். குப்பிளான் சரவணை சாமியாரின் சீடரான மாணிக்கம்மா என்ற பெரிய பெண் சுவாமியிடம் தீட்சை பெற்று ஞானோதயம் பெற்றார். இனிமை-மயாக திருமுறைகள் - திருப்புகழ் பாடும் இவரை மக்கள் திருப்புகழ் சாமியென அழைக்கலாயினர். அம்பாள் அனுக்கிரகமும் பெற்றவர்.

இவரிடம் ஒரு நடை பஜனைக் கோஷ்டியே இருந்தது. அதில் திருப்புகழ் சாமிய-ாரும் சகோதரரும் பாட்டு, இன்னுமொருவர் ஆர்மோனியம்,வேறு இருவர் மிருதங்கம். நல்லூர் முருகன் கோவிலில் ஆரம்பித்த நடை பஜனை -

**-ஈழத்து சிதம்பரம்**

**சன்னதி முருகன் கோயில்**

**-நாகபூசணி அம்மன் கோயில்**

**-கருங்காலி முருகமூர்த்தி கோயில்**

**-பொன்னாலை கிருஷ்ணர் கோயில்**

**-மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பற்பல தலங்களுக்கு திருவிழாக் காலங்களில் செல்வதுண்டு. பஜனை கோஷ்டி வரும் வழிகள் தோறும் மக்கள் பூரண கும்பம் வைத்து, அவல், கடலை, வடை போன்ற நிவேதனங்கள் படைத்து வரவேற்பர். பஜனை பாடிவரும் போது சுவாமி விவேகானந்தரை ஒத்த மிண்டாசு தலைப்பா கட்டியிருப்பார். தியா-கராசா சுவாமிகள் ஏறத்தாழ ஐந்து அடி உயரம், சிவப்பு நிறம், தலை வளர்த்து முடிந்திருப்பார். நீண்ட தாடி, நாலு முழ வேட்டி கட்டி, தோளில் துவாய்த் துண்டு, துடுக்கானநடை, ஹாஸ்யமான பேச்சு. ஆன்மீகப் பார்வையுடையவர்.

ஈழத்துச்சிதம்பரம் வடக்குரதவீதியில் அமைந்த சிவாச்சிரமத்திற்கு வருகை தந்து தொண்டர் அருளம்பலம் சுவாமிகளுடன் இணைந்து சீடர்களுக்கு கைவல்லியம் - சித்தாந்தம் கற்றுக் கொடுப்பார்.காரைநகரில்

**முருகேசு அம்பலவாணர் - கணித ஆசிரியர் - பெரியமணல்**
**சின்னராசா மனோன்மணி குடும்பம் - சடையாளி**
**நல்லதம்பி கனகநாயகம் குடும்பம் - சம்பந்தர்கண்டி**
**பாணாந்துறை முருகேசு குடும்பம் - செம்பாடு**
**செல்வராசா– ஆசிரியர், லீலாவதி ஆசிரியை – சிவ-காமி அம்மன் வீதி**
**மூத்ததம்பி செல்வராசாகுடும்பம் - வெடியரசன் வீதி**
**மார்க்கண்டு சிவஞானம் குடும்பம் - பொன்னம்பலம் வீதி**
**சிவப்பிரகாசம் புவனேஸ்வரி குடும்பம் - நாகம்மாள் கோவிலடி**
**தம்பிப்பிள்ளை மின்காந்தவேள் - விக்காவில்**
போன்ற பல சீடர்களின் இல்லங்களில் வந்து தங்கி திருமுறைகள், திருப்புகழ் பாடி இறையருளை ஊட்டுவார்.

பண்டத்தரிப்பான் புலம் சிவகாமி சமேத சிதம்பரேஸ்வர் கோவிலில் ஆனி உத்தர நாளன்று வந்து அதிகாலை வேளை மூன்று மணி நேர-மாக பயனை செய்வார். அத்தோடு 1983ம் ஆண்டில் வசந்த மண்டபத்திற்கான அத்திபாரக் கல்லினை வைத்து வேலையை ஆரம்பித்து வைத்தார். இக் கோவிலின் பூந்தோட்ட வேலை-லயினையும் இவரே ஆரம்பித்து வைத்தார் **“எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்.......... என்ற சிவஞான சித்தியாரின்படி.** இவரது மனையாட்டி கண்மணி அம்மாள் - இருவரும் தொண்டுள்ளம் படைத்தவர். வீட்டினைக் கோவிலாகவும், கணவனைத் தெய்வமாகவும் மதித்தவர். இவ் அம்மையார் 1987ஃ88 ஆண்டளவில் இறைபதம் எய்தினார். இவரின் பிரிவுக்குப் பின்னர் சுவாமியார் தனித்தே சிவயோகியாக வாழ்ந்தவர். ஓரிணை மாடுகளில் பசு போய் விட்டது — நாம்பன் கட்டாக்காலியாக உலாவி வருகின்றதென்று சுவார்ஸமாக இல்லற தத்துவத்தை விளக்குவாராம்.

திருப்புகழ் சுவாமி தம்மிடம் வரும் பக்தர்களுக்கு உயர்வு — தாழ்வு, சாதி, மதம் நோக்காது கருணை காட்டி நோய் - பிணி தீர்த்து தொழில் - வருமான முன்னேற்றம் காட்டி குருபக்தியூட்டி ஆட்கொள்வார். காரைநகர் மண்ணும் ஞானிகள் பாதம் மிதிக்கப்பட்ட இடமாகையால் இந்த இணுவில் - காரைக்கால் சுவாமியாரும் இங்கு உல-ாவி இங்குள்ள சீடர்களுக்கு ஆன்மீகத்தை ஊட்டியது காரைவாழ் மக்கள் செய்த பாக்கியம். 14.12.1990 கார்த்திகை விசாக நன்னாளில் சமாதியடைவதற்கு முன்னதாக — அதிகாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் சீடர்களின் கனாவில் தோன்றி திருப்புகழ் சுவாமியும் - அருகில் ஆயத்த நிலையில் சமாதிக் கட்டடத்தையும் காட்டி மறைந்தராம் அன்றே. அவர் சமாதியடைந்து காரைக்கால் மயானத்தில் சப்பாணி கொட்டிய இருக்கை நிலையில் சமாதிக் கோவிலானார். சமாதிக் கோவில் இன்றும் அருள் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. இவரைப் பற்றிய தகவல்களையும் - படங்களையும் சீடர்கள் மூத்ததம்பி செல்வராசா, மார்க்கண்டு சிவஞானம் இருவரும் தந்துதவினார்கள்.

சாமி கிருஸ்ணர்



அத்திபுரக் கந்தன் தெற்கு வீதியில் சாமி கிருஸ்ணர் சமாதி

இலகடி – காரைநகரில் 05.06.1922ல் அவதரித்த இவரது இயற்பெயர் முத்தர் கிருஸ்ணர். தாயார் முத்தாச்சியார். ஒரு கதிர்காம முருக பக்தர். பாத யாத்திரையாக கதிர்காமம் போய் வருபவர். தாயாரைப்போன்றேசாமிகிருஸ்ணரும்பலதடைவ பாத யாத்திரையாக கதிர்காமம் போய் வந்தவர். 1947ம் ஆண்டு கதிர்காமத்திலிருந்து வேல் கொண்டு வந்து தாயார் முருகன் படம் வைத்து வழிபாடு செய்த இடத்தில் பிரதிஸ்டை செய்து கதிர்காம பாணியில் வழிபாட்டினை ஆரம்பித்தார். இவ் வேல் ஸ்தாபிதத்தின் மேல் - முருகன் சன்னிதானத்தில்

**-திருநீறு போட்டு அடியவர்களுக்கு நோய் பிணி தீர்த்தல்.**

**-வேப்பிலை கொண்டு பஞ்சாட்சர மந்திரம் ஜெபம் செய்து பார்வை பார்த்தல்.**

**-தடைவெட்டி தாமதித்த கருமங்கள் நிறைவேற்றுதல்.**

**-நாவூறு, கண்திருஷ்டி நீக்குதல்.**

**-களவு, கெடுதி, சிறை போன்றவற்றை** தெரியப்படுத்தல்.

போன்ற பலவற்றை அச்சொட்டாக கூறத் தொடங்கினார். இவற்றை கதிர்காம வேலின் அருளாட்சி என்று கூறுவார். அத்தோடு தாய்மாமன் கந்தையா உபாத்தியாரிடம் ஜோதிடக் கலையையும் கற்று ஜாதக கருமத்திலும் சிறப்பாக பலாபலன் கூறினார். முருகப் பெருமான் பல தடவை இவரை நெறிப்படுத்தி ஒளிரச் செய்தார். அடியவர்களிடம் அன்பாகப் பழகுமிவரை மக்கள் "சாமியப்பு"என்று வாஞ்சையுடன் அழைக்கலாயினர். இவராகவே பாடலை யாத்து பண்ணிசையுடன் இனிமையாகப் பாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986ம் ஆண்டில் கோவில் விசாலமானதாகக் கட்டப்பட்டு புனராவர்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. கதிர்காம முறையிலே திரைச் சீலை முன்பாக பூஜை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சனிபகவான் - குருபகவான் -கிருஸ்ணர் பகவான் ஆகிய மூன்று தெய்வங்களும் ஸ்தாபிக்கப்பட்டு மேலதிகமாகப் பூஜிக்கப்படுவது இங்குள்ள தனிச்சிறப்பு. ஆவணி திருவோண நட்சத்திரத்தினை தீர்த்த உற்சவமாகக் கொண்டு – முன்னேயுள்ள பன்னிரண்டு நாட்களும் அலங்கார உற்சவம் விமர்சையாக நடைபெறும். ஏனைய திருக்கார்த்திகை, பௌர்ணமி, கந்தஷஷ்டி விரதம், வெள்ளிக்கிழமை போன்ற முருகனுக்குரிய விசேட நாட்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் - மாதாந்தம் கடைசி சனிக்கிழமையிலும், ஏனைய உற்சவ காலத்திலும் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபத்தில் அன்னதானமும் வழங்கப்படுகின்றது.

பக்தர்கள் வேப்பிலையுடன் வந்து தத்தமது துன்பங்கள் துயரங்களை தெரிவித்த வண்ணம் கோவிலை வலம் வந்து வணங்க அவை பறந்தோடுகின்றன என சாமியப்பு முருகனின் அருள்கடாட்சதத்தை வியந்து அடிக்கடி கூறுவார். இவரது மனையாட்டி வள்ளியம்மை, கணவருடன் கருத்தொருமித்து வாழ்ந்த தெய்வப்பெண். வாழ்நாள் பூராகவும் கணவனுக்கும் - முருகனுக்கும் தொண்டு செய்து 1993ம் ஆண்டு இறைபதமடைந்தார்.

**"சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசிமூலம்**
**அத்தரை பணிசம்பந்தர் ஆனிமாமகத்தில் அந்த**
**முத்தமிழ் வாதவூரர் - முதிய நல் ஆடி தன்னில்**
**சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்"**

என்ற சமய குரவர் நால்வரதும் முத்திக் காலத்தைப் போல சாமி கிருஸ்ணரும் 2009ம் ஆண்டில் திருஞானசம்பந்தர் குருபூஜை தினமான – வைகாசி மூல நட்சத்திரத்தில் தனது எண்பத்தேழாம் வயதில் சமாதியானார். அவரின் விருப்பப்படி கோவிலின் தெற்கு வீதியில் புதிய அன்னதான மண்டபத்தின் அருவேடக்கு நோக்கி சப்பாணி கொட்டிய இருக்கை நிலையில் சமாதி வைக்கப்பட்டு மேலே சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு தினமும் பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன. சமாதியடையும் நேரத்தில் வானத்தில் ஒளிக்கீற்றுக்கள் தென்படுமென முன்னதாக சாமியப்பு கூறியபடி ஒளிக்கீற்று தென்பட்டதாக அயலவர் தெரிவிக்கின்றனர். மேற்படி கோவில் 2012ம் ஆண்டில் முருக பக்தர்கள் ஒன்றிணைந்து – பாலஸ்தாபனம் செய்து நவீன முறையில் கட்டி புதுப்பித்து சிறப்பாக செல்வச்சன்னதி ஆலய குருமாரினால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு – அருள்மிகு முருகனாக சாமியப்பு கால நடைமுறைகளின் படியே மூன்றுகால பூஜைகள் நடைபெறுகின்றன. இப்படியாக பற்பல வழிகளில் அடியவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த சாமி கிருஸ்ணர் இன்றும் சமாதியாக இலகடியிலிருந்து அருளொளி பரப்பி அடியவர்களையும், கோவிலையும் பரிபாலித்து வருகின்றாரே என்பதே உண்மை. தகவல்கள் மகள் கலைவாணி, பேரன் திரிபுராந்தகன் புகைப்படத்தினை – புகைப்படக் கலைஞர் அருளம்பலம் திருநாவுக்கரசு இலவசமாகத் தந்துதவினார்.

நாமும் பற்றறுத்து பிராண வாயு சித்தரின் இயக்கமாகையால் நாசி வழி இயங்கும் இடகலை – சந்திர நாடி, பிங்கலை – சூரியநாடி, சுழுமுனை - மூலாதார ஒழுங்குபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ***மூலாதாரம்-குதம்-திருவாரூர்***
- ***ஸ்வாதிட்டானம்-குய்யம்-திருவானைக்கா***
- ***மணிபூரகம்-தொப்புள்-திருவண்ணாமலை***
- ***அனாகதம்-இதயம்-சிதம்பரம்***
- ***விசுத்தி-அடிநாக்கு-திருகாளாத்தி***
- ***ஆக்ஞை-நெற்றி-காசி(வாரணாசி)***

ஆகிய ஆறு நிலைகளில் நிலை பெறச் செய்து சித்திபெற்று சித்தர்களாகலாமன்றோ!

**ஓம் நமசிவாய, சிவாய நம ஓம்!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மண்ணே

காரை விசாகன் ....

வங்கக் கடல் சூழ்ந்து வடிவமைத்த தீவகமே
வந்திங்கு போவோர்க்கு நீ என்றும் தீவனமே

பொங்கும் அலையில் உன்னை பொத்தி வைத்தாள் கடலன்னை
எங்கும் புகழ் பரப்பி வீசுகின்றாய் உன் கண்ணை

கடலலையின் காவலில் நீ உடல் நிமிர்த்தி காலுகின்றாய்
உடல் விளிம்பில் கடல் நீரை உரச வைத்த ஊரானாய்

நெய்தலொடு மருதமென இரு நிலங்கள் நீ கொண்டாய்
வெய்யிலொடு மாரியென இரு பருவம் நீ கண்டாய்

காரைச் செடியில் நீ அன்று ஏன் உடை கொண்டாய்
காரை தீவென்று அன்று முதல் பெயர் கண்டாய்

தீவை எடுத்து விட்டு நகரை அதில் வைத்து
பாவை உனை பார்த்து காரை நகர் எனறார்

இலங்கா புரியதனில் ஊரெல்லாம் உன் நாமம்
துலங்கா இடமில்லை இது என்ன ஒரு மோகம்

கிழக்கென்றும் மேற்கென்றும் பெருஞ்சாலை பிரிந்து செல்ல
பளிச் சென்று உன் முகப்பு சிரிப்பழகை என்ன சொல்ல

தென்னை மரத் தோப்புகளும் பனை மரத்து காடுகளும்
உன்னை அழகு செய்ய விண்ணை நீ தொட்டு நிற்க

மணலால் கரை நிரப்பும் சவுக்கு மர கடற்கரை
மனமாய் முகாமமைத்தார் நிரந்தரமாய் கடற்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து சிதம்பரமும் ஈச்ச மரக் காடுகளும்
ஈழத்து வாசிகளை ஈர்ந்திழுக்கும் கடற்கரையும்

பாலத்து மீன் தேடி பறந்து வரும் பட்சிகளும்
ஆழத்து கடல் சூழ்ந்த அன்னையே உனைச்சாரும்

உன் பேரை உலகு சொல்ல நீ கொண்டாய் கடல் கோட்டை
காண் போரை கவரும் வகை கட்டி வைத்தார் வெளிச்ச வீட்டை

கருவாடு தனை சுட்டு தனிப்பனையின் கள்ளெடுத்து
தெருவோடு நாம் கூடி உறவாடி உண்டதுண்டு

உன் ஊரில் நாம் தோண்ட உவர் நீராய் ஊற்றெடுக்க
நன் நீரை ஆங்காங்கே நல்லவள் நீ ஊறவைத்தாய்

நன்னீர் குறைவென்ற ஒரு குறைதான் வேறில்லை
என்னூரில் நான் சொல்ல அது பெரிய குறையில்லை

பன்னீரைத் தெளித்து அதிலே படுத்துறங்களை வைத்தாலும்
என்னூரில் இருக்கும் சுகம் போலுலகம் எங்குமில்லை

அன்னை அவள் பிள்ளைகளை அரவணைத்து தன் மடியில்
கண்ணை இமை காப்பது போல் எம்மை நீயும் காத்து வந்தாய்

உன் கடலின் மீன் சமைத்து ஊரரிசிச் சோறு தின்று
பொன் குவித்த பூமி உன்னில் வன்செயலின் தாக்கம் அன்று

ஊரைப் பிடிக்க வென்று ஊரூராய் எமை அலைத்த
போரைக் கண்டு நீயும் பொறுமையாய் இருந்ததேனோ?

உன்னை தனிய விட்டு உயிருக்காய் அஞ்சிவந்த
என்னை நான் வெறுக்கிறேன் என்னவளே என் மண்ணே

பகை முடிந்து பயமோய்ந்து பறந்தோடி வந்து பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகை வளர்ந்த முகமாக சிரித்த நிலம் இருந்ததென்ன

வெந்நீரில் குதி என்று நீ சொன்னால் குதித்திடுவேன்
கண்ணீரில் உனை விடுத்தேன் என்னூரே மன்னிப்பாயா?

சமுத்திரத்தின் பேரலைகள் தரை அழித்த வேளையிலும்
சரித்திரத்தின் தேவி நீயும் தலை நிமிர்த்தி காத்து நின்றாய்

உள்நாட்டில் போர் நடக்க ஊரெல்லாம் இடம் பெயர
உன்பற்று கொண்ட சிலர் உன்னுடனே தங்கிவிட

உயிர்ப் பற்று கொண்ட பலர் உன்னை விட்டு ஓடிவிட
ஊமையென நீ தினமும் உள்ளுக்குள் அழுதாயோ?

புரங்களை எரித்த சிவன் வீற்றிருக்கும் ஊர் இதுவோ
கரம் குவித்து வேண்டுகிறோம் பசுமையாய் மாற்றிடுவோம்.

விளை நிலங்கள் நிறையவுண்டு விட்டநிலம் நிறையவுண்டு
அழைக்கின்றோம் நாங்களின்று சென்றவரே வருகவென்று

ஆளில்லா வீடுகள் அடிக்கொன்று இங்குண்டு
ஆண்டவர்கள் அதை விட்டு அடியோடு போனதெங்கு

என் ஊரெ என் மண்ணே கத்துகிறார் கூட்டத்திலே
அவர் பிறந்த வீடிங்கே பற்றைகளின் மத்தியிலே

கடல் வந்து கௌவுதம்மா உன் உடலை மெல்ல மெல்ல
நடவடிக்கை உடனெடுக்க யாருமில்லை என்ன சொல்ல

சிலோனும் நோர்வேயும் கைகோத்து கப்பல் செய்த
சீனோரை அழியவிட்டு வளமொன்றை ஏன்மறைத்தார்

வெளிச்சவீட்டு வீதிசெய்வீர் வெளிச்சவீட்டை புனரமைப்பீர்
வெளிச்சமதில் ஏற்றி வைத்து வெளிச்சவீட்டை கட்டிடுவீர்

கரை நெடுக கற்பரவி கடலரிப்பை நிறுத்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் அன்னையவள் உடற்பரப்பை பேணிடுவீர்

சாமிக்கு செலவு செய்யும் பணத்தின் பெரும்பங்கை – எம்
பூமிக்கு செலவு செய்து புதுவூராய் மாற்றிடுவோம்.

வழக்கொழிந்து போய்விட்ட சாதிப்பாகுபாடு
வாழ்கிறது எம்மூரில் நீ வெட்கப்படு

உன்னை அழகு செய்யும் தென்னை பனை வளமெல்லாம்
கண்ணை மூடியிங்கே களவாய் வெளிச்செல்லுதம்மா

உன்னை நனைத்து விடும் ஒரு துளி மழை நீரும்
பொன்னைப் போன்றதன்றோ சேமிக்க வழிகாணும்

உலகத்தின் உச்சிவரை உன்னை உயர்த்தி வந்து
திலகமென அதில்வைத்து திறமை பல செய்திடுவோம்.

பூகோள வரை படத்தில் புது நகராம் இதுவென்று
புவி வாழ்வோர் புகழும் படி புள்ளியிட்டு காட்டிடுவோம்.

வளமெல்லாம் உள்ளெடுப்போம் வந்தோரை வாழவைப்போம்.
குளம்குளமாய் நாம் அமைத்து குடிநீராய் மாற்றிடுவோம்.

விளையா நிலம் தேடி விதை நெல்லை தூவிடுவோம்
மழையால் அது நனைந்து முளைக்குமென நம்பிடுவோம்.

மரங்களை தரை விழுத்தும் மனங்களே கேளுங்கள்
மரங்களால் தரை நிரப்பும் மாற்றத்தை காணுங்கள்

என்மண்ணை முத்தமிட்டு என்கண்ணில் ஒற்றுகிறேன்
விண்ணை நீ முட்டிடுவாய் என் மண்ணே

பிரபஞ்சம் உள்ளவரை பிறந்த மண்ணே நீ வாழ்க
அரவங்சேர் ஆண்டவனின் அடியேந்தி நீ வாழ்க

வாழ்நாள் முழுவதிலும் தோளேந்தும் என்மண்ணே
நாள் நீண்டு வாழியவே என் மண்ணே என் மண்ணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச கடற் பொருண்மிய வளம்

**தி.தவரத்தினம்**

இலங்கையின்வடபகுதியில் யாழ் மாவட்டத்திற்கு மேற்காக கிழக்கு நெடுங்கோடு 79°50' இருந்து 81° 00' வரையும் அகலக்கோடு 9°40' - 9° 47' வரை உள்ளடக்கிய கேந்திர அமைவிடத்தைக் கொண்டதாக காரைநகர் விளங்குகின்றது. மா இருந்து விட்டு பிரச்சனை பேயாய் இலங்கையின் வடபகுதியில் யாழ் மாவட்டத்திற்கு மேற்காக கிழக்கு நெடுங்கோடு 79°50, இருந்து 81° 00, வரையும் அகலக்கோடு 9°40, - 9° 47, வரை உள்ளடக்கிய கேந்திர அமைவிடத்தைக் கொண்டதாக காரைநகர் விளங்குகின்றது.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட காரைநகர் கிழக்கு மேற்காக மூன்று மைல் அகலமும் வடக்குத் தெற்காக நாலு மைல் நீளமும் உடையது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே 1878 இல் ஆங்கிலேயரான எவ்.எவ். ஆம்ஸ்ரோங் அவர்கள் காரைநகர்க்கும் குடாநாட்டுக்கான தரைவழி வாயிலான பொன்னாலைக்கும் காரைநகருக்கும் கடல்நீரேரி ஊடாகக் கற்பாதை அமைத்தார்.

அதற்கு முற்பட்ட காலம் கடல் வழி போக்குவரத்து மார்க்கமாகவே தீவில் இருந்து ஏனைய இடங்களுக்கான போக்குவரத்து இருந்தது. பண்டைய தமிழ் மன்னர்களான வெடிஅரசன் ஆட்சி அதிகாரம் செலத்திய பிரதேசமாகவும், கடல் வணிகம் சார் புவியியல் கேந்திர நிலையமாகவம் காரைநகர் விளங்கியது. காரைநகருக்குத் தெற்காக ஊர்காவற்றுறையுடன் தொடர்புபட்ட துறைமுக இறங்கு துறையும் மேற்காக கோவளம் துறைமுகமும் காணப்பட்டது. இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக ஆங்கிலேயாரல் கட்டப்பட்ட கலங்கரை வெளிச்சவீட்டையும் (Light House) இன்றும் காணலாம்.

காரைநகர் பிரதேசம் ஒரு சிறப்பு வாய்ந்த புவியல் அம்சத்தைக் கொண்டுள்ளது. காரைநகரின் கிழக்குப் புறமாகக் கடல்நீரேரியும். ஏனைய மூன்று பக்கமும் இந்து மாகாசமுத்திர தொடர்புடைய கடலாகவும் விளங்குவதோடு பல்லுருவகடற்கரை அமைப்பைக்கொண்டுள்ளது.

தரைத்தோற்றத்தில் சிறப்புவாய்ந்த நில அமைப்பைக் கொண்டது போல கடல் அடித்தள அமைப்பிலும் மிகப் பெறுமதியான பொருளாதார வளத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. பருவகால மழைநீர் சிறப்புற வெளியேறத்தக்க முகாமைத்துவ பாதைகளூடாக வெளியேறி கடல்வளத்துக்கு உயிர்ப்பூட்டுகின்றது. இதனால் சிறப்பான நீர்வளம் கொண்ட பகுதியாக காரைநகர் அமைவதை நோக்கலாம். மேலும் கிழக்கு கடல்நீரேரி கடலின் கருவறையாகவும விளங்குகின்றது. இக்கடல்நிரேரி நிலைபேறான பேண்தகு அபிவிருத்தி கருதி சிறந்த முகாமைத்துவமுடைய பிரதேசமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் நீரேரி பல்வேறுபட்ட உயிர்பல்வகைமை கொண்ட தாவரங்களையும் அதேபோல்கடல்நுண்ணுயிர் விலங்குகளானகாணப்படுகின்றது.

காரைநகர் சிறப்பான ஆழம் குறைந்த கடல் அடித்தள கண்டமேடையைக் சூழவுள்ள பிரதேசமாக விளங்குகின்றது. வடக்கிழக்காக பிதுரு மேடையின் மீன்வளத்தையும் தென்மேற்காக வொஜ் கடல் அடித்தள மீன்பண்ணையின் வளத்தையும் ஒருங்கே பெறக் கூடியதாக அமைந்துள்ளது. ஆத்தோடு ஒரு சீரான சராசரி வற்றுப் பெருக்கு மட்டத்தையும் கொண்டதாக உள்ளது. மேலும் கடற்காடுகள் என அழைக்கப்படும் உயிர்ப்பான முருகைக் கற்பாறைத் தொடர்களையும் பல முருகைக்கல் இனங்களையும் கொண்டதாக கடல்வளத்துக்கு வலுச்சேர்த்து நிற்கின்றது.

தீவைச் சூழவும் மீன்பிடியைப் பிர-தான நோக்காகக் கொண்டு மீனவர் தமது தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களால் ஒன்பது கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. அவையாவன.

- சிவகௌரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்-காரைமத்தி
- ஊரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பிட்டிஎல்லை
- பாலாவோடை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- ஐயனார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.
- ஸ்ரீமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (வேரப்பிட்டி)
- மருதமலை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- நீலங்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

ஆகியன தமது மீன்பிடித் தொழிலை பிரதான நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. சில சங்கங்கள் மீன்பிடி துணைநலச் சேவைக-ளான இயந்திர உபகரணங்களைத் திருத்துதல், மீன்பிடி உபகரணங்கள் விற்பனை, மீன் ஏலம்விடும் சந்தைகளை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

ஆயினும் காரைநகர் கடல்வளம் பரந்துபட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கும் முகாமைத்துவத்துக்கும உட்பட வேண்டிய தேவை உள்ளது. அந்தவகையில் அந்த வளத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி நோக்குவோம்.

1. கடல்தாவர வளர்ப்பு
2. கடல் விலங்கு வளர்ப்பு
3. மீன்பிடியும் அதன் துணைநலச் சேவைகளும்.
4. அலங்கார மீன்வளரப்பு.
5. சுற்றுலாத்துறை
6. படகு கட்டுமானம்
7. ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.

ஆகிய பல்வேறுபட்ட பொருளியற்துறைகளாக விரிவடைந்து கொண்டு செல்லும். ஆயினும் இன்று அபிவிருத்தி என்ற சொற்பதத்துடன் பல அமைப்புக்கள் காணப்பட்டாலும் தொழில்சார் புதிய பேண்தகு அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அந்தவகையிலே காரைநகருக்கு வடக்கிழக்காக கடல்நீரேரியில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பளவில் 1980களில் நீர் உயிரியல் வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அது பின் கைவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2010 அளவில் பதியதொரு புத்தாக்கத் திட்டமாக மீண்டும் சமூக அமைப்புடன் இணைந்து இயற்கையான முறையில் முறையில் உயிரி வளர்ப்பு முன்னெடுக்கப்பட்ட திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வேளை அதிகார பலத்தினாலும், தீய எண்ணங்களினாலும் அவை இடைநிறுத்தப்பட்டது.

இதனை மீள ஆரம்பிக்கப்பட எழுத்து மூலமாக விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிப்பட்டமை எமது சமூகமே எமக்கு எதிரிடையாக உள்ளமையைப் புலப்படுத்தி நிற்கின்றது ஆகவே நேர்மைத்திறனும் நெஞ்சுறுதியும் வாய்ந்த நிர்வாகிகள் எமது பிரதேச வளங்களின் அபிவிருத்திக்கு உதவுபவர்களாக மாற வேண்டும். மாறாக பதவியின் பெயராலும் தேவையற்ற சட்டமுறைகயைக் காரணம் காட்டியும் உயிர்ப்பான அபிவிருத்திகள் செயற்படுவதைத் தடுக்கக் கூடாது.

உலகில் கடலைப் பயன்படுத்தி பலநாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. அதேவேளை உலக சனத்தொகைப் பெருக்கம் காரணமாக உணவு உற்பதியும் வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது அந்தவகையில் உலக உணவு உற்பத்தி நிறுவனம்.(FAO) பல கடல்சார் உணவு உற்பத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத்துடன் அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது பொறுப்பு வாய்ந்த சமூகக் கடமைகளை ஆற்றி வருகின்றன. இவர்களின் உதவியுடன் எமது காரைநகர் கடல் பொருண்மிய வளத்தைப் பெருக்குவோம்.

இவற்றுக்காக வளமுகாமைத்துவத்தைச் சீராகக் கடைப்பிடிப்போம். இன்று கடல் நீரேரியில் சுலபமாகப் பலர் பலதொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ஆயினும் அவர்கள் வளப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதில்லை மீனவர்களிடையே பல்வேறுபட்ட தொழில்சார் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றது. எனவே மரபுசார்ந்தும், மரபு சாரததுமான தொழில்பாடுகளின் போது குறிப்பிடும் மீன்பிடிச் சங்கங்களின் முகாமைத்துவக் கட்டமைப்பிலுள்ளோர் தகுந்த அறிவு, திறன், மனப்பாங்கைக் கொண்டவர்களாக விளங்கவேண்டும். இது ஒரு கூட்டிணைவு தொழிற்பாட்டு முறை. எனவே எமது மாசுபடா கடல் வளத்தை மேலும் பேணி விதைக்காமலே விளைவைப் பெறக்கூடிய இத்தொழில் வளத்தில் புதிய நுட்பங்களையும் சட்ட திட்டங்களையும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஏற்றுமதிக்குரிய பொருளாதார முக்கியத்துவமுடைய கருவண்டன் இறால் வெள்ளூ இறால் தாளம் இறால் ஆகிய இறால் இனங்களையும் பெற்றுக்கொள்வதோடு ஏனைய வளர்ப்புக்குரிய இனங்களாக பின்வருவனவற்றைக் காணலாம்.

1. பெருநண்டு
2. நீலாக்காலி நண்டு
3. சிப்பிகள் மட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிங்கி இறால்

5. கணவாய்

போன்றபல்வேறுஉயிர்களைச்சிறப்பானமுறைக-ளில் வளர்ப்புச் செய்யலாம். இவை எமது.பிரதேச கடல்களில் அதிகமாகப் பிடிக்கப்படுகின்றது. எனவே எமது கடல்வளத்தை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பொருளாதாரத்துறையில் வலுமிக்கவர்களாக மாறுவோமாக இருக்கும் வளத்தைக் கொண்டு இல்லாமையை நீக்குவோமாக.


உசாத்துணை

1.தி.தவரத்தினம் நீருயிர் வளம், 25வது ஆண்டுமலர் வெளியீடு, சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம். 2012

2.தி.தவரத்தினம், காரைநகருக்கும் பொன்னாலைகக்கும் இடைப்பட்ட கடல் நீரேரியின் புவியியல் நிலைமைகளும் உற்பத்திப் போக்கும, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆய்வுக்கட்டுரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இசையில் நவரசங்களின் பங்கு"

**செல்வி.பரமேஸ்வரி கணேசக்கம்பர்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**இசைத்துறை,யாழ்பல்கலைக்கழகம்.**

## முன்னுரை

இசையானது மனித வாழ்வில், தாய் தன் குழந்தையைத் தாலாட்டித் தூங்க வைப்பது முதல், குழந்தை விளையாடும் போதும், வளர்ந்து தொழில் புரியும் போதும், சமய அனுட்டானங்களிலும், காதல் வாழ்விலும் தொடர்ந்து வரும். இசை மனிதம் இறக்கும் பொழுது கூட ஒப்பாரியாக வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கக் காரணம் அதன் மீதுள்ள ரசனையே எனலாம். இசைக்கு மனிதர்கள் மட்டுமன்றி பறவைகள், விலங்குகள் ஏன் இறைவன் கூட வசப்பட்டிருக்கிறான். உதயகுமாரன் மதங்கொண்ட யானையை தன் இசையின் துணைகொண்டு அடக்கினான் இராவணன் தன் இசையின் திறத்தால் இறைவனைத் தன் வசமாக்கினான். இவை எல்லாவற்றிற்கும் காரணம் இசையின் ரசனையே எனலாம். இரசம் என்பது சுவை எனப்படும் உணர்ச்சியினால் உண்டாகும் ஆத்மாவில் ஏற்படும் ஒளி அல்லது இன்ப அலைகளை இரசம் எனலாம். இராகங்களை பாடும் பொழுது பலவிதமான இரசங்கள் வெளிப்படுகின்றன. அதாவது நவரசங்கள் என்று சொல்லக்கூடிய சிருங்காரம், கருணை, வீரம், ஹாசியம், கோபம், பீபத்சம், பயம், சாந்தம், அற்புதம் ஆகிய ஒன்பது இரசங்களும் உணர்வு நிலைகளாக நின்று இராகத்தை சிறப்பிகின்றன. இவை பற்றி விரிவாக நோக்குவோம்.

## இரசனை

இரசனை என்பதனைச் சுருங்கச் சொல்வதானால் ரசிப்புத் தன்மையென்று குறிப்பிடலாம். பொதுவாக தாயினுடைய கருவறையில் குழந்தை இருக்கின்ற பொழுது இசையினை இரசிக்கக் கற்றுக் கொள்கிறது. குறித்த கலைப்படைப்பு ஒன்றின் ரசிப்புத் தன்மையானது. படைப்பாளியிலும் ரசிகனிலும் தங்கியுள்ளது. எனலாம். படைப்பு இருக்கின்ற பொழுது அப்படைப்பினுடைய ரசனையும் உயிர்த்துடிப்பாக அமைகின்றது.

மனத்தைக் கட்டுப்படுத்தும் தியான நிலையே இசை. மனமே இசையை ரசிக்கின்றது. ஒவ்வொருவர் மனதிலும் ரசிப்புத்தன்மை என்பது இயல்பாகவே காணப்படும். ரசிப்புத் தன்மை இருந்தாலே இசையை ரசிக்க முடிகிறது ஒவ்வொருவருடைய ரசிப்புத் தன்மையும் தான் இசையை மேன்மைப்படுத்துகிறது. அத்தோடு இசையை உயர்வடையச் செய்கிறது.

## இராகங்களில் நவரசங்கள்

இராகம் என்பது ஸ்வரசேர்க்கையால் உண்டாகும் நாதம் என்றே அறியப்படும் மனத்திற்கு ரஞ்சனையைக் கொடுக்கும் தன்மையைக் கொண்ட இராகமானது, அழகு, பலவண்ணமிகு நிறம், அன்பு, இரக்கம், காதல், களிப்பு, செம்மை என இன்னும் பல பொருள் தரும் உரிச்சொல் ஆகும் இராகங்களைக் காதாற் கேட்டு உணருகிறோம், திட்டவட்டமான ஸ்ருதிகளுடன் கூடிய ஸவரச் சேர்க்கை ஒரு கிரமத்தை ஒட்டி இராகங்களில் வருவதனால் இராகங்களுக்குத் தனி இசை வடிவங்கள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகங்கள் நவரசங்களுடன் பொருத்தியமையும் போது அவற்றுக்குரிய உணர்ச்சிகளை உணர்கிறோம். உதாரண-மாகச் சில இராகங்களைக் கேட்கும் போது உள்ளம் உருகுகின்றது. சில இராகங்கள் சாந்தத்தையும், அமைதியையும் தருகின்றன. சில இராகங்களைச் செவிமடுக்கும் போது எமது மனம் எம்மையறியாமலே பரவசப்படுகின்றது. இவ்வகையில் ஒவ்வோர். இராகமும் ஒவ்வோர் உணர்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. இராகங்கள், 'ஸ்வபாவிகம்' எனும் முப்பத்து மூன்று மெய்ப்பாடுகளையும் (உணர்வுகளையும்) வெளிப்படுத்துகின்றன.

### சிருங்காரம்

உலகின் அடிப்படைத் தத்துவமே சிருங்காரம் என கவிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். சிருங்காரத்திற்கு ரதி நிலையான ஸ்தாயிபாவம். உலகில் தூய்மை, புனிதம் மிக்க ஒளி கொண்டு கண்களுக்கு விருந்தளிப்பது எதுவோ அதுவே சிருங்காரம் என்று கூறப்படுகின்றது.

இசை உருப்படிகளில் காதல், பிரிவுத்துயர், சோகம் போன்ற சிருங்கார ரஸ பாவத்தை வெளிப்படுத்துபவையாக பதம், ஜாவளி, அத்டபதி போன்ற வகுப்புகள் விளங்குகின்றன.

சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் இராகங்கள் :- கல்யாண, நாட்டை, மோ-கனம், கமாஸ், சுருட்டி, உசேனி.

### ஹாஸ்யம்

புன்னகை மற்றும் சிரித்தல் ஹாஸ்யம் எனப்படும். பொருத்தமற்ற செயல்களை செய்தல், வர்ணனை செய்தல் என்பனவும் ஹாஸ்ய ரஸத்தை ஏற்படுத்தவல்லன. மேலும் ஹாஸ்யம் இரண்டு வகைப்படும்.

1. தானே சிரித்தல்
2. பிறரைச் சிரிக்க வைத்தல் (ப்ராஸ்தம்)

ப்ராம கலசங்களை தேவதையாக கொண்டது. இதன் நிறம் வெள்ளை இராகங்களாக மோ-கனம்- காபி- கேதாரம் - நளினகாந்தி சிந்துகன்னட — கதனருதூகலம்.

### கருணை (இரக்கம்)

சோகம் என்பதனை ஸ்தாயி பாவமாக கொண்டது கருணை சோக ரஸம் இருவகைப்படும்

**தனக்கு வந்த துன்பத்தால் வருந்துதல்**
**பிறர் துன்பம் கண்டு வருந்துதல்**

சாதாரன காந்தாரம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸ்வரங்களை கொண்டதாகவும் விளங்குகின்றது. இசையில் புலம்பனின் ஊடாக வெளிப்படுத்தலாம் அதாவது துன்பத்தின் வெளிப்பாடு சோகமாக வெளிப்படுகின்றது. இதனாலேயே பிணத்திற்கு முன்பாக ஒப்பாரி பாடப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் கண்ணீர் சொரிதல், சொல்பிதற்றல், நீர்மைச் சொல் - பிதற்றல் எனக் கூறுகின்றார்.

**"அவலத்து அபினயம் அறிவரக்கிளம்பின்**
**கவலையோடு புணர்ந்த கண்ணீர் மாரியும்**

என தொடங்கும் பாடல் குறிப்பிடுகின்றது. கருணா ராகத்திற்குரிய இராகங்களாக, முகாரி- சகானா- ஆஹிரி- புன்னாகவராளி — நீலாம்பரி- சாவேரி- கானடா, பைரவி,

### ரௌத்திரம் (கோபம்)

எதிரி இழைத்த தீங்கினால் ஏற்படுவது கோபம், இது அரக்கர் , செருக்குள்ளவர்களின் இயற்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமாகும். ரௌத்ர ரஸத்தினை வெளிப்படுத்தும் போது கண்கள் சிவத்தல்,பற்களை நறுக்குதல், கடுமையாக வியர்த்தல், முஷ்டியினால் உள்ளங்கையில் அடித்தல் வெளிப்பாடுகளாகும். குரோத குணத்தினால் ஏற்படுவதே "கோபம்" எனவும், கூறலாம். பகைவன் செய்த தீச்செயல்களை நினைத்து மனம் கொதித்தல் குரோதம் எனப்படும், இதற்குரிய இராகங்கள் அடானா, வசந்தா, ஆரபி கம்பீர நாட்டை.

### வீரம் (பெருமிதம்)

வீரம் என்பது உற்சாகத்தை நிலையான பாவமாய் கொண்டது கலங்காமை, எடுத்த காரியம் முடிக்கும் திறமை, புலனடக்கம் போரில் நிகரில்லாத வலிமை, பகைவரை கலங்க செய்யும் திறமை, போன்றவற்றால் வீரரசம் தோன்றும். இதன் நிறம் மஞ்சள் அல்லது வெண்மை. மகேந்திரனை தேவதையாகவும், சட்சத்தையும் சதுசுருதி ரிஷபத்தையும் ஸ்வரங்களாக கொண்ட ரஸமாகும். வீர இரஸத்திற்குரிய இராகங்கள் - ஹம்சத்வனி, நாட்டை, கம்பீர நாட்டை, பிலஹறி, தேவகாந்தாரி.

### பீபத்ஸம் - (அருவருப்பு)

பீபத்ஸம் என்பது வெறுப்பு, அருவருப்பு போன்ற செயல்களால் ஏற்படுவது பொருட்களின்குறைபாடுகளினால் ஏற்படுவது பீபத்ஸம் துர்நாற்றம் சதை. எலும்பு விருப்பமின்மை என்பவற்றால் ஏற்படுவது. மகா காலனைத் தேவையாகவும் தைவத ஸ்வரத்தை ரஸபாவமாகவும் எடுத்துக் கொள்ளும். இவ் ராகத்தின் நிறம் நீலம். ஆடியார்க்கு நல்லுலார் சுருங்கிய கண்கள், பல் வெளியே வருதல், ஒடுங்கியமுகம், சோர்ந்த உடல், சொல் உழறல் என்னும் அபினயங்கள் அடங்கும் என்கிறார். இவ்வுணர்வு வெளிப்படுத்தும் இராகங்களாக :- பேகட, பீம்பிளாஸ், அடானா.

### பயானகம் (அச்சம்,பயம்)

பயம் என்பது மனிதனுடன் இயற்கையாகவே இணைந்திருப்பது. விஹாரமான சந்தங்கள் சண்டைகள், பேய், பிசாசு, கொலை, மரணம், சிறைவாசம் போன்றவற்றால் ஏற்படுவது பயானக ரசத்தின் வெளிப்பாடுகளாக கைகால் நடுக்கம், கண்கள் அசைத்தல், ஓடுதல், ஒடுங்குதல், கண்ணீர், வியர்வை, நிறமாற்றம், குரல்மாற்றம் என்பவை கூறப்படுகின்றன. காலனைத் தேவதையாகக் கொண்டுள்ள இவ்விரசம் கருமை நிறத்தை உடையது விருப்பமற்ற நிகழ்வினால் ஏற்படும் வெறுப்பினால் ஒருவரது உள்ளத்திலே உண்டாகும். மனவேதனையின் வெளிப்பாடே பயமாகும். இவ் ரஸத்தை வெளிப்படுத்தும் இராகங்களாக – கானடா, சுபபந்துவராளி, ரஞ்சனி, புன்னகவராளி.

### சாந்தம் :- (அமைதி)

சாந்தம் என்பது எல்லா உயிர்களுக்கும் இயற்கையானது பொதுவானதாயும் அமைந்துள்ளது. எல்லா ஜீவராசிகளும் சமம் என் எண்ண வைப்பது. சாந்தம் "சாந்த நிலை அடைந்தயோகிஒன்றிலும் பற்று வைக்கமாட்டான். ஒன்றையும் வெறுக்கவும் முன்வரான். அவன் உள்ளம். ஆசையும் வெறுப்பும் அற்றிருப்பதனால் சந்தனம் போல் குளிர்ந்திருக்கின்றது. அங்கு இன்பம் நிலைத்து நிற்கும். இதுசதாசிவபரம்மேந்திரர்சாந்தம்பற்றிகுறிப்பிடும் கூற்றாகும் இவ் விரஸத்தை வெளிப்படுத்தும் இராகங்கள்சாமா, நாதநாமக்கிரியை, வசந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அற்புதம் :- மருட்கை வியப்பு**

அற்புத ரசத்திற்கு அடிப்படையாக விளங்குவது ஆச்சர்யம் அதிசயமானவற்றை மனதில் காண்பதால் உண்டாகும் விரிவே அற்புதமாகும். மனிதனால் செய்ய முடியாதவற்றை செய்தல், மாயை, இந்திரஜாலம், என்பவை இவ் ரஸத்திற்கு காரணமாயின. கைதட்டல், இமை கொட்டாதிருத்தல், பிரம்மை, முதலியவை ஆச்சரியத்தின் வெளிப்பாடுகளாகும். கண்ணீர், வியர்வை மயக்கம், மயிர்க் கூச்சறிதல், குரல் மாற்றம், கண்ணீர் வியர்வை ஸ்தம்பிதம் ஆகியவை இதன் சாத்வீக பாவங்கள். சத்வகுணம் நிறைந்ததாகவும், மஞ்சள் நிறத்தைக் கொண்டதாகவும் பிரம்மாவை தேவதையாகவும் கொண்டு விளங்குகிறது. இதற்குரிய இராகங்களாக — லதாங்கி, பெஹாக், சாரங்கா என்பனவற்றை குறிப்பிடலாம்.

**முடிவுரை**

இசையில் குறிப்பாக வாய்ப்பாட்டில் சொல் இல்லாமல் அகார இகார உகாரங்களின் மூலமாக வெளிப்படுத்துவதே இராகமாகும். வாத்தியங்களில் ஸ்வரங்களின் சஞ்சாரங்கள் மூலமாக இராகமானது வெளிப்படுத்தப்படுகிறது. இந்த இராகங்களின் மூலம் ஏற்படும் பல்வேறு உணர்ச்சி வெளிப்பாடுகள் பற்றி நவரசங்களினூ டாக நோக்கினோம். நாம் கையாளும் பல்வேறு இராகங்களே மன அமைதிக்கு மருந்தாகவும், விளங்குகின்றன. இதனையே இசை மருத்துவம் என்கின்றோம். எடுத்துக் காட்டாக நீலாம்பரி இராகம் மன உளச்சலைத் தடுப்பதாகவும் ஸ்ரீ ராகம் ஜீரணசக்தியை தருவதாகவும் கதனகுதூகலம் மகிழ்ச்சியை தருவதாகவும் கூறுகின்றனர். எனவே மேற்கூறப்பட்ட ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு நோக்குமிடத்து இசையில் உயர்ச்சி வெளிப்பாட்டில் நவரஸங்களின் பங்கு மிகவும் முக்கியத்துவமுடையதாக கருதப்படுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தேசத்தின் எழுச்சி

ஞா .துஷாஜினி
தரம் :- 10
யா/கலாநிதி.ஆ.தியாகராசா ம.ம.வி

துயரமது தேங்கி நிற்கும் இலங்கையிலே
தவழுகின்ற யுத்தப் புயல் ஓய்ந்திட வேண்டும்
மயக்கத்தில் தூங்கு கின்ற இதயங்களை
மனிதநேய கரங்கள் வந்து எழும்பிட வேண்டும்.

பயத்துடன் வாழுகின்ற மாந்த ரெல்லாம்
பரவசமாய் வாழுகின்ற நிலை வர வேண்டும்
அயர்ந்து போன எங்கள் மக்கள் மனங்களிலே
அமைதி வந்து உற்சாகம் ஊட்டிட வேண்டும்

யுத்த மழை கொட்டு கின்ற தேசத்திலே
புத்தம் புது சாந்திமாரி பொழிந்திட வேண்டும்
ரத்த ஆறு ஓடுகின்ற பூமியிலே
றம்பியமாய் அமைதிப் பூக்கள் பூத்திட வேண்டும்

சித்த மெல்லாம் கலங்கி வாழும் மானிடரை
சமாதானச் செய்தி வந்து தேற்றிட வேண்டும்
புத்தனது பௌத்தம் வாழும் புனித நாட்டில்
போர் அகன்று புரிந்துணர்வு பெருகிட வேண்டும்

வருங்கால சந்ததிகள் வாழும் வகையிலே
வளமான தேசத்தை ஆக்கிட வேண்டும்
ஒரு காலம் வர வேண்டும் முன் போலவே
எதிர் காலம் அது கண்டு மகிழ்ந்திட வேண்டும்.

சிங்களவர் தமிழரோடு, முஸ்லீம் பேசுர்
சொந்த மண்ணில் உரிமையோடு வாழவேண்டும்
சிங்களமும் செந்தமிழும் இந்த மண்ணிலே
சகோதர மொழிகளாய் கரும மாற்றிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன பேதம் மொழி பேதம் கொண்டு நாங்கள்
இங்கு வாழ்தல் அறிவீனம் உணர்ந்திட வேண்டும்
இனங்கள் நான்கு வாழுகின்ற அன்னை நாட்டில்
எல்லோரும் சோதரர்களாய் வாழ்ந்திட வேண்டும்

"இரு மொழிகள் ஒரு நாடு" என்று சொல்வார்
"ஒரு மொழி இரு நாடு" ஏற்றிட வேண்டும்
ஒரு மனதாய் ஒன்று கூடி என்றும் நாங்கள்
எமது தேச எழுச்சிக்காய் உழைத்திட வேண்டும்

**கலை இலக்கியப் போட்டி**

**கவிதை எழுதுதல் கனிஷ்டபிரிவு**

**பிரதேச மட்டம் :- 1ம் இடம்**

**மாவட்ட மட்டம் :- 2ம் இடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுளை அதிகரிக்கும் உத்தி

எந்திரி ச. சர்வராசா
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
யாழ்ப்பாணம்

மனிதனாய்ப் பிறந்த எல்லோருடைய ஆயுட்காலமும் ஒன்றாய் இருப்பதில்லை. ஆனால் அதிக ஆயுள்காலம் வாழவே எல்லோரும் விரும்புகிறோம். இது சிலருக்குச் சாத்தியமாகின்ற போதிலும் மிக பெரும்பாலான பேருக்கு அசாத்தியமாகவே இருக்கிறது. ஆயுளை அதிகரிக்க ஏதாவது உத்தி இருக்கிறதா? என்ற கேள்வி கேட்டால்" இல்லை, தெரியாது" போன்ற பதில்கள் தான் அதிகமாய் வரும். ஆனால் உண்மை என்னெவென்றால் ஆயுளை அதிகரிக்கும் வழிகள் இருக்கின்றன என்பதே ஆகும். அந்த வகையில் மிகவும் எளிய ஒரு வழியை எமது சித்தர்கள் கூறி சென்ற அந்த உன்னத வழியை இந்த கட்டுரையின் வாயிலாக சொல்ல முயலுகிறேன்.

பிறந்தது முதல் இறப்பது வரையில் அனைவருமே சுவாசிக்கிறோம். மனிதர்கள் மட்டுமின்றி தாவரங்களும் விலங்குகளும் கூட சுவாசிக்கின்றன. உயிர் வாழ்வதற்கு சுவாசம் என்பது இன்றியமையாத ஒன்று .சுவாசம் இல்லை என்றால் உயிர் இல்லை. சுவாசம் இல்லை என்றால் அவரின் ஆயுள் முடிந்து விட்டது என்பது நிதர்சனமான உண்மை. எனவே ஒருவனின் ஆயுளின் சூட்சுமம் சுவாசத்தில் அதாவது அவனின் மூச்சுக்காற்றில் அடங்கியிருக்கிறது என்பது கண்கூடாக தெரிகின்ற அனைவருக்கும் புரிகின்ற விடயம் ஆனால் இரண்டுக்குமான தொடர்பு என்ன என்பது தான் எமக்கு தெரியாத விடயம் அதை எமது சித்தர்கள் அழகாகக் கூறுகின்றனர்.

ஒவ்வொருக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையளவு மூச்சைச் சுவாசிக்கவே இறைவன் அனுமதி வழங்கியிருக்கிறான். அப்படி ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட அந்த மூச்சின் எண்ணிக்கை இருபத்தியொரு லட்சத்து அறுபது ஆயிரம் (2,160,000) ஆகும் இந்த அளவு மூச்சை விரைவாக சுவாசித்து முடிப்பவன் விரைவாக ஆயுளை முடிக்கிறான் ஆறுதலாக சுவாசிப்பவன் அதிக ஆயுள்காலம் வாழ்கிறான் என்பதே விதி. ஒரு மனிதன் ஒரு நிமிடத்திற்கு 15 முறை சுவாசித்தால் அவனுக்கு விதித்த ஆண்டு 100 [2,160,000/ 15×144=100.ஒரு நாளுக்கு 1440 நிமிடங்களாகும் (60×24=1440)]

மேற்கண்டவாறு கணக்கிட்டால் ஒரு மனிதன்,

**100 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சுகள் விட்டுள்ளான்,**
**93 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 16 மூச்சுகள் விட்டுள்ளான்,**
**87 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 17 மூச்சுகள் விட்டுள்ளான்,**
**80 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 18 மூச்சுகள் விட்டுள்ளான்,**
**73 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 19 மூச்சுகள் விட்டுள்ளான்,**
**66 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 20 மூச்சுகள் விட்டுள்ளான்,**

இவ்வாறு நிமிடத்திற்கு ஒவ்வொரு மூச்சு கூடும் போதும் நாம் நம் ஆயுளில் 7 வருடங்களை இழக்கிறோம் என்பதனை கவனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டும் 2 முறை சுவாசித்தால் அவன் வயது 750 ஆண்டு 1முறை சுவாசித்தால் அவன் வயது 1500ஆண்டு. 0முறை சுவாசித்தால் முடிவேயில்லை (இது சித்தர்களால் மட்டுமே முடியும்). சிதம்பர ரகசியம் என்று சொல்லப்படும் ரகசியங்களில் இதுவும் ஒன்று.

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் இவை அழகாக கூறப்பட்டிருக்கின்றது இந்த சுவாசப் பயிற்சிகளின் சூட்சுமங்களைக் கூறும் சில திருமந்திரப் பாடல்களைக் காணலாம்.

**"ஏற்றியிறக்கி யிருகாலும் பூரிக்குங்**
**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாகர்க்குக்**
**கூற்றை யுதைக்குங் குறியது வாமே"**

இடது நாசி வழியாகவும் வலது நாசி வழியாகவும் மூச்சை இழுத்து வெளிவிடும் அந்த காற்றை பிடித்து வைக்கும் கணக்கை அதாவது காற்றை தன் வசப்படுத்தும் கணக்கை அறிந்த மனிதர்கள் யாருமில்லை. அப்படி அந்த காற்றை தன் வசப்படுத்தும் கணக்கை அறிந்தவர்கள் கூற்றை அதாவது இயமனை காலால் எட்டி உதைப்பார்கள் என்கிறார் திருமூலர்.

எப்படி சுவாசிக்க வேண்டும் என்பதை திருமூலர் இப்படி கூறுகிறார்

**"வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே**
**ஏமுற்ற முப்பத்திரண்டும் இரேசித்து**
**காமுற்ற பிங்கலை கண்ணாக இவ்விரண்டு**
**ஓமத்தால் எட்டெட்டு கும்பிக்க உண்மையே"**

"வாமம்" என்பது இடது நாசியையும் இடகலை நாடியையும் குறிக்கிறது. பிங்கலை வலது நாசி,வலது பக்கத்து நாடியையும் குறிக்கும் சொல். உள்மூச்சு "பூரகம்" எனப்படும் வெளிமூச்சு "இரேசகம்" மூச்சை உள்ளே அடக்குதல் "கும்பகம்" இனி பாடலின் பொருளைக் காணலாம். இடது நாசியின் வழியாக மூச்சை உள்ளே 16 வினாடிகள் (ஈரெட்டு மாத்திரைகள் அல்லது 1,2 என 16 வரை எண்ணும் நேரம்) உள்ளே இழுத்து 64 வினாடிகள் (எட்டெட்டு 8×8=64) அதை வயிற்றுப் பகுதியில் தங்கச் செய்து (கும்பித்து), பின்னர் வலது நாசி வழியாக 32 வினாடிகள் வெளியே விட வேண்டும். இதுவே மூச்சுப் பயிற்சிக்கான சரியான கணக்காகும்.

மூச்சுப் பயிற்சி செய்யத் துவங்கும் ஆரம்ப கால கட்டங்களில் இந்த 16:64:32 என்ற காலக் கணக்கில் பயிற்சி செய்வது இயலாத காரியமாக இருக்கும் தொடர்ந்த பயிற்சிகளின் மூலமே இது கைகூடும் பயிற்சியைத் துவங்கும் போது 8:32:16 என்ற கால அளவில் துவங்கி, படிப்படியாக நேரத்தை அதிகரிக்கலாம்.

இந்த மூச்சுப் பயிற்சியை பிரணாயாமம் என்று சொல்வார்கள் இதைப்பற்றி நிறைய பாடல்கள் மூலம் திருமூலர் நிறைய விடயங்களை விளக்கியுள்ளார் தினமும் மூச்சுப் பயிற்சி செய்து வருவது மிகவும் நல்லது இரத்த ஓட்டங்கள் சீராகும் நோய் நொடிகள் நீங்கும் கவலைகள் நீங்கும் இப்படி அடிக்கிக் கொண்டே போகலாம் மன அழுத்தம் போன்ற பல வியாதிகளக்கு நல்ல தீர்வாக பிரணாயாமத்தையே இன்று பரிந்துரை செய்கின்றார்கள்.

இளமைத் தோற்றம் மாறாமல் இருக்கவும் மூப்பு என்பதே வராமல் இருக்கவும் மருந்துகளாலே குணப்படுத்த முடியாத பல நோய்கள் குணமாகவும் இந்த பிரணாயாமம் வழி வகுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கிறது என்று இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகளும் கூறுகின்றன. உண்மையில் நுரையீரலின் தரை தட்ட சுவாசிக்க வேண்டும் ஆனால் அப்படி சுவாசிக்காமல் மேலோட்டமாகவே சுவாசிக்கிறோம். இதுவே நாம் நோய்வாய்ப்பட பிரதான காரணியாகிறது. காற்றால் நுரையீரலை நிரப்பும் அளவுக்கு சுவாசியுங்கள் அதுவே உங்கள் ஆரோக்கியத்திற்கு உத்தரவாதம் தரும்.

பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப்படும் காலை 4.30 தொடக்கம் காலை 6.00 மணியளவில் இந்த பிரணாயாமம் எனப்படும் மூச்சுப் பயிற்சி செய்து மிகவும் நல்லது. ஏனெனில் அந்த நேரத்தில் வளி மண்டலத்தில் பிராணவாயுவும் பிராண சக்தியும் அதிகமாக காணப்படும் அந்த நேரத்தில் பிரணாயாமம் செய்தால் உடலின் அனைத்து உறுப்புக்களுக்கும் தேவையான சக்தி கிடைக்கிறது. மற்றைய நேரத்தில் அதிக நேரம் பயிற்சி செய்து பெறும் சக்தியை பிரம்ம முகூர்த்தத்தில் குறைந்த நேரம் செய்வதன் மூலமே பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் ஆயுளை அதிகரிப்பதற்கும் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் பிரணாயாமம் என்று சொல்லப்படும் மூச்சுப்பயிற்ச்சி மிகவும் முக்கியமானது. இதை எமது மதமும் இன்றைய விஞ்ஞானமும் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. எனவே நீங்கள் சரியாக இதைக் கடைப்பிடித்து அரோக்கியமாக அதிக ஆயுட்காலம் வாழ வழி செய்யுங்கள்.

**கொஞ்சநேரமாவது பிள்ளைகளோடு......**

ஓடி ஓடி உழைக்கிறோம் ஓய்வில்லாமல் உழைக்கிறோம் யாருக்காக உழைக்கிறோம் யாருக்காக செலவழிக்கிறோம் என்றால் குடும்பத்திற்காகத்தான் பிள்ளைகளக்காகத்தான் ஆனால் நாம் எவ்வளவு பிள்ளைகளுக்காக குடும்பத்திற்காக செலவழிக்கிறோம் என்பதை விட எவ்வளவு நேரம் பிள்ளைகளோடும் பிள்ளைகளுக்காகவும் செலவிடுகின்றோம் என்பதேமிகமுக்கியமானது.

நாம் பிள்ளைகளோடு நேரத்தை செலவிடும் போது அவர்கள் சந்தோசமாக இருக்கிறார்கள் அந்த கணம் அவர்கள் மனங்களிலும் மூளையிலும் பல மாற்றங்களை ஏற்ப்படுத்துகிறது அவர்கள் ஆரோக்கியத்திற்கும் மூளை வளர்ச்சிக்கும வழிவகுக்கிறது என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு தந்தைக்காக அவரது மகன் ஒவ்வொரு நாளும் இரவு காத்திருந்து அவர் வரும் முன்னே தூங்கிவிடுவான். இப்படியிருக்கையில் ஒரு நாள் எப்படியாவது தன் தந்தையை பார்க்க வேண்டும். என்று காத்திருந்தான். தந்தையும் வந்தார் பேச்சு வாக்கில் மகன் தந்தையிடம் கதை கொடுத்தான்.

"அப்பா நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்லுறீங்களா "என்றான்" சரி கேளு நான் சொல்கிறேன்" என்றார் அவனும்" அப்பா உங்களக்கு ஒரு மணித்தியாலத்திற்கு எவ்வளவு சம்பளம்" என்றான் "உனக்கே எனப்பா உது என்றார்" சொல்லுங்கப்பா என்றான்" 100ரூபா" என்றார் எனக்கு" ஒரு 50ரூபா தாங்கப்பா!" என்றான் தந்தையும்" நான் எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைக்கிறேன் உனக்கு ஏன் காசு சாக்லெட் வாங்கவா" எனறு கோபமாய் பேசினார் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகமாய் பேசமால் நின்றான் அதைப் பார்த்த தந்தை" இந்தாப்பா 50ரூபா" என்று காசு கொடுத்தார் உடனே மகன் அதையும் வாங்கி தான் வைத்திருந்த காசையும் எடுத்து எண்ணினான்

இதைப் பார்த்த தந்தைக்கு கோபம் வந்து விட்டது "நீ ஏற்கனவே காசு வைத்துக் கொண்டு மீண்டும் காசு கேட்கிறாய் உனக்கு ஏன் இவ்வளவு காசு உங்களுக்கு என் கஷ்ரம் விளக்குவதில்லை" என்று கத்தினார். உடனே மகன்" அப்பா இந்தாங்க இதில 100 ரூபா இருக்கு நாளைக்கு நீங்க ஒரு மணித்தியாலம் முந்தி வாங்க உங்களோடு விளையாடனும் உங்களோடு சேர்ந்து சாப்பிடனும் உங்களோடு கதைகள் பேசனும்" என்றான் தந்தைக்கு கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. பணம் தான் முக்கியம் எனற ரீதியில் தான் எவ்வளவு விடயங்களை இழக்கிறேன் என்பதை உணர்ந்தார்.

இதைப்போலத்தான் இன்று பல தந்தைகள் குடும்பத்திற்காக உழைக்கிறோம் பிள்ளைகளுக்காகவே சம்பாதிக்கிறோம் என்ற போர்வையில் பிள்ளைகளின் சின்ன சின்ன உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்காமல் நடந்து கொள்கிறார்கள் ஆங்கிலத்தில் அழகாக சொல்வார்கள் "Spending time With Children is more important than Spending Money on Children "அதாவது பிள்ளைகளுக்காக எவ்வளவு செலவளிக்கின்றீர்கள் என்பதைவிட எவ்வளவு நேரம் செலவளிக்கின்றீர்கள் என்பது தான் மிகமுக்கியம் எனவே முடிந்தவரை பிள்ளைகளோடு நேரத்தை செலவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம்

**கி.தவமணிதேவி**
**(சித்த மருத்துவ பண்டிற்) இந்தியா**
**"வேல்முருகன் சித்த ஆயுள்வேதவைத்தியசாலை", வலந்தலை, காரைநகர்**

**மனிதனது தேகம் என்பது.**
**கூறுவேன் தேகமது என்னவென்றல்**
**குருபரனே எலும்புதனை காலால் நாட்டி**
**மாறுபடா எலும்புக்கு துவாரமிட்டு**
**வன்மையுடன் நரம்பினால் வலிந்து கட்டி**
**தேனுதலாம் இரத்தமதை உள்ளே ஊற்றி**
**தோற்றமுடன் அதன்மேல் தோல் மூடி**
**ஆறுதலாய் வாய்வு தனி உள்ளடிக்கி**
**அப்பனே தேகமென்று கூறியாச்சு**

மேற்கூறிய தேகமதை வளமுடன் வாழவைக்க வழிவகுப்பவன் ஓர் வைத்தியன் இந்த வைத்தியனுக்கு மூத்தவைத்தியன் பரமசிவன் (இறைவன்) வைத்திய நாதன், வைத்திஸ்வரன் (சிவபெருமான்) அந்த இறைவனின் அருட்கடாச்சத்தால் கிடைக்கப்பெற்றவன் அகஸ்தியாமாமுனிவர் வடக்கிலும், தெற்கிலும் இறைவனுக்கு சரிசம பலமாக நிற்கக்கூடியவர் அவர் வைத்திய மூலிகைகள் தந்த மகாரிஷி (முனிவர்) அவர் அருளிய மூலிகைகளின் குணாங்கள் அறிந்து நோய்களுக்கு ஏற்றபடி மருந்துகள் தயாரித்துக் கொடுப்பவன் தான் வைத்தியன்

உணவிற்கு உப்பு எவ்வளவு முக்கியமோ அதே போல் உடலது ஆரோக்கியத்திற்கு உணவு மிக முக்கியம் ஆனால் இப்போதய வழக்கத்தில் இருக்கும் மருந்துகளும் சோதனைகளும் நம் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியம் உதாரண-மாக ஒருவருக்கு நீரழிவு நோய் ஏற்பட்டிருந்தால் எவ்வளவு தூரம் அவரின் உடம்பை பாதித்து இருக்கிறது என்பதை தெரிந்து அதற்கேற்ப சோதனை செய்து அந்த நோய்க்குண்டான மருந்துகளைக் கொடுக்க வேண்டும். ஒரு நோயாளி உடம்பால் மட்டும் நோயுற்று இருப்பதில்லை தான் இன்ன நோயால் பாதிக்கப்பட்டு இருக்கின்றேன் என்று மனத்தாலும் பயந்துநோயாளிஆகுகின்றன் இவனின் மனத்தை திடப்படுத்தவும், வைத்தியரின் ஆலோசனையும், மருத்தும்தேவை ஓர் வைத்தியன் என்பவன் எப்பொழுதும் இறைபக்தி உடையவராகவும், தீய ஒழுக்கம் அற்றவராகவும், பொருளாசை, பணஆசை அற்றவராகவும் இருக்க வேண்டும்.

மற்றும் வைத்தியன் என்பவர் மூலி-கைகளின் மற்றும் மருந்துகளின் குணங்கள் நன்றாக அறிந்து மருந்துகள் முறைப்படி செய்து கொடுக்கவேண்டும் மருந்துகளின் சுத்திமுறை தெரிந்து இருக்கவேண்டும். நன்றாக மருந்துகள் எப்படி செய்ய வேண்டும் என்பதை அறிந்து இருக்க வேண்டும் எந்த, எந்த நோய்களுக்கு என்ன அளவு கொடுக்க வேண்டும் என்பதையும் அறிந்து இருக்க வேண்டும்.

பாட்டி வைத்தியம், பரம்பரை வைத்தியம் என்பதை பரிசீலனை செய்து நோய்களுக்கு ஏற்றதாகவும், வயதுக்கு ஏற்றதாகவும், தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றதாகவும் மருந்துகள் கூட்டியோ, குறைத்தோ கொடுக்கவேண்டும் அதை நன்கு அறிந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரைவைத்தியம்மிகவும்பெறுமதியானது அதாவது இளமையில் சோதிடம், முதுமையில் வைத்தியம், என்ற பழமொழிக்கிணங்க, வைத்தியம் என்பது மிகவும் அனுபவமிக்கது என்பதைஅறிந்திருக்கவேண்டும்.

எனவே ஆயுர் வைத்தியர் பழயனவற்றை மறக்கவும் கூடாது மறைக்கவும் கூடாது தொடர்ந்து நல்ல மருந்துகள் செய்து நல்லவர் நாட்டின் முதுகெலும்பு என்ற சொல்லுக் கேற்ப நல்ல சேவை செய்து வளர வேண்டும் எனறு இறைவனை வேண்டுகின்றேன்.

## மூலிகைகளும் மருந்துகளும்

### வேப்பிலை:

புழுக்கள், பெருவியாதி, கரரோகம், அம்மைக் கொப்புள ரணங்கள் ஒழியும் வேப்பில்லையும், மிளகையும் உப்புக்கூட்டி அரைத்து தூதுவளங்காயளவு இரண்டுவேளை கொடுத்துவர வயிற்றுக் கிருமிகள் மடியும் வேப்பிலையும், மஞ்சளினையும் கூட்டிப் போட, கட்டி பரு உடைத்துக் கொள்ளும் வேப்பில்தண்டை அவித்துக்கொடுக்க மொத பித்தரோகம், வாந்தி, ஒங்காளம் நீங்கும் வேப்பிலையும் அதிமதுரச் சூறணமும் அரைத்து மாத்திரை செய்து தினப் ஒரு வேளை கொடுத்துவர அம்மையின் பூரிப்பு அடங்கும்பேய், பிசாசு, பூதம் குழந்தைகள் தோஷம், முதலியவற்றிற்கு ஒரு கொத்து வேப்பிலையை கோமயத்திலாவது மஞ்சல் கரைத்த சலத்திலாவது தோய்த்து முகத்திற்கெதிரே மந்திரிப்பது போல் சூழற்றி அடிக்க மூலிகையின் நெடி நாசிக்கு ஏறிமூளையின் கோளாறை சாந்தப்படுத்தும் வேப்பிலை சிறிய அளவில் ஆரம்பித்து கூட்டிச்சாப்பிட்டு வந்தால் பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது வேப்பம் கொழுந்துஓமம், மிளகு, வசம்பு, பூடு ஓர் அளவாக அரைத்து உள்ளுக்கு கொடுக்க வயிற்றுப் பொருமல், அஜீரணம், குழந்தைகளின் மந்தக்கழிச்சல் தீரும் முதிர்ந்த மரசமூல சூறணத்தால் நரை, திரை, உடல், பிணிகள் விட்டகலும்

### குப்பைமேனி

வயிற்றுவலி, வாதரோகம், பீனிசம், கபாதிக்கம், ரத்த மூலம் இவை நீங்கும், சூறணத்தால் மூலம், பவுந்திரம் போம். சாற்றுடன் உப்பு கூட்டி அரைத்து சொறி, சிரங்கிற்கு பூச குணமாகும். பயித்தியத்திற்கு இலைச்சாற்றை உப்பு கூட்டி வடிகட்டி.5,6,துளி நாசியில் விட சளியும் துர்நீரும் வெளியாகும் உடனே குளிர்ந்த சலத்தை சிரசில் விட்டு ஸ்நானம் 3 நாள் செய்ய சிரசிலுள்ள நீரை வெளியாக்கி சித்தப்பிரமையைக் குறைக்கும் வேரைமட்டும் காய்ச்சிக்குடிக்க மலப்பூச்சிகள் வெளியாகும்.

### அறுகம்புல்

கண்நோய் பிரமநோய், ரத்தபித்தம் இவை நோய் அறிவு தரும் பல்வலி, விஷகடி நீங்கும் அறுகு மூலத்தை அரைதது நெல்லிக்காயளவு பாலில்வடிகட்டிக் கொடுக்க நரம்பு வலுக்கும் சகல விஷமும் தீரும் "ஆகாதது அனுகப் புல்லி ஆகும்

### நொச்சி இலை

மகாவாதம், பீனிசம் சுரம், திரிதோசம் இருமல் நீரேற்றம் கபஸ்சிரதாபம், தந்தவலி அரைத்து சுண்டைக்கபயளவு 3வேளை கொடுக்க கை, கால், பிடிப்பு, தேகவலி, அஜீரணம் இவைபோம் கறையும் இந்த இலயைக் கசக்கி தலையில் வைத்துக் கட்ட தலைப்பாரம் கழுத்து நரப்பு இசைவாகும்

### கலியாணமுருங்கை

கலியாணமுருங்கையின் இலைச்சாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீர் எரிச்சலைப் போக்கி தாராளமாக நீர் இறங்கச் செய்யும் ஒரு அவுன்ஸ் வீதம் காலை,மாலை அருந்தி வந்தால் நீண்ட கால சிறுநீர் கோளாறு நீர் எரிச்சல் வியாதிகள் நீங்கிவிடும் பெண்கள் இதை உண்டு வந்தால் அவர்களது மலட்டுத் தன்மைமாறும்.

### கற்றாளை

உள்சோற்றை சிறுதுண்டுகளாக வெட்டி ஒழுதரம் கழுவி கற்கண்டுத்தூளிட்டு சாப்பிட்டு வர கண்,கை,கால்களிலுள்ள எரிச்சல் நீங்கும் மலச்சிக்கல் நீக்குவதில் முதன்மையானது மலர்ச்சிக்கல் காரணமாக முகுவலி தலைவலி ஏற்ப்படலாம் ஒருலீற்றர் ஆமணக்கெண்ணயில் கால் கிலே பூடு இடித்துப் பிழிந்து சாறும், பனங்கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சியதை போத்தலில் எடுத்து வைத்து தினசரி இரண்டு தடைவை பாவிக்குக.

### குருவிச்சை

பெருவியாதி மலடு, கரப்பான் விசமாந்தம் சத ரத்தக்கிரகணி தீரும் நீடித்துக் கொடுத்துவர தோல் சம்மந்தமான ரோகங்களையும் பெண்களைப் பற்றிய மலக்கட்டு நோகத்தையும நீக்கும்.

### முருங்கைக் கீரை

முருங்கைக்கீரை மிகுந்த சக்தியை அளிக்கும் அதில் மீற்றமீன் A,Cகல்சியம் இவை நிரம்ப உண்டு முருங்கை கீரைகள் ஒரு பேணி முருங்கைச்சாறு, எட்டுப்பேணி பசும்பாலுக்கும் ஆறு தோடம்பழத்திற்கும், எட்டுவாழைப்பழங்கட்கும் இரண்டரைக்கிலோ மாம்பழத்திற்கும் சமமானதாகும் சுண்ணம்பு, அதன் கூட்டி தொண்டைக்குழியில் தடவ் இருமல் குரல்கம்மல் தீரும் இம்மரப்பட்டையை அவித்து எடுத்த நீரில் இரசம் போல் புளி,மிளகாய், உப்பு சேர்த்துச் சாப்பிடக குளிர்கரம், காக்கைவலி, பாரிசவாயும் சூதக சன்னி இவை நீங்கும்.

### முடக்கற்றான்

இதை இடித்து 1/8 ஆக காய்ச்சி 1 அவுன்ஸ் வீதம் இரண்டு வேளை மூன்று நாள் கொடுக்க நரம்பு சம்பந்தமான மேகவாயுப் படிப்பு, மூலம் கபசும்பந்தமான இருமல் மலச்சிக்கல் இவை நோய்

### முளைக்கீரை

முளைக்கீரை சத்துள்ள கீரைகளில் ஒன்று இதில் விற்றட்மீன் A,B இரும்புச்சத்து, சுண்ணம்புச்சத்து, பொன்பரஸ் இவை அதிக அளவில் உண்டு சொறி, சிரங்கு உள்ளவர்கள் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம் காசத்தைப் போக்கும் நரையைத் தடுக்கும் நல்ல பசியை உண்டாக்கும்.

### வல்லாரை

கடுப்பு, மலக்கழிச்சல் கண்டரோகம் நீங்கும் நிழலில் உலர்த்தி இடித்து சூறணம் செய்து மூன்று குன்றி எடை சர்க்கரை கூட்டி மூன்று வேளை கொடுக்க குட்டம் கண்டமாலை வீக்கம் பயித்தியம், ஞாபகசத்திக் குறைவு இவைகள் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழவகைகளும் அவற்றை உண்பதனால் அடையும் பலாபலன்களும்

### அன்னாசிப்பழம்

சீரணம் மலக்கட்டு இருமல் வாய் நாற்றம் வாதநோய் எனபனவற்றை நீக்கும் உடம்பு, எலும்பு, பல் போன்ற வற்றைப் பலப்படுத்தும் மழை காலத்தில் சாப்பிடுவது நல்லதல்ல

### அப்பிள்பழம்

தாகம், உடல் வறட்சி வயிற்று அழற்சி போன்றனவற்றை நீக்கும் குடற்புண்,பேதி, இரத்தபேதி, தள்ளுமூலம் வயிற்றுப்புலம் வாய்ப்புண் போன்றனவற்றை குணமாக்கும்.

### எலுமிச்சம்பழம்

இளமையுடன் இருக்க வேண்டுமாயின் அதிகம்எலுமிச்சம்பழம்சாப்பிடவேண்டும்தோலை உலர்த்தி பொடி செய்து தலைவலி வரும்போது தடவினால்தலைவலி நிற்கும் இதன் சாற்றில் தேன் கலந்து தினம் சாப்பிட்டால் வாய்ப்புண் ஏற்ப்படாது பித்தக் கோளாறு மறையும் வாந்தியை நிறுத்து வதுடன் கனப்பைப் போக்கும் வாயக் கோளானு, வயிற்றுவலி, இருமல் மலர்ச்சிக்கல், வயிற்றுப் போக்கு இவைகளை குணப்படுத்தும் வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப்புண், மூலக்குத்து சிறுநீரகநோய் வாய்நாற்றம், பல் ஆட்டம், தூக்கமின்மை கண்நோய், போன்றனவற்றை நீக்கும் பல பந்தமுண்டு காயே சிறந்தது.

### பப்பாளிப்பழம்

மலக்கட்டு, கண்நோய், வாய்நாற்றம், தொண்டைப்புண், வயிற்றுப்புண், பல்கோளாறு, கர்ப்பம் தொடர்பான நோய்கள் என்பவற்றை குணமாக்கும் யானைக்கால் வீக்கம் குறையும் உடம்பு, மூளைவலிமை பெறும் ஆண்மை, பெண்மை நிறையும் நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டு பண்ணும். இந்த மர இலையை அரைத்து யானக்கால் வீக்கத்திற்கு வைத்துக் கட்டவீக்கம் குறையும்

### மாதுளம்பழம்

வாய்நாற்றம், வயிற்றுப்புண், அன்னதோசம் இருமல், மார்புவலி, வயிற்றுக்கனம், தொண்டைக்கட்டு மூலஎரிவு, நீரிழிவு, ஆஸ்துமா, தொண்டைக்கம்மல் சீதபேதி வாய்வுப்பிடிப்பு, இரத்தசோகை பாண்டுரோகம், பெருவயிறு, வாந்தி, மந்தம் நெஞ்செரிவு, காதடைப்பு, மயக்கம், பித்தம் நீங்கும்

### நாவற்பழம்

நீரழிவு, வயிற்றுப்புண், வாய்ப்புண், வாய்நாற்றம் இருமல், வாய்வு சிறுநீரகக் கோளாறு போன்றவற்றை குணமாக்கும் கடுத்தல், சீதவாத நோய் உள்ளபோது விலக்கவேண்டும்.

### திராட்சைப்பழம்

பித்தக்கோளறு, மலச்சிக்கல் வாதம், உடல்சூடு கபம், வயிற்றுக் கோளான வயிற்றுப்புண, மூலப்புண், நாவறட்சி, சிறுநீர்சூடு உடம்புவலி, தலைச்சுற்று, களைப்பு, மேகச்சூடு வாய்நாற்றம், தொண்டைப்புண் போன்றனவற்றை குணமாக்கும் கை, கால், போன்றவை பலமடையும் முகம் அழகு பெறும்

### விளாம்பழம்

பித்தசம்மந்தமான நோய்கட்கும், நீரழிவு நோய் கட்கும் விளாம்பழம் சாப்பிடுவது நன்று சர்க்கரை கலந்து சாப்பிட்டால் கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கும் அடிக்கடி ஏப்பம் வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையும் நல்ல பசி உண்டாகும் இதன் ஒட்டினை நீராகக் காய்ச்சிக் குடிக்க இரமல் நிற்கும்

### மாம்பழம்

உமிழ்நீரை சுரக்கச் செய்யும். சீரணத்தை எளிதாக்கும். மலட்டுத்தன்மையை நீக்கும் பசியை உண்டு பண்ணும். சொறி, சிரங்கு நீங்கும். முகவரட்சியை நீக்கும். இருதயத்திற்கும், மூளைக்கும் பலம் கொடுப்பதுடன் பெண்களின் மாதவிலக்கை ஒழுங்காக்கும் மாம்பழம் உண்டு வந்தால் நல்லபலனைக் கொடுக்கும்.

### வாழைப்பழம்

வாழைப்பழத்தில் உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக வேண்டிய கல்சியம், பொஸ்பரஸ், கந்தகம், இரும்புச்சத்து பொட்டாசியம், ஆகியவை அதிக அளவில் இருக்கின்றன. A,B,C விற்றமின்களும் போதியளவு உண்டு அதனால் தினசரி சில வாழைப்பழங்கள் சாப்பிட்டு வந்தால் பக்கவாத நோய் பிற்காலத்தில் ஏற்ப்படாமல் தடுக்கலாம்

### கொய்யப்பழம்

வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக் கோளாறு இதயபடபடப்பு, தோல் கோளாறு என்பவற்றை நீக்கும்,எலும்பு உடல் என்பன பலமடையும்

### பேரிச்சம்பழம்

மூலக்கட்டு, களைப்பு, தொண்டைக்கட்டு, பக்க வாதம் போன்றவறறை தணிக்கும் மூளை எலும்பு, தசை போன்றனவற்றை வலுப்படுத்தும் இளைப்பு மூட்டுவலி உடம்பு அசதி ஏற்படாமல் தடுக்கும் ஆஸ்துமா நோயாளிக்கு நல்லது மூலநோயாளிக்கு ஆகாது.

### பலாப்பழம்

மூளை வலுவடைவதுடன் அறிவை விருத்தி செய்யும் இதை பசுநெய், தேன் என்பனவற்றுடன் சேர்த்து உண்டால் களைப்பு, இருமல் என்பவற்றை நீக்கும் அதிகம் உண்பது நல்லதல்ல.

### மதுமேகம் (நீரிழிவு)

இந்த வியாதி கண்டவர்களுக்கு மற்ற வியாதிகளுப் பற்றிக் கொள்ளும் சூரிய ஒளியில் வேலைசெய்யும்கடும்உழைப்பாளிகள் இவ்வியாதி பொதுவாக அணுகுவதேயில்லை அளவிற்குமீறிய உணவினைஉண்டுவிட்டு பேச்சுப் பேசிக்கொண்டு இருப்பவர்களை இது வெகுவாக அணுகக் கூடிய வியாதியாகும் இது மனோதைரிய மற்றவர்களை மிகவும் கொடுமைகுள்ளாக்கும் வியாதி என்பதில் சந்தேகமில்லை. பொதுவாக சர்க்கரை வியாதி (மதமேகம்) உள்ளவர்கள் அடிக்கடி சிறுநீர் கழிப்பவர்கள் எல்லோருமே நீரிழிவு வியாதிக்காரர்கள் என்று சொல்லிவிட முடியாது.

உடல் நலத்துக்கும் உடல்வலிமைக்கும் (Strength) சாக்கரை சத்து மிகவும் தேவையான பொருளாகும் ஆனால் இந்தச் சர்க்கரை சத்துப் பொருள் உணவில் அதிக அளவில் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் சர்க்கரைச் சத்துள்ள பொருள்கள் மாவுப்பண்டங்கள் ஆகியவற்றை உணவில் அளவாகக் கலந்து கொள்ளவும்.

நமது உடலில் கோளத்திலிருந்து (Gland) இன்சுலின் முறைப்படி சுரந்து ரத்தத்தில் கலக்க வேண்டும் இந்த இன்சுலினைச் சுரக்கும் கோளம் குறைவாகவோ அறவே சுரக்காமலோ போனல் மதுமேகம் அல்லது சர்க்கரை வியாதி நமக்கு ஏற்ப்பட்டு விட்டதாக முடிவு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் உடல் உழைப்பு, கசப்பிற்குரிய காய், கறி, கீரை வகை உணவில் சேர்த்துக் கொள்ளுதல் மன உளைச்சலைத் தரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருத்தல் தேகப்பயிற்சி நாள் தோறும் சிறிது செய்தல் போன்றவைகளால் நீரிழிவு வியாதி வராமல் தடுதது‌க் கொள்ளலாம்.

நீரிழிவு வியாதியஸ்தர்கள் கோப்பி, தேனீர் போன்ற பானங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும். நல்லசக்திஅளிக்கும்உணவுவகைகளைஅளவாக சாப்பிட்டு வரலாம் மிதமிஞ்சி சாப்பிடக்கூடாது உடல் நலத்திற் கேற்ற உணவுகளான கே-ாதுமை, றவை, புழுங்கலரிசி போன்றனவற்றை அளவாகச் சமைத்து உண்ணலாம்.

**நீரிழிவு நோய் அகல**

முள்ளங்கிக்கிழங்கு – 2 (நசுக்கியது)
முற்றிய வேப்பிலை - 25 கிறாம்
மாவிலை - 25 கிறாம்

இவைகள் கஷாய முறைப்படி தயாரித்து அனு-தினமும் காலையில் 100மில்லி கஷாயம் வெறும் வயிற்றில் குடித்து வரவேண்டும். தினமும் கஷாயத்தை சூடேற்றி அதிலிருந்து 100மில்லி கஷாயத்தை குடித்துவரவேண்டும்.

**உணவுமுறை**

வழக்கமாக அவரவர் உடம்பு ஏற்றுக்கொள்ளும் (தொந்தரவளிக்காத) உணவுகளை சாப்பிட்டு வரலாம் இனிப்பு வகைகள் மிகவும் குறைவாகச் சேர்த்துக் கொள்ளலாம். இரவு உணவில் பாதியளவு உணவுதான் சாப்பிட்டு வரவேண்டும் நோவுக்குத் தக்கபடி 20 அல்லது 30 நாட்களுக்கு குடித்து வரலாம்.

**வயிற்றுப்புண் (ULCER) குணமாக**

ஆங்கிலத்தில் அல்சர் என்று சொல்லப்படும் குடற்புண் அல்லது வயிற்றுப்புண் எனப்படும் தொந்தரவு கொடுக்கும் வியாதி அநேகமாக பலவித மாற்று உணவுகள் வெவவேறு ஊர்களில் சாப்பிடுபவர்களுக்குத்தான் பெரும்பாலும் உண்டாவதாகத் தெரிகின்றது இது மலச்சிக்கல் காரண-மாகவும் தோன்றதக்கூடியதாகும். மலச்சிக்கல் ஆரம்பகாலம் முதலே இல்லாதவர்கள் இந்த வியாதியைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமேஇராது. மலச்சிக்கல்ஏன்ஏற்படுகிறது? மலச்சிக்கல் ஏற்பட பொதுவாக இரண்டு காரணங்களைக் கூறலாம்.

01.பொதுவாகக் குறிப்பிட்ட நேரத்தில் மலம் கழிக்காமை
02.அதிக உணவு உண்ணுதல்

வயிற்றுப்புண்ணால் அவதியுறுவோர்கள் இம்முறையைக்கையாளலாம்.வெந்தயத்தை வறுத்து இடித்து பொடி செய்து போத்தலில் நிரப்பிக்கொண்டு தினமும் காலை உணவுக்கு முன்பும் இரவு உணவுக்குப் பின்பும் வேளை ஒன்றுக்கு 1பேணி தயிரில் ½ தேக்கரண்டி வெந்தயப் பொடியைப் போட்டு கலக்கி குடிக்க வேண்டும். இதே போல் ஒரு மாத காலம் சாப்பிட்டால் வயிற்றுப்புண் மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளின் சிகரம் கலாசாரம்

**காரை.சி.கெங்காதரன்** B.A(S.C)

"ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பது ஆன்றோர் வாக்கு. நமது முன்னோார்கள் தமது பொழுது போக்கிற்காக அன்றி தமது அறிவின் திறமையை வெளிப்படுத்துவதற்காகவே பெரும் பாலும் கலைகளைப்பயன்படுத்தி வந்துள்ளனர் நாகரிகமுன்னேற்றம் அடையாத அந்தக் காலத்தில் அவர்களால் பேணப்பட்டு வந்த கலைகள் அவர் தம் வாழ்வியலின் இருப்பை உண்மையை, உயர்வை நமக்கு மிகவும் இலகுவாக எடுத்துச் சொல்வனவாகவே உள்ளன.

இன்று கலைகள் பெரிய பரிமான வடிவம் பெற்றிருந்தாலும் நமது கலைகளின் பிறப்பிடம் நமது முன்னோர்களின் இதயமும் அறிவுணர்வும் எனலாம் பெரும்பாலும் நமது முன்னோர்கள் இயற்கையுடன் இயைந்த இயல்பான வாழ்வையே வாழ்ந்து வந்துள்ளனர். இவ்வாறு இவர்கள் இயற்கையுடன் இணைந்து அவர்தம் அன்றாட வாழ்வியலிற்குத் தேவையான பல வாழ்வாதாரத் தொழில்களைப் புரிந்து வந்தனர் இருந்தத் தொழில்களினூடே சிறிய களைப்பு, இணைப்பு ஏற்படும் போது அந்தப் பொழுதை நிறைவு செய்வதற்காக கலைகள் தோற்றம் பெற்றன எனக் கூறுவது சற்றுப் பொருத்தமானது.

எவ்வாறாயினும் கலைகளின் தோற்றம் பற்றி ஆய்வு செய்த பலர் பல்வேறு சிந்தனைக் இருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளனர் நமது இயல்பான இந்துக் கலைகளை எடுத்துக் கொண்டால் அவற்றின் ஆரம்பம் "ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனிடம் இருந்தே வந்தது..." என்பது பொருத்தமான முடிவாகவே ஏற்றுக் கொள்ள முடிகின்றது இந்து சமயத்தவரின் இறைவன் நாத வடிவானவன், நடனம் ஆடுபவன் சாமகானப்பிரியன்வேதம்ஓதிவெண்ணுல்பூண்டு இசையாகி கலற்றாகிக் கலந்து நிற்பவன் அவனே நமது சுவாசம், அவன் மீது நாம் கொண்டுள்ளது. விசவாசம் இதுவே இந்துக்களது இறை நம்பிக்கை கலைகளின் காலத்தால் அழியாதவன் நம் இறைவன் அவன் இயல்பானவன்.

இவ்வாறாக நாத வடிவாகி நடனமாகி நமது வாழ்வியலில் நாதத்தையும், நடனத்தையும் நகர்த்தி, இயக்குபவன் இன்ப இறைவன் இந்த இறைவன் கலைகளின் சிகரத்தில் வைத்ததுப் பார்த்தால் ஒருநாமம், ஒரு உருவம் ஒன்றும் இல்லாதவன். ஆனால் கலைஞர்களாலும், கவிஞர்களாலும், மனிதர்களினாலும் பல நாமங்களால் அழைக்கப்படுபவன் அவர்களிற்கு அவர்களின் அழைப்பிற்கு இறங்கி இருந்து வாழ்வளிப்பவன் நம் இசை இறைவன் இத்தகைய இசை இறைவன் இந்த உலகத்திற்கே பொது வயனவன் புனிதமானவன். பௌர்ணமி நிலவு போல முழுமையானவும் சூரியன் போல மிகவும் பிரகாசமானவன் இந்த இறைவனை முழுமுதலை உலகமக்கள் அனைவரும் தம்தமக்கு விழும்பியபடி ஒவ்வொரு

**உருவிலும், நாமத்திலும் அழைத்து வழிபடுகின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எவ்வாளயினும் கலைக- ளின் முழுவடிவாகிய இறைவனை ஆண்டு தோறும் நடக்கும் இந்த கலை, இலக்கிய கலாசார விழாக்கள் இனம் கடந்து மொழி கடந்து, சமயம் கடந்து, நாடு கடந்து, எல்லாவற்றிற்கும் மேலான ஒரு பொதுவான இறைவனாகக் காட்டி கலாசார விழாவைப் பொது விழாவாகக் கொண்டாடுவது மிக புனிதமானது புதினமானது சகல வழிகளிலும் பிறிப்பட்டுக்கிடக்கும் இந்த பூமி சகலவழிகளிலும் ஏற்றுமைப்பட்டு உயர் நமது கலாசார விழாக்கள் கலங்கரை விளக்காக நின்று நமக்குப் பேருதவி புரிகின்றன. அந்த வகையில் ஆண்டு தோறும் நடைபெறும் இந்த கலாசார விழாக்களில் நமது இயல்பான கலைகளாலும் இலக்கியத்தாலும், இதயபூர்வமாக இறைவனுடன் ஒன்றிணைந்து கலாசாரம் அறிந்து அனுபவித்து மற்றோரையும் வாழ்த்தி நாமும் அனுபவித்து மற்றோரையும் வாழ்த்தி நாமும் வாழ்வோமாக. காலத்தால்அழிக்க முடியாத கலாசாரத்தை சிகரம் போல் உயர்த்த நாம் முன் முயற்சி எடுத்து முன்னின்று அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிலக்கியத்தில் சமண பௌத்த மதங்களின் செல்வாக்கு

முருகேசு ரவீந்திரன்.

தமிழிலக்கிய வளர்ச்சி சங்க காலத்திலிருந்து நோக்கப்படுகிறது. கி.பி. முதல–ாம் நூற்றாண்டு சங்க காலம் எனக்கொள்ளப்பட்டு அக்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் சங்க இலக்கியங்களாக கருதப்படுகின்றன. சங்க காலத்திற்கு பிற்பட்ட காலம் சங்க மருவிய காலமாக நோக்கப்படுகிறது. சங்க காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் வியந்து போற்றின. சங்க பாடல்கள் சமய சார்பற்றவையாக காணப்பட்டன.திருமுருகாற்றுப்படை மட்டும் முருகனின் அற்புதத்தைக்கூறும் சமயப்பாடலாக விளங்குகிறது.

கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள சில பாடல்கள் பிற்காலத்தில் பெருந்தேவனார் என்பவரால் பாடப்பெற்றவையாகும்.

திருக்குறள் சமய சார்பற்ற நூலாக கருதப்படுகிறது. அதனால் தான் அனைத்து சமயத்தவரும் ஏற்றுக் கொள்ளும் இலக்கியமாக அது போற்றப்படுகிறது. சங்க மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் அறநெறிக்கருத்துக்களை எடுத்துக்கூறுபவையாகக் காணப்படுகின்றன. சங்கம் மருவியகால இலக்கியங்கள் பலவும் சமண பௌத்த அறிஞர்களால் எழுதப்பட்டவை. கீழ்க் கணக்கு நூல்களுள் நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, ஏராதி திணை–மாலைநூற்றைம்பது, ஐந்திணைஎழுபது, என்னும் நூல்களை எழுதியவர்கள் சமண அறிஞர்களே ஆவர் அவர்கள் தம் சமயக் கருத்துக்களைத் தாம் எழுதிய இலக்கியங்களில் புகுத்தியுள்ளனர். சங்க காலத்தில் காதலும் போரும் என வாழ்ந்த மக்களுக்கு அத்தகைய வாழ்க்கையில் மனச்சலிப்பு தோன்றியது. இந்த விரக்தி நிலையிலிருந்து விடுபடும் வகையில் சங்கம்மருவியகால இலக்கியங்களின் தோற்றம் காணப்படுகிறது. கள்ளுண்டு களித்து காதலில் ஈடுபட்டு போர் புரிந்து வாழ்ந்த மக்கள் மனமாற்றத்தை வேண்டி நின்றனர்.

இப்படித்தான் வாழ வேண்டுமென அறக்கருத்துக்களை போதிப்பனவாக சங்க மருவியகாலத்து இலக்கியங்கள் விளங்கின. இதனால் இந்து இலக்கியங்களை எழுதிய சமண பௌத்த அறிஞர்கள் மீது அக்கால மக்கள் பெரும் மதிப்பை கொண்டிருந்தனர்.

சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவர் அவர் படைத்த கோவலனும் அவர்களுக்கு துணைவந்த கௌந்தி அடிகளும் சமண சமயத்தவராக சித்தரிக்கப்படுகிறார்கள். எனினும் ஏனைய தெய்வ வாழ்த்துப்பாடல்களும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகார காப்பியத்தை ஒட்டிய கண்ணகி வழிபாடு தமிழகத்திலும் இலங்கையிலும் காணப்படுகிறது. இந்துக்களும் பௌத்தர்களும் கண்ணகியை பெண் தெய்வமாக போற்றி வழிபடுகின்றனர். நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு முற்பட்ட காலத்தில் வட பகுதியில் பல கண்ணகி அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் காணப்பட்டன. சமண சமயத்தை சேர்ந்த வணிககுல சீமாட்டிக்கு கோயில்கட்டி வழிபடுவது தவறு என நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வலியுறுத்தினார் வட பகுதியில் காணப்பட்ட பல கண்ணகி அம்மன் ஆலயங்கள் முத்துமாரி அம்மன் ஆலயங்களாக மாற்றம் பெற்றன. சைவ சமயத்தை நிறுவுவதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆற்றிய பங்களிப்பு பிறிதாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும் ஆனாலும் இன்றளவும் இலங்கை தமிழ் மக்கள் மத்தியிலும் கண்ணகி வழிபாடு காணப்படுகிறது.

தமிழில் எழுந்த காப்பியங்கள் பெரும்பாலும் சமண சமயத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கின சீவகசிந்தாமணி, வளையாபதி என்னும் பெரும் காப்பியங்களும் ஐஞ்சிறு காவியங்களும் சமண சார்புடையன கொங்கு வேளிர் ஒருவர் எழுதிய உதயணன் கதையும் சமண சமயத்தைச் சார்ந்ததாகும் இதற்குப் பெருங்கதை என்ற பெயர் விளங்குகிறது. இது ஆசிரியப்பாவால் எழுதப்பட்டது இதுவும் சீவ-கன் கதையைப்போன்ற அமைப்பை உடையது. நேரு மந்திர புராணம் என்னும் காவியத்தை வாமனாச்சாரியார் என்பவர் இயற்றினார் இதுவும் சோழர்காலத்து எழுந்த நூலாகும் தமிழில் தோற்றம் பெற்ற புராணங்கள் அனைத்தும் காவியங்கள் என கூறப்படுகின்றன. காவியங்களுக்கு புராணங்கள் எனப் பெயரிடுவது மரபாகிவிட்டது.

தமிழ் இலக்கண நூல்கள் பெரும்பாலும் சமணப் புலவர்களாலேயே எழுதப்பட்டன. நம்பி அகப்பொருள் எழுதிய நாற்கவிராசநம்பியும் யாப்பருங்கலவிருத்தியும், காரிகையும் எழுதிய அமிதசாகரரும் நேமிநாதமும் வச்சனந்தியாரும் எழுதிய குணவீர பண்டிதரும் நன்னூல் எழு-திய பவனந்தியாரும் உரையாசிரியர்களுள் இளம் பூரணரும் சமண சமயத்தை சேர்ந்தவரகள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் தாங்கள் இயற்றிய நூல்களில் கடவுள் வாழ்த்திலேனும், கருத்துரையிலேனும் தம் சமய சார்பை புலப்படுத்தியள்ளனர். இவ்வாறு இலக்கிய,இலக்கணங்களை எழுதி சமணர்கள் பெரும்புலவர்களாகவும், பேராசிரியர்களாகவும் தழிழுக்குதொணடாற்றியுள்ளனர்.

பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரும் ஆரம்பத்தில் தருமசேனர் என்ற பெயரில் சமண சமய அறிஞரா-கவே மக்களால் அறியப்பட்டார். அந்தவகையில் சமணர்கள் தமிழுக்கு, தமிழ்மொழி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர். சமண பௌத்த இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் ஒழுக்கநெறியை எடுத்தியம்பும் நூல்கள் தமிழில் காணப்படவில்லை அந்தவகையில், சங்கமருவிய காலத்தில் எழுதப்பட்ட சமண, பௌத்த இலக்கியங்களே மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என ஒருநெறி முறையை வகுத்தன.

கொல்லாமையை முதன்முதலில் வலியுறுத்திய சமயங்களாக சமண பௌத்த சமயங்களைக் குறிப்பிடலாம் சமண, பௌத்த இலக்கியங்கள் உயிர்க் கொலையை வெறுத்தன. எல்லா உயிரிகள் மீதும் அன்புகொள்ள வேண்டும் என்ற அறக்கருத்தை போதித்தன பலியிடுவதற்காக கொண்டுசெல்லப்பட்ட ஆட்டுக்குட்டிக்கு அபயம் அளித்தவர் புத்தபிரான். அந்தவகையில் பௌத்த இலக்கியங்கள் உயிர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதை அதிகம் வலியுறுத்தின. அவ்வாறே சமண இலக்கியங்களும் கொல்லாமையை வலியுறுத்தின. அத்தோடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளுண்டு மகிழ்வது பாவமென்பதையும் பௌத்த, சமண இலக்கியங்கள் சுட்டிக்காட்டின. சமண பௌத்த கருத்துக்கள் அக்காலத்து மக்களை மிகவும் கவர்வதாக அமைந்தது. இந்து சமயத்தில் யாகங்களும், யாகங்களோடு இணைந்த உயிர்ப்பலியும் அதிகளவில் காணப்பட்டன. இதனால், மக்கள் சமண, பௌத்த போதனைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினர்.

சங்கமருவிய காலத்தில் சமணமும், பௌத்தமும் தழைத்தோங்கின. தமிழர்களில் பெரும்பாலனவர்கள் சமண,பௌத்த சமயத்தை சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர். வைதீக சமயங்களான சைவமும் வைணவமும் வீழ்ச்சியுற்று காணப்பட்டன. சங்கமருவிய காலத்திற்குப் பின்னரான பல்லவர் காலத்தில் சைவமும் வைணவமும் தழைத்தோங்குதவற்காக சமண, பௌத்த கருத்துக்கள் இந்தச் சமயங்களால் உள்வாங்கப்பட்டன. முக்கியமாக உயிர்க்கொலையை சைவ, வைணவ சமயங்கள் வெறுத்தன. உயிர்க்கொலை செய்வது பாவம் என்று போதித்தன. அவ்வாறே மது அருந்துவதும் கண்டிக்கத்தக்க செயலாக வைதீக சமயங்களால் கூறப்பட்டது. இது பல்லவர் காலத்தில் நிகழ்ந்த பக்தி இலக்கிய நெறியோடு நோக்கப்பட வேண்டியது.

இங்கு நாம் விபரிக்கும் விடயம் சங்கமருவிய காலத்து இலக்கிய வளர்ச்சியாகும் சங்கமருவிய காலத்துதமிழ் இலக்கியசெழுமைக்கு பௌத்தமும், சமணமும் பெரும்பங்காற்றின. பௌத்த நூல்களுள் தலைசிறந்த நூலாக சாத்தனார் இயற்றிய மணிமேகலை கருதப்படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை போற்றப்படுகிறது. பௌத்த சமய நெறியை உணர்த்தவே இக்காவியம் இயற்றப்பட்டது. இது மணிமேகலையின் துறவை விளங்குவதோடு, வாழ்வின் நிலையாமை உயிர்களிடத்தில் அன்பை செலுத்துதல், பற்றற்று இருத்தல் முதலிய பண்புகளை உணர்த்துகிறது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் குண்டலகேசியும் பௌத்த சமயம் சார்பான நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டலகேசி கள்வன் ஒருவனைக் காதலித்து மணம் செய்துகொண்டாள் அவள் விளையாட்டாக அவன் குறையை சுட்டிக்காட்ட அது வினையாக முடிந்துவிட்டது. அவன் அவளை ஏமாற்றி மலை உச்சிக்கு அழைத்து செல்கிறான் அங்கே வைத்து அவளிடம் தான் மலை உச்சியில் இருந்து அவளைக் தள்ளிக் கொன்றுவிடப்போவதாக கூறுகிறான். அவளோ சாவதற்கு முன் கணவனை மூன்றுமுறை வலம்வந்து வணங்கப்போவதாக தெரிவிக்கின்றாள். அவனும் அதற்கு சம்மதிக்க வலம்வருவதுபோல கணவனை வலம்வந்த குண்டலகேசி அவனை மலை உச்சியில் இருந்து தள்ளி கொன்று விடுகிறாள். பின்னர் பல இடங்களிலும் அலைந்துதிரிந்த குண்டலகேசி பௌத்த மதத்தை தழுவுகிறாள். குண்டலகேசி பலரை வாதில் வென்று இறுதியில் நீலகேசியிடம் தோற்றாள் என்று குறிப்பிடப்படுகிறது. இலக்கண நூல்களுள் வீரசோழியும் பௌத்த மதத்ததைச் சேர்ந்த புத்தமித்தரனார் என்பவர் இயற்றியதாகும். கீழ்க்கணக்கு நூல்களில் ஒருசில பௌத்த சார்புடையன.

பௌத்தமும் வளர்ச்சி யுற்றிருந்த சங்கமருவிய காலத்தில் நீதி நூல்கள் பல எழுதப்பட்டன. இந்த நீதி நூல்களுள் ஒரே புலவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய பல பாடல்களை காணக்கூடியதாக இருக்கின்றது. பல புலவர்கள் பாடித்தொகுத்த பாடல்களும் உள்ளன. இக்காலத்தில் கட்டுரை எழுதும்போது ஒரு தலைப்பை தேர்ந்தெடுத்து பின்னர் விளக்கம் தருவது சமண, பௌத்த இலக்கியங்கள் காணப்பட்டன. சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற திருக்குறள் குறிப்பிட்ட தலைப்பிற்கு ஏற்ப செய்திகளை அடுக்கி தொகுத்து கட்டுரை வடிவில் அமைந்துள்ளது. ஏனைய நூல்களும் இவ்வாறே அமைந்துள்ளன. திருக்குறள் ஆசிரியரால் பாடப்பட்டது. நாலடியார் பல ஆசிரியர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். தனிப்பட்ட ஆசிரியர்கள் எழுதிய நூலாயினும் பண்டைக் கருத்துக்களை தொகுத்தமையும் போக்கை பெரிதும் தழுவியுள்ளன. பழமொழி என்பது பழைய மொழிகளை தொகுத்து பாடியதாகும். ஏனைய நூல்கள் தனித்தனி புலவர்களால் பாடியவை. எனினும், ஒருவரைப் பார்த்து ஒருவர் போட்டியிட்டு சிறந்த கருத்துக்களை அறிவிப்பதில் முந்திக்கொள்ள முயன்றனர். மருத்துவன் உடம்புக்கு நல்லது இது உடம்புக்கு ஆகாதது இது என விதித்தும், விலக்கியும் கூறியது போல எழுதப்பட்ட இலக்கியங்களும் காணப்படுகின்றன. இனியவை நாற்பது இன்னா நாற்பது என்பது ஒன்றைப் பார்த்து மற்றொன்று அமைந்தது போல் காணப்படுகின்றன.

சொல்வதை அளவாகச் சொல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடோடு எழுதியவர்களும் உள்ளனர். அதிகமாக வற்புறுத்தினால் நீதிகளும் கசந்துவிடும். பிரசாரநெடி மிகுந்த இலக்கியங்களை மக்கள் விரும்பி படிக்க மாட்டார்கள். ஈரடிகள் கொண்டு விளக்குவது திருக்குறள் நாலடிகளில் இயற்றப்பட்டது நாலடியார். ஆலும்வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழியும் இதனாலேயே எழுந்தது. நாலடியார் வாழ்க்கையின் நிலையாமை தத்துவத்தை அதிகம் கூறுவதாக உள்ளது. திருக்குறளைப் பின்பற்றி காமத்துப்பாலும் இதில் உள்ளது. சமண, சமயப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலாக நாலடியார் கருதப்படுகிறார்.

சிந்தாமணியை எழுதிய திருத்தக்கதேவர் வாழ்க்கையில் நேர்த்தியான கொள்கை உடையவர் துறவியாக வாழ்ந்தவர் வாழ்வின் நிலையாமையை உணர்ந்தவர் பிரம்மச்சாரியாக வாழ்ந்தவர் சமண சமயத்தவராக காணப்பட்டார். இதுவே அவர் காவியத்தின் நெறியாகவும் திகழ்கிறது. சிந்தாமணி என்ற இலக்கியத்தின் நாயகனான சீவகன் எட்டுத் திருமணங்கள் செய்தவன். வாழ்வின் நிலையாமையைக் கண்டு அவ்வாழ்வை வெறுத்தொதிக்கிவிட்டதால் அமைதி கண்டான் கன்னியர் எண்மரை காதல் மணம் புரிந்தான் அதன் காரணமாக எதிர்த்த மன்னர்கள் பலரை புறமுதுகிடும்படி போரில் வென்றான் காதலும், வீரமும் காவிய உணர்வுகளாக காட்டப்பட தீவினை தோற்றலும் அறம் வெல்லலும் கதையின் முடிவாக அமைகிறது சூழ்ச்சி மிக்க கட்டியங்காரன் இறுதியில் தோற்க, நன்மை வெல்வதை இங்கே திருத்தக்கதேவர் எடுத்துக்காட்டியுள்ளார். இத்தகைய போராட்டக் கதையை எழுதியதோடு இடையிடையே சமண சமயக் கருத்துக்களையும் இவர் புகுத்தியுள்ளார்.

வளையாபதி குண்டலகேசி ஆகிய காப்பியங்கள் கிடைக்கப்பெறவில்லை. இவற்றின் ஒரு சில பாடவ்களே கிடைத்தன. வளையாபதி சமண சமயக் கருத்துக்களை உள்வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டது. குண்டலகேசி பௌத்த சார்புடைய நூல் என்று அறியமுடிகிறது. நீலகேசி என்னும் நூல் சமண நூலாக கருதப்படுகிறது. உதயணன் கதையை கூறுவது உதயணக்குமார காவியம், யசோதரக் காவியம் என்பதும் சமண நூலாகும் இது உயிர்கொலையின் தீமையைப் பற்றியும், ஒழுக்க உயர்வைப் பற்றியும் எளிய நடைமுறையில் எழுதப்பட்டுள்ளது.

சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற சமண பௌத்த இலக்கியங்களுக்கு பிற்பட்டதாகவே நாயன்மார்களால் பாடப்பெற்ற தேவார பிரபந்தங்களும், சேக்கிழார் பெருமானால் பாடப்பெற்ற பெரியபுராணமும் காணப்படுகிறது எனவே சைவ, வைணவ அறிஞர்களுக்கு முன்னராகவே சமண, பௌத்த அறிஞர்கள் தமிழிலே சிறந்த இலக்கியங்களை எழுதியுள்ளனர் என்பதை வரலாற்றில் இருநது அறியமுடிகிறது. சமண, பௌத்த இலக்கியங்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்துள்ளன என்பதை இதில் இருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை
## (சிறுகதை)

ஆக்கம்.
ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்.

கிராமத்தின் மேற்குப் பக்கமாக பரந்து விரிந்திருக்கும் சிறுகாடு பற்றைகளும், இடையிடையே எழுந்து நிற்கும் ஓரிரண்டு பெரிய மரங்களும், பற்றைகளை ஊடறுத்து எழும் பல கொடிகள் மரங்களைச் சுற்றியிருக்கும். இவற்றிடையே ஆங்காங்கே தெரியும் ஒற்றையடிப் பாதைகள் இவை இங்கு வேட்டைக்கு வருபவர்களால் உருவாக்கப்பட்டவை, இந்தக்காட்டுப் பகுதியில் பெரு விலங்குகள் இல்லாத போதும் முயல், உடும்பு, பன்றி, பல்வகைப் பறவைகளையும் காணமுடியும். இப்பொழுதெல்லாம் ஓரிரண்டு பேர் எப்பொழுதாவது வேட்டைக்கு வருவார்கள். எனெனில் கிராமத்திற்கு கிடைத்த கல்வியறிவு பெரும்பாலானவரை நகரத்தை நோக்கி நகர்த்திவிட்டது. முன்பு முத்தப்பு ஊரின் பெயர் போன வேட்டைக்காரர், அவரின் பின் பேரன் அருச்சுனனை காட்டுப்பக்கம காணமுடியும்.

அருச்சுனன் ஒற்றையடிப் பாதையில் புதிதாக முளைத்திருந்த கிளைகளை கத்தியால் வெட்டியபடி நகர அவனது நாய்கள் இரண்டும் மோப்பம் பிடித்தவாறு முன்னால் நகர்ந்து கொண்டிருந்தன. அவைக்கு இப்போது எட்டு வயதாகிவிட்டன. இவை, அருச்சுனன் தன்னுடைய பன்னிரண்டு வயதில் தாத்தா வீட்டிலிருந்து கொண்டு வந்த கடுவன் குட்டிகள் . தாத்தா முத்தப்புவிடம் நன்கு பயிற்றப்பட்ட ஆறு வேட்டை நாய்கள் இருந்தன. அருச்சுனன் அவற்றோடு விளையாடுவதற்காக அடிக்கடி தாத்தா வீட்டிற்கு போவான். அன்றொரு நாள் தாத்தா வீட்டு முற்றத்திற்கு நுழைந்து,

"தாத்தா.... தாத்தா...." என்று அரச்சுனன் அழைக்க தாத்தாவின் வள்ளி வழமைக்கு மாறாக ஆக்ரோஷமாக குரைத்துக் கொண்டு வந்தது. தாத்தா வேகமாக வந்து நாயைப் பிடித்துக் கொண்டார்.

"அப்பு... பயப்பிடாதை... அது குட்டி போட்டிருக்கு அது தான் .. உப்பிடி நிக்குது..."

வள்ளி சிறிது நேரத்தில் அமைதியாகியது பின் உடலை ஒடுக்கியவாறு தன் குட்டிகள் படுத்திருந்த இடத்திற்கு ஓடியது. அரச்சுனன் ஆரம்பத்தில் குட்டிகளை தூரமாக நின்று பார்த்தான். பின் மெல்ல, மெல்ல நெருங்கிச் சென்று குட்டிகளை தூரமாக நின்ற பார்த்தான் பின் மெல்ல, மெல்ல நெருங்கிச் சென்று பார்க்க, வள்ளியும் அனுமதித்தது. அவை சற்று வளர்ந்ததும் இரண்டை வீட்டிற்கு தூக்கி வந்து விட்டான் . அரச்சுனன் வீட்டில் ஒரு பிள்ளை. படிப்பில் நாட்டம் இல்லை. பெற்றோரின் வற்புறுத்தலால் பாடசாலைக்கு போய் வந்தான் மிகுதி நேரமெல்லாம் நாய்களுடன் காடுமேடு எங்கும் அலைவான் தாத்தாவிடம் இருந்த வேட்டை நுட்பங்கள் இயல்பாகவே இவனிடம் வந்துவிட, தன் நாய்களுக்கு அவற்றைக் கற்றுக் கொடுத்தான் . அருச்சுனன் அவற்றை தன் சகோதரர்கள் போலவே கருதினான். கூடவே கட்டிப்பிடித்து உறங்குவதும், சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தில் குளிப்பதும் மட்டுமல்லாது நாய்களுக்கு அருச்சுனன் பேசுவதை புரிந்து நடக்கவும் தெரிந்திருந்தது. ஒன்று தனிக்கறுப்பு நிறம். அதை வீரன் என்று என்று சொல்லி அழைப்பான். கறுப்பு நிறத்தில் நெற்றியில் வெள்ளைப் பொட்டுடையதை வெள்ளையன் என்று அழைப்பான்.

அருச்சுனன் பதினாறு வயதுடன் பாட-சாலைப் பக்கமே போகாது நின்று விட்டான். அதன் பிறகு காடும், ஊருமே உலகமாகியது. தந்தையோடு தோட்ட வேலைகள் செய்வதும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேட்டைக்குப் போவதையும் வழக்கமாகக் கொண்டான்.

தாய் முத்துலட்சுமிக்கு மகன் வேட்டைக்குப் போவது பிடிப்பதில்லை "ஏன்... தம்பி உந்த பாவத்தை ... உழைக்கிறாய் ..விடு ..." என்கின்றபோது.

"ஓமம்மா... இந்தக் கிழமை மட்டும் போறன் ..." என சொல்லிச் சொல்லியே காலத்தைக் கடத்தி விட்டான். அவனும் தாய் சொல்லுகின்ற நேரங்களில் யோசிப்பான். ஆனால் ஞாயிறு வந்துவிட்டால் அதிகாலையி-லே எழுந்து நாய்களுடன் புறப்பட்டுவிடுவான். சில வேளைகளில் அருச்சுனன் நித்திரையில் எழும்பப் பிந்திவிட்டால், அவனது நெஞ்சின் மேல் கால்களைப் போட்டு அசதியில் உறங்கும் அவன் முகத்தை நக்கி எழுப்பிவிடுங்கள் இன்றும் அவ்வாறு தான் நடந்தது. அருச்சுனன் தாயின் சேலையினால் தன்னை முழுமை-மயாக மூடிக்கொண்டு சுருண்டு படுத்திருந்தான். வெள்ளை தன் முன் இடது காலினால் மெல்லத்தட்டியது. அருச்சுனன் மறுபக்கம் சுருண்டு படுத்துக் கொள்ள, வீரன் முதுகுப் பக்கமாகச் சென்று இடித்தது. அருச்சுனன் போர்வைக்குள் சிரித்துக் கொண்டே அவற்றின் செயல்களை இரசித்தான். வெள்ளைக்கு சற்று கோபம் வந்துவிட ரோர்த்திரந்த சேலையை வாயினால் கௌவி இழுத்துக் கொண்டு சென்று முற்றத்துப் புழுதியில் போட்டுவிட்டு வந்தது. அரச்சுனன் தெரியாதது போல் குப்புறப் படுத்துக் கொண்டான். நாய்கள் இரண்டும் அவன் முதுகில் படுத்துக் கொண்டு சிணுங்கின. அவற்றின் சத்தம் கேட்ட தாய் அடுப்படிக்குள் நின்று எட்டிப் பார்த்தாள்.

"தம்பி ... எழும்பு... முதலிலை முகத்தை கழுவிப்போட்டு வாழைக்கு தண்ணி விடு... இண்டைக்கு உடும்பு பிடிக்க போக வேண்டாம்... இவை இரண்டு பேரையும் கட்டி வைச்சால்... சரி..."

அதைப் புரிந்து கொண்ட, நாய்கள் இரண்டும் முத்து லட்சுமியை பார்த்துக் குரைத்தன. அதில் கோபம் இருந்தது.

"வாறன் இரண்டு பேரையும் கட்டி வைச்சிடுவன் ...தம்பி சங்கிலியை எடுகட்டுவம் ..."

சங்கிலியென்றதும், நாய்கள் இரண்டும் வேகமாக வெளி-யே ஓடிச் சென்று தெருவில் நின்றன.

"அம்மா... இண்டைக்கு மட்டும் போட்டு வாறன்..."
" நீ... நிண்டாலும்.. உந்த நாயள் நிக்காது..."
வழமை போல் தாயோடு போராடி வேட்டைக்குப் புறப்பட்டான். அடர்ந்த பற்றைக் காட்டுப் பகுதிக்கு வந்ததும் சேற்றுநிலத்தில் புதையும் கால்களை நிதானப்படுத்தியவாறு வெட்டிய பற்றைகளை கத்தியினால் ஒதுக்கிவிட்டுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகையிலிருந்த காட்டுத் தடியினைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டான். அரச்சுனன் இன்று வேட்டைக்கு உடும்பினை எதிர்பார்த்தான். மழை பெய்து, ஓய்ந்து வெயில் எறிக்கும் காலைப் பொழுகளில் உடும்பின் நடமாட்டத்தை காணமுடியும் என்பது அவனது அனுபவம். உடும்பு வேட்டையில் இரண்டும் வீரன்கள். வேட்டை பழக்கும் ஆரம்பத்தில் உடும்பினை மோப்பம் பிடிக்கப்பழக்குவது ஒரு நுட்பம் உடும்பொன்றின் ஈரலோடு இருக்கும் பச்சைநிற சிறிய பித்துப் பையை ஈரலில் படாமல் வெட்டியெடுப்பர். அதில் இருக்கும் பித்தை செத்தல் மிளகாயின் இருமுனைப் பகுதிகளை கிள்ளியெறிந்து விட்டு அதை நாயின் மூக்கில் வைத்து எடுத்த பித்தை அதனுள் வைத்து வேகமாக ஊதிவிடுவார்கள், அது வேகமாக சென்று மூக்கில் அடிக்கும். இதை பித்து தேய்த்தல் அல்லது பித்தடித்தல் என்பர். மிளகாயின் எரிச்சலோடு உடும்பின் வாசனையை முதலில் தெரிந்து கொள்ளும் இந்த முதலாவது அனுபவம் உடுமபை ஆக்ரோஷமாக பிடிக்க வைக்கும். இதை தனது நாய்களக்கு தாத்தாவோடு சேர்ந்து செய்திருந்தான்.

நாய்கள் இரண்டும் முன்னே ஓடின. நாய்கள் முன்னே சென்றால் பாதுகாப்பாக முன்னோக்கி நகரலாம் என்பது அவனுக்கு தெரியும் இதனால் அவற்றின் பின்னால் சென்றான். அவை ஒரு பற்றையின் முன்னே நின்று கொண்டன. அவனும் அவற்றின் அருகே சென்று நின்றான். அவை இரண்டும் ஒரே நேரத்தில் பின்னங்கால்களில் நின்று கொண்டு முன் இரண்டு கால்களை தூக்கி அருச்சுனனின் தோள்களில் போட்டன. அவற்றை வாஞ்சையுடன் தடவி விட அவை செல்லச் சிணுங்கலுடன் கீழே இறங்கின.

இப்பொழுது இரண்டும் நல்ல அழகாக வளர்ந்துவிட்டன. அருச்சுனனின் கவனிப்பில் மொழு, மொழுவென வளர்ந்து நிற்பதுடன், சற்று நீண்ட காதை அங்குமிங்கும் திருப்பி சூழலை அவதானிக்கு செயல் அவற்றுக்கு இன்னும் கம்பீரத்தைக் கொடுக்கும்.

“வீரா… சரி… சரி…உடும்பை பார்.. இந்த பக்கமாத்தான் இருக்கும்…”

வீரன் அங்குமிங்கும் பதுங்கி தேட ஆரம்பிக்க, வெள்ளை அதற்கேற்றாப்போல் எதிர்பக்கமாக பதுங்கியது. அரச்சுனன் உதட்டைக் குவித்து காற்றை உள்ளிழுத்து விசிலடிக்க அவை இரண்டும். முன்னேறியது நாக்கை விரலினால் மடித்து காற்றை வெளியே விட்டு விசிலடித்தால் வீரனும், வெள்ளையனும் பல மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் அவனிடம் ஓடிவந்துவிடும் இவை அருச்சுனன் கற்றுக் கொடுத்த வித்தைகள்.

முன்னே நகர்ந்த நாய்கள் இரண்டும் ஏதோவொன்றை மோப்பம் பிடித்துவிட்டது என்பதை அவன் உணர்ந்தான் அவை தம் முன்னங்கால் விரல்களால் நிலத்தை மெல்லத்தட்டியவாறு பதுங்கி, பதுங்கி நகர்ந்தன. முன்னே விழும் நகக்கீறல்கள் நிலத்தை உரசி வரும் அவற்றின் உடல்களால் அழிந்தன. அரச்சுனன் அவற்றின் பின் மெதுவாக நகர்ந்தான் காய்ந்த சருகுகள் மழை ஈரத்தில் ஊறிப் போனதால், காலடி ஓசை கேட்காது நகர முடிந்தது. இரண்டும் தமக்குள் சமிக்ஞை செய்வது போல் குரைத்தபடி ஒரு புள்ளியை நோக்கிப் பாய்ந்தன.

பெரிய உடும்பொன்று பற்றையை விட்டு வெளியே பாய்ந்து ஓட ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்கள் பற்றைக்குள் புகுந்து ஓடும் உடும்பை விரட்டியபடி ஓட,அருச்சுனனால் அவற்றோடு ஓட முடியாதனால் ஒற்றையடிப் பாதை வழியே அவற்றைத் தொடர்ந்தான் நாய்களின் குரைப்பும், கூடவே ஓடும் அருச்சனின் பாதம் எழுப்பிய சத்தமும் சிறுகாட்டைக் குழப்பிவிட, மரங்கள் மீது உற்சாகத்தோடு பறந்து விளையாடிய பறவையினங்கள் பயத்துடன் தூர எழுந்து பறந்தன. பறவைகளின் அபாய ஒலியினால் மனித நடமாட்டத்தைப் புரிந்து கொண்ட விலங்குகள் பாதுகாப்பான இடத்தை நோக்கி ஓடின.

"வீரா ... வெள்ளை... வீரா..." அரச்சுனன் நாய்கள் இருக்கும் இடத்தை தெரிந்து கொள்வதற்காகக் கத்தினான் அவையும் அரச்சுனனை தம்பக்கம் வரவைப்பதற்காகக் குரைத்தன. அந்த குரைப்பின் அர்த்தம் உடும்பை ஏதோவொரு வகையில் பிடித்து வைத்துள்ளன என்பதாகும் அருச்சுனன் காட்டில் தன்னிச்சையாக வளர்ந்து நிற்கும் சிறிதும் பெரிதுமான விளாமரங்களை ஊடறுத்து நகர்ந்தான் சத்தம் நெருக்கமாக கேட்கும் தூரம் வந்தவுடன் அரச்சுனன் முகத்தில் புன்முறுவல் நாய்களும் அரச்சுனனை கண்ட மகிழ்வில் செல்லச் சிணுங்கலுடன் பட்டுப்போன மரமொன்றின் கீழிருந்த பொந்தின் வாயிலை கால்களால் விறாண்டியவாறு நின்றன. உடும்பு பொந்தில் நுழைந்தவிட்டது. எனப் புரிந்து கொள்ள முடிந்தது. அரச்சுனன் அவற்றைப் பின்னால் நகருமாறு சைகை காட்டிவிட்டு கொண்டுவந்த காட்டுத் தடியினால் பொந்தை உடைக்க ஆரம்பித்தான் சிறிது உடைந்ததும், நாய்களும் இணைந்து மண்ணை விறாண்டின. உடும்பும் தன் பலங்கொண்ட வரை மண்ணைத் துளைத்து உள்ளே போகும் ஒரு கட்டத்தில் நாய்களிடம் தப்பித்துக் கொள்வதற்காக ஓடிய களையும், பொந்து துளைத்த களையும் அதற்கு சோர்வைக் கொடுக்க ஓர் இடத்தில் தன் முயற்சியை நிறுத்திக் கொள்ளும். அரச்சுனனுக்கு அதன் எல்லை தெரியும். அது நாய்களுக்கும் தெரியும் எதிர்பார்த்த கணத்தில் உடும்பு இயலாமையுடன் வெளியே ஓட ஆரம்பித்தது.

வீரன் ஒரே பாய்ச்சிலில் பாய்ந்து உடும்பின் கழுத்தை கௌவிப் பிடித்தது. மேலும் அது ஓடாமல் இருக்க தன் முன் வலது காலால் அதன் முதகை அழுத்தியது. வெள்ளை தன் பங்கிற்கு அது தப்பினால் பிடிப்பதற்கு ஆயத்தமாக முன்னே படுத்துக்கொண்டது. வீரனும், வெள்ளையும் ஒரு வயது நிரம்பிய போது முதல், முதலாக வேட்டைக்கு வந்தது தொடக்கம் இற்றை வரையும் வேட்டையாடும் உடும்பையோ, பன்றியையோ, முயலையோ கடித்துக் காயப்படுத்தியதில்லை. கவனமாக கௌவி வைத்திருப்பதோடு, ஓடவிடாது வளைத்து வைத்திருககும்.

அரச்சுனன் வீரனுக்கு அருகே சென்று, உடும்பின் தலையை நிலத்தோடு அழுத்திப் பிடித்துக் கொண்டு அதே கணம் வாலையும் அழுத்திப் பிடிக்க, வீரன் தன் பிடியை விட்டு பின்னே நகர்ந்து சந்தோஷத்தோடு துள்ளி துள்ளிக் குரைக்க ஆரம்பித்தது. வெள்ளையும் அதனுடன் இணைந்தது. இனி வேட்டைக்கட்டு அல்லது உடும்புக்கட்டு என அழைக்கப்படும் கட்டு போட வேண்டும் அருச்சுனன் கீழே மெதுவாக அமர்ந்தான் உடும்பு விடுபடுவதற்கு முயன்றது. அதன் வாலை முதுகுப் பக்கமாக வளைத்து பின்னங்கால்களுடன் இணைத்துக் கட்டிவிட்டு, முன் இரண்டு கால்களின் நடுநகத்தை இழுத்தான் இவை இறப்பர் பொல் இழுபட்டு வந்தது அவ்வாறு வரும் இரண்டு கால-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் முதுகுப் பக்கமாக வளைத்துக் கட்டிவிட்டான். இனி உடும்பினால் ஓட முடியாது. மூவரும் ஒற்றையடிப் பாதையோரம் அமர்ந்தனர் அருச்சுனன் தாத்தா பாடுவது போல் பாடினான். "வேட்டையல்லோ வேட்டை நாமாடி வீற்றிருந்தோம் நடுக்கானகத்தில்.." நாய்கள் நாக்கை நீட்டி மூச்செறியும் சத்தம் பாடலோடு இசைந்தது. பாடி முடித்ததும்.

"இண்டைக்கு............................ உங்கள் ரண்டு பேருக்குத் தான் கறி... நல்லா... கரச்சல் பட்டிட்டியள்..' அவற்றின் தலையை தடவிக்கொடுத்தான். இன்னும் ஒரு உடும்பு பிடித்தாக வேண்டும்.

அருச்சுனனுக்கு இன்று ஒன்றுடன் போய்விடுவோம் என்று தோன்றியது ஆனால் பழக்கப்பட்டுவிட்ட நாய்களோ, அடுத்த வேட்டைக்கு தயாராகி அங்குமிங்கும் ஓடியது. அருச்சுனனுக்கு ஏனோ கால்கள் நகர மறுத்தன. வீரனும் வெள்ளையும் தூரமாக ஓடிவிட்டன. அவன் நாக்கை மடித்து காற்றை வெளியே விட்டு விசிலடித்தான். இரண்டும் ஓடிவந்து காலடியில் நின்றன.

"வீரா.. வெள்ளை வா.. போவம்.. இண்டைக்குகாணும்..." இரண்டும் அரச்சுனனின் முகத்தை சற்றுநேரம் பார்த்துவிட்டு வீடு வர மறுத்தவை போல மீண்டும் ஓடின அவனும் அவற்றைத் தொடர்ந்தான். மீண்டும் வேட்டை உயிர் பெற்றது. காட்டின் வடக்குப் பக்கமாக நகர்ந்தனர். ஒற்றை பனை அதைச் சுற்றிய பற்றை. அதனுள் நாய்கள் இரண்டும் நுழைந்தன. அத்தருணம் பனையிலிரந்து காவோலையொன்று மரத்தை உரசிக்கொண்டு கீழே விழுந்தது. நாய்கள் இரண்டும் வேகமாக பின்னோக்கி ஓடிவந்தன. அவை அவ்வாறு ஓடிவந்தால், ஆபத்து ஓடு என்பது அர்த்தமாகும். அரச்சுனன் அந்த இடத்தை விட்டு ஓடியவாறு பின்னே திரம்பிப் பார்த்தான் பற்றைகளுக்கு மேலாக கருங்குளவிகள் எழுந்து பறந்தன. ஓலை விழுந்த போது அதிலிருந்து குளவிக்கூடு கலைந்திருக்கக்கூடும். கருங்குளவிகள் துரத்தி வரும் என்பதால் வேகமாக ஓடினான். நாய்களும் கூடவே ஓடின. ஆனாலும் வழமைக்கு மாறாக அவற்றின் வேதனை முனகல் வருவதைக் கேட்டு சடுதியாக நின்றான். நாய்கள் இரண்டும் அருச்சுனனின் காலடியில் சுருண்டு படுத்தன. கருங்குளவிகள் தூரமாக பறந்தன.

அருச்சுனன் இதயம் படபடக்க நாய்களை தடவிப் பார்த்தான். அடர்த்தியாக வளர்த்திருந்த அவற்றின் முடியிடையே இனங்காண்பது கடி-னமாக இருந்தது. இரண்டும் ஈனக்குரலில் கத்தின. அவற்றை குளவிகள் கொட்டிவிட்டன. என்பது தெரிந்தது. இரண்டும் நடக்க முடியாது தள்ளாடின. அரச்சுனன் தடி, கத்தி, கட்டிய உடும்பையும் கீழே பொட்டு விட்டு, அவை இரண்டையும் இரு தோள்களிலும் தூக்கிப் போட்டுக் கொண்டு வேகமாக கிராமத்தை நோக்கி ஓடினான். இதனால் ஒற்றையடிப் பாதைப் பக்கமாக நீண்டிருந்த தடியொன்று இடது தோள் மூட்டில் குத்தி இரத்தம் கசிந்தது.

தோள்களில் இரண்டு நாய்களையும் தூக்கி ஒடும் அரச்சுனனின் தோற்றம் நடந்த விபரீதத்தை உணர்த்த, பின்னால் ஊரே ஒடியது.

"என்னப்பா... அரச்சுனா... என்ன நடந்தது?" "அம்மா.. வீரனுக்கும் .. வெள்ளைக்கும் ... குளவி கடிச்சிட்டுதம்மா..." அரச்சுனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் இரண்டையம் தன் மடியில் வைத்துக் கொண்டு ஊரே கேட்கும்படி கத்தியழுதான் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் கூடினர்.

"தம்பி.. அழாதை இப்ப... வாறன்;..." தாய் அடுக்களைப் பக்கமாக ஓடிச்சென்று புளியை எடுத்து வந்தாள். அரச்சுனன் தாயோடு சேர்ந்து, குளவி கொட்டிய இடங்களைத் தேடி புளியைப் பூசினான். அப்பொழுதுதான், பல இடங்களில் குளவி கொட்டியிருப்பதை தெரிந்து கொண்டான். ஆங்காங்கே இருந்த குளவிகளின் கொடுக்குகளை இழுத்து கீழே போட்டான்.

நாய்கள் தங்கள் இயலாமையிலும், அரச்சுனனை சமாதானப் படுத்துவது போல் அவன் கைகளை நக்கின. அங்கு கூடியவர்கள்

"தம்பி .. விசமேறிட்டுது ... மிருக வைத்தியரிட்டை கொண்டு போ..."
"ஞாயிற்றுக்கிழமைகளிலை... டொக்டர் நிக்க மாட்டார்.."
விடிஞ்சதும் கொண்டு போ....."
"விடியும் ..வரை..தாக்கு பிடிக்கோணும் .." பேசிக் கொண்டனர்.

அருச்சனன் தனக்குத் தெரிந்த கை மருந்துகளை போட்டுப் பார்த்தான் நேரம் செல்லச் செல்லல நாய்கள் இரண்டும் சோர்ந்தன. மருந்திடுவதற்காக கீழே படுக்க வைத்தபோதும். அருச்சுனனின் மடி தேடிப்படுத்துக் கொண்டன. "தம்பி.. தண்ணீ ..குடி தம்பி சாப்பிடும, அதகளக்கு சுகம் வரும்..." தாயும் தந்தையும் அழைக்க, மறுத்துவிட்டு வீரனையும் வெள்ளையும் அணைத்துக்கொண்டு படுத்தான் கூடியிருந்தவர்கள் மெல்ல, மெல்ல சென்றுவிட, வீடு அமைதியானது. அருச்சுனனுக்கு இயற்கை உபாதை ஏற்பட தாயை அருகே அழைத்தான்.

"அம்மா இரண்டையும் மடியிலை வைச்சிருங்கோ பின்னாலை போட்டு வாறன்..." கீழே கால்களை நிட்டி அமர்ந்திருந்த தாயின் மடியில் நாய்கள் இரண்டையும், படுக்க வைத்துவிட்டு பின்புறம் சென்று வளவின் ஓரமாக இருந்த மலசலகூடத்தில் நுழைந்து கதவைச் சாத்தினான் சிறிது நேரத்தில் தண்ணீரை ஊற்றி வெளியே வர வெள்ளை ஊர்ந்து வந்து வாசலில் படுத்திருந்தது.

"தம்பி..பாக்கிறன்... நீ...கை காலைக் கழுவிப் போட்டு வா..."

அருச்சுனன் கிணற்றிடிக்குச் சென்று கை, காலை கழுவி வர முத்துலட்சுமி வீட்டின் இடது பக்கமாக போட்டிருந்த சிறிய கொட்டிலில் வைத்து நாய்களுக்கு மீண்டும் புளியைப் பூசிக் கொண்டிருந்தார்.

"அம்மா கோயில் பக்கம் போட்டு வாறன் பாருங்கோ..."

வீரா கண்ணை ஒரு கணம் திறந்து பார்த்து விட்டு பேசாமல் படுத்துக் கொண்டது. ஊரின் நடுவே ஆலமரத்தின் கீழ் சிறிய பிள்ளையார் கோயிலிருந்தது. அரச்சுனனுக்கு வெள்ளையும், வீரனையும் விட்டுப் பிரிய மனமின்றி கோயிலடிக்கு வந்திருந்தான். மதியம் கடந்திருந்தது. கோயில் சூழலில் ஆள் நாட்டமே இல்லை. அதிகாலையில் மழை பெய்து ஓய்திருந்தால், குளிர் காற்று வீசியது. மேய்ச்சலுக்குப் போன ஐந்து ஆடுகள் படுத்திருந்து அசை போட்டன.

அருச்சுனன் பிள்ளையாரின் முகத்தை பார்த்தவாறு நிலத்தில் அமர்ந்தான் கட்டுப்படுத்தி வைத்திருந்த கண்ணீர் பொல பொலவென வடிந்து சப்பாணி கட்டியிருந்த அவன் பாதங்களில் வீழ்ந்தது. எத்தனை நாட்கள் தன் நாய்களுடன் கே-ாயில் வாசலுக்கு வந்திருப்பான். பிள்ளையாரிடம் வீரனையும் வெள்ளையையும் காப்பாற்றும்படி மனதார வேண்டினான். நீண்ட நேரம் அங்கு அவனால் இருக்க முடியவில்லை. எழுந்து வெ-கமாக நடந்தான். அவனின் சத்தத்தில் வெருண்ட ஆடுகள் எழுந்து, வயல் பக்கமாக ஓடின. அருச்சுனனின் வரவைப் புரிந்து கொண்ட நாய்கள் இரண்டும முத்துலட்சுமியின் மடியில் இருந்து அருச்சுனனின் காலடியை நோக்கி ஊர்ந்து வந்தன. தந்தை சாணகத்தால் மெழுகப்பட்ட வெற்று மண்தரையில் கைக-ளை தலையணையாகவும் மடித்து வைத்து கூரையைப் பார்தததபடி படுத்திருந்தார். வெற்றிலையை மெண்டு கொண்டிருந'மதல் மகனை சாப்பிடுமாறு கைகளால் சைகை செய தார். நேரம் ஐந்தை தாண்யது. அருச்சுணன் சாப்பிடாததால் தாயும் தந்தையும் சாப்பிடாமல் இருந்தனர். அவர்களை சாப்பிட வைக்க வேண்டும் என்பதற்காக தாயி-டம் சாப்பாட்டை போட்டுத் தரும்படி கேட்டான்.

முத்துலட்சுமி சோற்றையும் மீன் குழம்மையும் தட்டில் போட்டுக்கொண்டு வந்து மகனிடம் கொடுத்துவிட்டு தண்ணீர் செம்மையும் கீழே வைத்தாள்.

"அம்மா வீரனையும் வெள்ளையையும் பாருங்கோ.. நான் சாப்பிடுறன்..."
தாய் சென்றுவிட மீனை பிய்த்து சோற்றுடன் குழைத்து வாயருகே கொண்டு போனவன் தாய்க்கு கேளாது விம்ம ஆரம்பித்தான். நாய்கள். இரண்டிற்கும் மீனும் சோறும் பிடிக்கும். அருச்சுனன் சாப்பிட நாக்கை தொங்க விட்டுக் கொண்டு அமர்ந்துவிடுங்கள். அருச்சுனன் அவை இரண்டிற்கும் சோற்றை உருட்டி தன் உள்ளங்கையில் வைத்துக் கொடுப்பான். அவை பசியாறியதன் பின்பு தான் சாப்பிடுவான். அந்த நினைவு வந்துவிட அவனால் சாப்பிட முடியவில்லை. தாய்க்குத் தெரியாது, சாப்பாட்டை அடிவளவில் கொட்டி விட்டு ஒரு செம்பு தண்ணீரால் தன் வயிற்றைநிரம்பிக் கொண்டான். தான் அழுதது தாய்க்குத் தெரியாமல் இருக்க கட்டியிருந்த சாரத்தை தூக்கி முகத்தை துடைத்தான். துடைக்க துடைக்க கண்ணீர் பெருகியது. உலகத்தில் தனித்து விடப்பட்டவனாக உணர்ந்தான்.

தாய்க்குத் தெரியாமல் நாய்களுக்கு அருகே சென்று அவற்றின் உடலினுள் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான் முத்துலட்சுமிக்கு மகன் வேதனைப்படுவதையும், தனக்குத் தெரியாமல் அவன் அழுவதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

"தம்பி சாப்பிட்டியே?..."
"ஓமம்மா சாப்பிட்டன்"
"சத்தியமா...?"
"சத்தியமா சாப்பிட்டன்...." முகத்தை எடுக்காமல் கூறினான்.

மகன் சாப்பிட்டு விட்டான் என்ற சந்தோசத்தில் கணவனுக்கும் சோற்றை கொடுத்து தானும் சாப்பிட்டாள். நாய்கள் இரண்டிற்கும் தாய் பின்னேரமாக கறந்த பாலை காய்ச்சி ஊட்டினாள். அவை இரு மிடறு பருகிவிட்டு படுத்து விட்டன.

கொட்டிலுக்கு மின் இணைப்பு இல்லாதால் லாந்தர் விளக்கொன்றை வைத்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துலட்சுமி. வழமைக்கு மாறாக ஊரின் நாய்கள் கூடிக் குரைக்க ஆரம்பித்தன. வீரன் அங்குமிங்குமாக புரண்டது. சிறிது நேரத்தில் முன்பாதமிரண்டையும் அரச்சுனனின் பாதத்தில் போட்டு அழுத்தியது. அதன் கண்கள் இரண்டும் முகத்தை உற்றுப் பார்த்தன. அருச்சுனன் அதன் முகத்தை இருகைகளாலும் தாங்கிப்பிடித்தான். அதன் விழிகள் மெல்ல மூடின. உடல் சோர்ந்து பக்கத்திருந்த வெள்ளையின் உடலோடு சாய்ந்தது. அருச்சுனன் தான் இருண்ட பாதாளத்தில் வீழ்வது போல உணர்ந்தான் அதில் இருந்து மீண்டு

"வீரா..வீரா.. எழும்பு..."

தாயும், தந்தையும் செய்வதறியாது மகனின் தோளை அணைத்தனர். குனிந்த தலை நிமிராது அழுதவன், திடீரென நினைவுக்கு வந்தவனாய் வெள்ளையின் காதோரமாக படுத்திருந்து, நாக்கை மடித்து காற்றை வெளியே விட்டு விசிலடிக்க ஆரம்பித்தான் அந்த விசிலின் ஓசை சிறிய ஓய்வதும் பின் கேட்பதுமாக விடியும் வரை கேட்டுக் கொண்டே இருந்தது. அந்த விசிலின் ஓசை வெள்ளையின் உயிரை, அரச்சுனின் காலடிக்கு கொண்டு வந்தது. பூவரசம் கிளையில் உறங்கிக் கொண்டிருந்த சேவலின் முதல் கூவலோடு, வெள்ளை முனகலின்றி சாதராணமாக உறங்க ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் வழக்கிலிருந்த நாட்டுப்புறப் பாடல்கள்

**திருமதி. துசிகாந்தினி சுதாகரன்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம், காரைநகர்**

காரைநகரின் கல்விப்பாரம்பரியத்தினையும் புலமை ஆளுமைகளையும் ஆராயும்பொழுது வாய்மொழி இலக்கிய மரபினையும், அம்மரபிலிருந்து முகிழ்த்த எழுத்திலக்கிய மரபினையும் அறிவது அவசியமாகின்றது. வில்லியம் ஜான் தாமஸ் முதன் முதலில் நாட்டார் வழக்காற்றியல் குறித்து கருதியபோது பழக்கவழக்கங்கள், நடத்தை முறைகள், சடங்குகள், மூடப்பழக்க வழக்கங்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள் போன்வற்றையே குறித்தார். அதாவது பழங்காலப் பண்பாட்டின் எச்சமே நாட்டார் வழக்காற்றியல் என்பதே இவரது கருத்தாக இருந்தது. மரபு வழியாக வழங்கப்படும் வழக்காறுகள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவுவதே நாட்டார் வழக்காற்றியல் என ஆர்ச்சர்ரெய்லர் கருதுகிறார். காரைநகர் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் எமுத்து இலக்கிய ஆற்றலும் ஆளுமையும் வாய்மொழி மரபுவழியே வளர்ந்து வந்துள்ளமையை அவதானிக்கமுடிகின்றது.

வாய்மொழி மரபில் ஒன்றான நாட்டார் பாடல்கள் ஆரம்பகாலங்களிலே இங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்று விளங்கின ஆனால் இன்று இவை சொல்வாக்கிழந்து போகின்றபோதும் முற்றுமுழுதாக அருகிவிட்டது என்று கூறிவிடமுடியாது நாட்டார் பாடல்கள் கிராமிய மக்களால் உடனுக்குடன் இசையுடன் பாடும் பாடல்களாகும் தமது உள்ளத்தின் வெளிப்பாட்டை தமது பேச்சு வழக்கிலுள்ளவாறு தனிப்பாடல்களாகவோ, கூட்டுப்பாடல்களாகவோ மக்கள் எளிய இசைநடையில் வெளிப்படுத்துவர். மருத்துவிச்சியின் வாழ்த்துப்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் பாடல்கள், சடங்குப் பாடல்கள், காதல் மணவாழ்த்து, கொண்டாட்டம், ஒப்பாரி, தெய்வங்கள், பக்தி ஆகியவை சாதாரண ஒரு மனிதனின் வாழ்க்கை பிறப்பு, வளர்ப்பு, திருமணம், வழிபாடு, தொழில், மரணம் என்ற சுற்றுவட்டத்துள்ளேயே (வாழ்க்கை வட்டச் சடங்கின் நிமிர்த்தம்) தொழிற்படுகின்றன.

மனிதன் இப்பூமியில் பிறந்த போது பாடும் நாட்டார் பாடலாக மருத்துவிச்சியின் வாழ்த்துப்பாடல் திகழ்கின்றது. அவதரித்த குழந்தையை பராமரிப்பதும் வாழ்த்துவதும் மருத்துவிச்சியின் கடமையாகிறது வசதிகளும், வாய்ப்புகளும் வளருவதற்கு முன் குழந்தைகள் வீட்டிலேயே பிறந்தனர் பிள்ளைப்பேறு பார்க்கும் மருத்துவிச்சி (அநேகமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அனுபவமுள்ள மூதாட்டிகளேமருத்துவிச்சிகளாகப் பணிபுரிந்துள்ளனர்) வாழ்த்துப் பாடலைப் பாடும்போது ஆண்குழந்தைகளுக்கு வேறாகவும், பெண் குழந்தைகளுக்கு வேறாகவும் பாடுவர். அயலவர்கள் மருத்துவிச்சியின் வாயில் புறப்படும் பாடலைக்கொண்டு ஆணா, பெண்ணா என்பதனை அறிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம் :- **"அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி**
**அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி**
**உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி**
**உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி**

போன்ற ஆண்குழந்தை வாழ்த்துப் பாடலை உதாரணமாகச் சுட்டலாம் மேலும்:-

**"கோச்சி வாழ கொப்பர் வாழ**
**பேத்தி வாழ பேரன் வாழ ..."**

என்றும் இறுதியில் மருத்துவிச்சி வாழ்த்துவாள் எனினும்மரத்துவிச்சியின்உதவிகொண்டுபிரசவம் பார்க்கும் வழக்கு இன்று வழக்கிழந்துவிட்டது.

குழந்தை வளரத் தொடங்கத் தொட்டிலிலே போட்டுத் தாலாட்டுவர். அச்சமயத்தில் தாலாட்டுப் பாடல் பாடப்படும் தாலட்டுப் பாடல்களைத் தாய்மார் பாடும்பொழுது அயல்வீடுகளுக்குக் கேட்கக் கூடியதாகவும் பாடுவர். தாலாட்டின் "இழுமென்" ஓசையும் தொட்டிலின் அசைவும் ஒன்றுசேரக் குழந்தை தன்னை மறந்து தூங்கிவிடும். தாயின் மனநிலைக்கு ஏற்பவும், குழந்தையின் உறக்க நிலைக்கு ஏற்பவும் இப்பாடல்கள் நீண்டதாகவும் சுருங்கியதாகவும் அமையும். அதிகமாக மெல்லோசைச் சொற்களே தாலட்டில் இடம்பெறுவது முக்கியமான அம்சமாகும். தாய்மாரின் உணர்வுகள், மன உழைச்சல்கள், உறவுமுறைகள், எதிர்பார்ப்புக்கள் என்பனவெல்லாம் தாலாட்டில் பதிவாகியிருப்பதை அவதானிக்கலாம் தான்பட்ட – படுகின்ற இன்னல்களை வெளியிடத தாலாட்டை ஒரு ஊடகமாகக் பயன்படுத்துகின்றனர். "ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ" எனத் தொடங்கிச் சம்பவங்களைச் சுட்டிப்பாடுவார்கள்.

**"ஆராரோ ஆரிவரோ**
**ஆராரோ ஆரிவரோ**
**தொட்டிலுமே பொன்னாலே**
**தொடுகயிறும் முத்தாலே – தம்பி**
**ஆரடித்து நீயழுதாய்**
**ஆவரம்பு மேனியரே"**

**"பச்சை இலுப்பை வெட்டிபபால் வடியும் தொட்டில் கட்டி**
**தொட்டிலுக்கு மேலே துணை இருப்பாள் மாரியம்மா**
**துணை இருப்பாள் மாரியம்மா**
**கண்மணியே கண்ணுறங்கு கண்மணியே**
**கண்ணுறங்கு"[4]**

குழந்தை உறங்க தாலாட்டுப் பாடப்படுகின்றபோதும் பாடல்கள் யாவும் சந்தச்சுவையுடன் சுருதி ஒழுங்கில் இன்றைய சந்ததியினரால் பாடப்படுவதென்பது அரிதாகவே இருப்பதுடன் தாய்மாமனே முப்பத்தொன்றா நாள் தொட்டில் கட்டவேண்டும். என்ற நம்பிக்கையும் காரைநகரின் சில பகுதிகளில் வழக்கிழந்து போய்விட்டது.

இவற்றைவிடச் சிறுவர்கள் விளையாடும் போது பாடும் பாடல்களும் உள்ளன. ஐந்து தொடக்கம் பத்து வயதிற்கு இடைப்பட்ட காலம் குழந்தைப் பாடல்களுக்குரிய காலப்பகுதியாகும். குழந்தைப் பாடல்களில் பொருளுடைய பாடல்களைக் காணமுடியாது. குழந்தைப் பாடல்களுள் நீதிப்பாடல்கள், பக்திப்பாடல்கள், அறிவு வளர்ச்சிப் பாடல்கள், பறவை மிருகங்களைப் பற்றிய பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், வினாவிடைப்பாடல்கள் எனப் பலவகைப்பாடுகள் உள்ளபோதும் சிறார்களின் விளையாட்டுப் பாடல்கள் குறிப்பிடத் தகுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நுள்ளுப்பிராந்து கிள்ளுப் பிராந்து**
**கொக்கா தலையிலே என்ன பூ?**
**முருக்கம் பூ.**
**முருக்கம் பூவை யார் எடுத்துத் திண்டது?**
**பண்டி**
**பண்டிவந்து விசிலடிக்க**
**பறையன் வந்து டொக்கடிக்க**
**குண்டுமணி குறத்தியம்மா எங்கே போறா?"**

**"மாக்கொழுக்கட்டை மஞ்சள் கொழுக்கட்டை**
**மாமியார் வீட்டில் பிடிக்கொழுக்கட்டை"**
**"நெய் நெய் நெய்**
**அரைப் போத்தில் நெய்**
**கட்டப்பொம்மன் சொன்தெல்லாம் பொய் பொய்**
**பொய்**
**நெற்றியில் நீலப்பொட்டு வை வை வை"**

இவ்வாறு சிறுவர்கள் கூடி வட்டமாக இருந்து கைகளை நிலத்திலே பதிய வைத்து வினாவும் - விடையுமாகப்பாடிவிளையாடுவதுமுண்டு. மேலும்.

**"கோழிக்காய் கொத்தாளங்காய்**
**பச்சையரிசி பதம் எடுத்து**
**ஒற்றைத்தட்டு இரட்டைத்தட்டு**
**கைத்தாளம் ஏந்தி - இறக்கி**
**ஏந்தியபின் அச்சொக்**

என சிறு கற்துண்டுகளை ஏந்தி எடுத்து விளையாடுவதும் உண்டு. காரைநகரின் கடற்கரைப் பகுதிகளிலே கடல் சார் நாட்டுப்பாடல்கள் பல வழக்கிலிருந்தன. கிழக்கேயுள்ள பரவைக்கடலில் (பொன்னாலைக்கடல்) கரைவலை இழுக்கும் போதும், விடுவலை விடும் போதும் பாடும் பாடல்கள் உற்சாகத்தை ஊட்டுவதுடன் நகைச்சுவை ததும்புவதாகவும் காணப்படும். அத்துடன் மீன்பிடிக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் (ஊறி, தோப்புக்காடு, பிட்டியெல்லை ) இக்கடலில் சிறுமீன்கள், இறால் என்பற்றைக் குழுவாக இணைந்துபிடிக்கும்போதும்பாடல்களைப்பாடுவர்.

**"புன்னாலை ஆற்றிலே புளியமரம் ஒன்றாம்.**
**புளியம் பூக் கொய்யப்போன கிளியவரைக்**
**காணோம்**
**ஏலையேலோ தத்திந்தாம் ஏலையேலோ**
**ஏலையேலோ தத்திந்தாம் ஏலையேலோ"**

**"காக்கொத் தரிசாம்**
**கண்ணுமுந்த செத்த மீனாம்**
**போக்கத்த மீரானுக்கு பொண்ணுமகா வேணுமாம்"**
என்ற பாடலும் இது போன்ற பல பாடல்களும் வழக்கிலுள்ளன. மேலும்,
**"முப்பது நாள் உழைத்துழைத்து நிறையப் பணம்**
**வாங்கி – அதை**
**மூன்று நாளில் திண்டுவிட்டுக் கடனையும் வாங்கி"**

**"கண்ணான மச்சானுக்குக்**
**காச்சல் விட்டுப் போகுமெண்டால்**
**பொன்னாலே நூலிழுத்துப்**
**போய்வருவேன் சந்நிதிக்கு"**
என்ற பாடல்களும் இங்கு வழக்கிலிருந்தன. காரைநகரில் வாய்மொழிப் பாரம்பரியத்தில் ஒப்பாரிக்கும் முக்கியத்துவம் உண்டு சோக உணர்வை, மனப்பாரங்களை இவ் ஒப்பாரிகளிலே காணலாம். ஒப்பாரிப்பாடல் ஏனைய பிரதேசங்களில் அருகிய போதும் நம் காரைநகர்ப் பிரதேசத்தின் இழவு வீடுகளிலே ஒப்பாரிகளின் ஓசையை இன்றும் தாராளமாகக் கேட்கலாம். வயது வந்த முதாட்டிகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தர வயதுப் பெண்கள் மிகவும் லாவகமாக ஒப்பாரிகளைப் பாடுவர். மரணம் எய்தியவர்களை நினைந்து இப்பாடல்கள் பாடப்படும் போது தத்தம் மன உணர்வுகள் - அவலங்கள் - துன்பங்கள் அழுத்தங்கள் முதலியவற்றைச் சொல்லித் தீர்ப்பதன் மூலம் ஒருவித மன அமைதியும், ஆறுதலும் ஏற்படுவது இயல்பான ஒன்றாகும். மரணத்தைச் சந்தித்தவருக்கும், ஒப்பாரி பாடுவோருக்கும், ஏனையோருக்கும் அமையும் பாசத்தின் தொனியே இப்பாடல்களின் பொருண்மையாக அமையும். இவற்றுடன் சமுதாயப் பிரச்சினைகளும் சம்பிரதாயங்களும் சிறுபான்மையாகக் கலந்துவரும் கிராமப்புறப் பெண்கள் தமது சோகத்தை, துன்பத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு வடிகாலாக ஒப்பாரியைப் பயன்படுத்துகின்றனர்.

**"அம்மா நீ கொண்டு வரத் திண்டிருந்தன் - என்ரை**
**கோல வண்டி வாடுதணை**
**நீ தந்த அன்னைத்தை இனி எப்பவனை**
**காண்பேனோ**
**நீ நீண்டதூரம் துயில்கொள்ள நாங்களும்**
**தவிப்பதோனை"**

**"என்ரை அப்பு துணைமரமாக நின்று**
**இப்போ என்னைத் தனிமரமாக விட்டாய்**
**என்ரை அப்பு தானையாய் நின்ற என்னைத்**
**தவியாய்த் தவிக்கவிட்டாய்.**
**இனி எப்போ உன்னைக் காண்பேன்.**
**என்னை நீ அழைப்பதெப்ப**..."

இவ்வாறாக காரைநகர் பகுதியின் வாய்மொழி இலக்கிய மரபான நாட்டார் பாடல்கள் பிரதேசத்தின் பண்பாடு, பழக்கவழக்கம் போன்ற பல்வேறு அம்சங்களையும் பிரதிபலிக்கின்றன. ஆரோக்கியமான ஓர் இலக்கியப் பாரம்பரியம் தோன்றும் பிரதேசத்தில் வாய்மொழி இலக்கியம் வளமானதாகவும், உரமானதாகவும் இருந்திருக்க வேண்டும். இதற்கு காரைநகரும் ஓர் வகை மாதிரி எனலாம்.

வாய்மொழி வழக்காறு சார்ந்த இலக்கிய வடிவங்களில் பழமொழியும் மிகுந்த செல்வாக்கு உடைய ஒன்றாகும். வழக்கு மொழியில் வாழ்வியலுக்குப் பொருத்தமாகத தொன்று தொட்டே பொருளைச் சுருங்கிய சொற்களில் செவிக்கு இனிமையாகக் கூறி விளங்கவைக்கும் பெருவழக்குத் தொடர்களைப் பழமொழி எனலாம் "வாழ்வை ஊன்றிக் கவனித்து உணர்த்த உண்மைகளின் துணுக்குகளே பழமொழிகள்" என ஆங்கில அகராதி பழமொழிக்கு விளக்கம் தருகின்றது காரைநகரின் வாய்மொழி இலக்கியத் தொடர்பில் பழமொழிகளும் முக்கியம் பெறுகின்றன. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" "உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடேலாது" "தனக்குத் தனக்கு வந்தால்த்தான் தலையிடியும், காய்ச்சலும் தெரியும்" "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" "எட்டாத பழத்திற்கு கொட்டாவி விட்டது போல" "ஆபத்துக்குப் பாவம் இல்லை என்பன போன்ற பழமொழிகளை கையாளுவதைக் காணலாம். தாம் கூறப் புகுந்த விஷயத்திற்கு அழுத்தம் கொடுக்கவே இப்பழமொழிகளைக் கையாளுகின்றனர். அதாவது கருத்தை, மொழியமைப்பைப் புரிந்து கையாளும் திறன் இப்பிரதேச மக்களிடம் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை உள்ளது. எனவே கல்விப் பாரம்பரியத்தின் 'வாடையை' இப்பழமொழிகளிலேயும் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி இலக்கிய வகைகளில் ஒன்றான விடுகதையும், அத்துடன் கதைகூறும் வழக்கமும் தொன்றுதொட்டே இங்கு இருந்து வந்துள்ளன. அத்துடன் இப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளான களைபிடுங்குதல், அருவிவெட்டுதல், சூடுமிதித்தல் போன்ற செய்கைகளிலும் நாட்டார் பாடல்கள் பாடப்பட்டன. தற்பொழுது இவை மருவியுள்ளன.

மேலும் காரைநகரிலே மிசியோன்மாரும், போதகர்களும் வீடு வீடாகச் சென்று தங்கள் மார்க்கத்தைச் சமய விவதாங்கள், பாடல்கள் மூலம் பரப்பி வந்தனர். பிராமணர்களைப் பரிகசிக்கும் நோக்கமாகப் பாடல்களும் பாடிக்காட்டினர். சான்றாக,

**"பிறந்தபோது பூணுநூல் குடுமியும் பிறந்ததோ**
**பிறந்துடன் பிறந்ததோ பிறங்கு நூற்களங்கெல்லாம்**
**மறைந்த நாலுவேதமும் மனத்துளேயுதித்ததோ**
**நிலம்பிளந்து வானிழிந்து நின்றதென்ன வல்லிரே!"**

இப்பாடலைக் கேள்வியுற்று தம்மதத்தையும், தம்மதக் குருமார்களையும் எள்ளி நகையாடுவதையும் கண்டு நையாண்டிப் பாடல் ஒன்று கார்த்திகேயப் புலவரால் இயற்றப்பட்டது.

**"உதித்தபோது சட்டை தொப்பி தானுங் கூடவுற்றவோ**
**மதித்த ஞானஸ்தானமும் வலிய வந்து நேர்ந்ததோ**
**விதித்த பைபிலானதுங் கண்மெய்யுத் துதித்தலோ**
கதித்த பேச்சைவிட்டனாதி கடவுளைக் கருதுமே!

இவைகூட நாட்டுப்பாடலின் சாயலுடையன. எனவே காரைநகர் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இவ்வாய்மொழி வழக்காறுகள் அருகிப் போகின்ற நிலையில் இவை தான் நிகழ்காலத்தின் இருப்புக்களாவும் ஆழந்த ஆய்வுப் பொருள்களாகவுமுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடி அரசன் கலாமன்றம் , காரைநகர்

மூத்ததம்பி தேவதாசன்
போசகர்
"வெடி அரசன் கலைமன்றம்

1966ம் ஆண்டு நான் எனது உயர்கல்வியை முடித்து கப்பலோட்ட பயிற்சிக்காக, நீர்கொழும்பு பயிற்சிப்பாடசாலையில் பயின்று முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்ற காரணத்தால் 6 மாத மேலதிக பயிற்சிக்காக கேரள மாநிலத்தில் உள்ள கொச்சின் நகரில் பயிற்சி முடித்து வெளியேறி வீடுதிரும்பி நண்பர்களுடன் திருவாளர் பொன்னர் சின்னையாவின் வீட்டில் கூடி பொழுதைக் கழிக்கும் நாளில் நண்பர்கள் எல்லோரும் ஓர் நாடகம் பழகி மேடையேற்றுவோம் என்று ஆர்வப்பட்டார்கள் அந்த யோசனையின்படி எனது தந்தையாரின் புத்தக அலுமாரியில் தூங்கும் இசை நாடகப்புத்தகங்களில் முதலாவதாக "பூதத்தம்பி" என்னும் யாழ்ப்பாண வரலாற்று நாடகத்தைத் தெரிவு செய்து திரு சின்னயா அவர்களின் மகனான நாகராசா அவர்களை பூதத்தம்பியாகத் தேர்ந்து மற்றைய எனது நண்பர்களும் நானும் நடிகர்களாகி எனது நெறியாழ்கையில் ஒத்திகை முடித்து 1967.06.08 அன்று பொன்னர் சின்னையாவின் முதலெழுத்தை "பொ.சி" நாடகமன்றம் எனப் பெயர் சூட்டி, அம்பிகை சிவகாமியின் சன்னிதானத்தில் 2ம் திருவிழா உபயத்தின்போது மேடையேற்றிப் பெரும் வரவேற்பைப் பெற்றோ...

எமது கன்னிமுயற்சியின் வெற்றி அயல் கிராமங்களில் உள்ள ஆலய உற்சவங்களுக்கு அழைக்கப்பட்டோம் தொடர்ந்து யாழ்.மாவட்டம் என விரிவடைந்து சென்றது எனது மன்றத்தின் புகழ், அடுத்ததாக 1968ம் ஆண்டு வடபகுதியை ஆண்ட " வெடி அரசன்" என்னும் வரலாற்று இசை நாடகத்தை மேடையேற்றி சிவகாமி அம்பிகையின் சன்னிதானத்தையும் சுற்றாடலையும் ரசிகர்களால் நிரப்பி எல்லோரையும் திக்கித் திணறவைத் தோம் மாபெரும் வெற்றி இந்த நாடகமே எமது கலாமன்றத்தையும், என்னையும், எனது நாடகக் குழுவிரையும் புகழின் உச்சிக்கே கொண்டு சென்றதோடு இலங்கையின் வடக்குக் கிழக்கு முழுவதும் மேடையேற்றி, போட்டிகளில் பஞ்சுபற்றி தங்கப்பதக்கங்களையும், பாராட்டு பத்திரங்களையும், பெற்றுத்தந்தகாரணத்தால் எமது மன்றத்தின் பெயரையும் "வெடி அரசன்" கலாமன்றம் என்று பெயர் மாற்றம் செய்தோம், பல நாடக ஆர்வலர்களின் வேண்டுகோளின் படி ஆண்டுக்கு ஓர் புது நாடகம் மேடையேற்றுவது என தீர்மானித்தோம் அதன் பிரகாரம்.

1967ம் ஆண்டு "பூதத்தம்பி"
1968ம் ஆண்டு "வெடி அரசன்"
1969ம் ஆண்டு சங்கிலியன்
1970ம் ஆண்டு சமுத்திர கேசரி
1971ம் ஆண்டு வீரகுமாரன்
1972ம் ஆண்டு அங்கதன் சபதம்
1973ம் ஆண்டு இளம் கிள்ளி
1994ம் ஆண்டு பூதத்தம்பி – மீள்மேடையேற்றம்
2004ம் ஆண்டு வெடி அரசன் மீள்மேடையேற்றம்
2011ம் ஆண்டு நஞ்சப்பவதம் புதிய நாடகம்

ஆகியநாடகங்களைமேடையேற்றினோம் ஆண்டுக்கு ஓர் நாடக் போட்டுவந்த காலகட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973ம் ஆண்டுக்குப்பின்பு புதிய நாடகங்களை மேடையேற்றுவதை நிறுத்தி பழைய நாடகங்களை ரசிகர்கள் விரும்பியதால் அவைகளையே 1987ம் ஆண்டுவரை மீண்டும் மீண்டும் மேடையேற்றி வந்தோம். 1987ம் ஆண்டிற்குப் பின்பு அசாதரண சூழ்நிலைகளும் போர் மேகங்களும் மெல்ல மெல்ல எம்மைச் சூழ அரம்பித்தன. நாடகங்களை மேடையேற்றுவதாயின் காவல் துறையின் அனுமதியும் நாடகப் பிரதியொன்றும் கொடுக்கவேண்டும். இதன் காரணமாக நாடகக் கலையும் கலைஞர்களுடன் உறக்க நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. அனைவரையும் இடம்பெயரவைத்தது 1991ம் ஆண்டு இராணுவநடவடிக்கையால் நாம் காரை மண்ணைவிட்டு இடம் பெயர்ந்தோம்.

இந்தக்காலகட்டத்தில் 1994ம் ஆண்டு "பூதத்தம்பி" நாடகத்தை சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் அகதிகள் நல்வாழ்வு நிதிக்காக மீள்மேடையேற்றம்செய்தோம் பெரும்சாதனை வரலாறு காணாத வசூல். இதன் வரிசையில் 2004ம் ஆண்டு "வெடி அரசன்" மீள்மேடையேற்றம் செய்யப்பட்டது பெரும்வரவேற்பு அதனைத் தொடர்ந்து 2011ம் ஆண்டு புதுப்படைப்பாக "நஞ்சப்பவதம்" புதுப்படைப்பு ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. ஆனால் பார்வையாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டது. காரணம் நவீன கண்டுபிடிப்புக்களான தொலைக்காட்சி, இன்ரநெற் வசதியுள்ள கையடக்கத் தொலைபேசி, முகப்புத்தகங்கள் ஆகியவற்றின் ஈர்ப்பு நாடகத்தையும் கலைஞர்களையும் மற்றும் பாரம்பரிய கலைவடிவங்களையும் மெல்ல மெல்ல மறைந்து போகச்செய்கின்றது என்பதனை மிகவேதனையுடன் கூற விரும்புகிறேன். இதன் மத்தியில் ஓர்ஆறுதல் என்னவென்றால் பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் ஓரளவு நிவர்த்தி செய்ய முனைப்புடன் பாடுபடுவது எம்போன்ற கலைஞர்களுக்கு நிம்மதிச் செய்தியாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கலைக்கல்லூரி

## காரை மத்தி காரைநகர்

### வரலாறு

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கலைக் கல்லூரி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கலைக்கல்லூரியானது கடந்த வருடம் 2014ம் ஆண்டு 02ம் மாதம் 19ம் திகதி 5ம் தர் புலமைப் பரிசில் வகுப்புடன் ஆரம்பிக்கப்பட்டு 2014ம் ஆண்டு 06 ஆம் மாதம் 1ம் திகதி தொடக்கம் தரம் 3 முதல் A/L வரையான பாட- சாலையில் கற்பிக்கப்படும் சகல பாடங்களையும் நுண் கலைப் பாடங் களையும், வாத்தியக் கருவிகளையும் காரை நகரில் இருக்கும் வறிய மாணவர்களுக்காகஇலவசமாக கற்பித்து வருகின்றது. மேலும் இந்நிறுவனமானது காரை மாணவர்களின் கலைத்திறமையினையும் கல்வித் திறமையினையும் வளர் பதனுா டாக காரை மண்ணில் கலாசாரத்தினையும் ஒழுக்கத்தினையும் வளர்த்து வருகின்றது. எமது மன்றமானது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2015ல் பதிவு செய்யப்பட்ட மன்றமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் கலைப் பணியாற்றும் முத்தமிழ் பேரவை

மூன்று தசாப்தமாக கலைமகள், திருமகள், மலைமகள் ஆகிய முப்பெரும் தேவியரின் அருள் பெற்று கல்வியோடு செல்வமும் நிறைந்து வளம் கொழிக்கும் களம் பல கண்ட பதி காரைநகரின் கிழக்குப் பகுதியான களபூமிப் பதியாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த களபூமிப் பகுதியில் சாதனைகளையும் சோதனைகளையும் கடந்து கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தளராது கலைப்பணி செய்து வருகின்றது களபூமி முத்தமிழ் பேரவை என்றால் அது மிகையாகாது.

சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழக விவசாய விஞ்ஞானப் பட்டத்தாரியான அமரர். ஆறுமுகம் நடராசா அவர்கள் கலைகள் பிறந்த தமிழ்நாட்டில் கல்வி கற்றமையினாலோ என்னவோ கலைத்தாகம் கொண்டவராக இருந்தமை ஒன்றும் ஆச்சரியமில்லை.

அமரர் ஆறுமுகம் நடராசா அவர்கள் கொழும்பில் இரஞ்சனா பதிப்பகம் என்ற அச்சகத்தை நடத்தி வந்தபோது வித்துவான் F.X.C நடராசா அவர்களுடன் நட்பு ஏற்பட்டது. அப்போது எமது ஊரான காரைநகர் பற்றிய ஒரு நூலை ஆக்க வேண்டும் என்ற தமது எண்ணத்தை வித்துவான் அவர்களிடம் வெளிப்படுத்தவே காரைநகர் மான்மியம் என்ற நூலை வித்துவான் F.X.C நடராசா அவர்கள் எழுதினார் என்பது அமரர். ஆ.நடராசா அவர்களின் ஊர்பற்றையும் சமூக உணர்வையும் புலப்படுத்துகின்றது. செல்வந்தரான அவரின் பாரியார் திருமதி. இராசமலர் நடராசா அவர்களும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வியோடு கலைகளையும் பயின்று சிறந்த மாணவியாக விளங்கியவர்.

கல்வியும்.கலைத்தாகமும், சமூக உணர்வும் தாராள மனம் படைத்த தனவந்தருமாகிய திரு. திருமதி.நடராசா இராசமலர் தம்பதிகளினால் காரைநகரில் உள்ள இளம் தலைமுறையினருக்கு நுண் கலைகளைப் பயிற்றுவித்து ஊக்குவிப்பதற்காக 1978ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதே களபூமி முத்தமிழ் பேரவை ஆகும் இதுவே காரைநகரில் முதன் முதலாக நுண்கலைகளைப் போதித்து வந்த மன்றமாக விளங்குகின்றது.

இளையவர்கள் இசை, நடனம் ஆகிய கலைகளைப் பயிலவும் அவர்களின் கலைத் திறன்களை வெளிக் கொணரவும் என அமைக்கப்பட்ட முத்தமிழ் பேரவையில் இத்தம்பதிகள் தமது பிள்ளைகளுடன், அயல் பிள்ளைகளையும் இணைத்து இசை, நடன வகுப்புகளைத் தொடங்கினர். இணுவிலைச் சேர்ந்த பிரபல இசை ஆசிரியை சங்கீத பூசணம் செல்வி . மதிவதனம் ஞானசம்பந்தர் இசை வகுப்புகளை நடத்தி வந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகோதரிகளான நடனக்கலைமணி செல்வி. மீனா பரந்தில்ராஜா, நடனக்கலைமணி செல்வி. தமயந்தி பரந்தில்ராஜா ஆகியோர் பரதநாட்டியத்தையும் பயிற்றுவித்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பயின்று வந்த சிறார்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையிலும் அதனை எமது ஊரவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் திருமதி. ந.இராசமலர் அவர்களின் தந்தையார் பிரபல வர்த்தகர் திரு.எ.எஸ் ஆறுமு-கம் அவர்கள் வீட்டுமுன்றலிலும் பாலாவோடை அம்மன், திக்கரை முருகன் கோயில்களின் மண்டபங்களிலும் பின்னர் பாடசாலை மேடைக-ளிலுமென முத்தமிழ் பேரவையில் பயின்று வந்த மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அக்காலங்களில் தொடர்ச்சியாக அரங்கேறி மக்கள் மிகுந்த வரவேற்பினைப் பெற்று வந்தன.

முத்தமிழ் பேரவையில் பயின்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமானது. வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், நடன, வகுப்புகளில் மாணவர்கள் உற்சாகமாக இணைந்து கொண்டு பயின்று வந்தனர். இக்காலப் பகுதியில் இசை இசைக்கலைமணி செல்வி. ஜெகதாம்பிகை முருகையா அவர்களும் நடன வகுப்புகளை நடனக்கலைமணி திருமதி.சாந்தா முத்துக்குமாரு அவர்களும் பயிற்றுவித்துவந்தனர்.

மாணவர்கள் வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சிகளையும், மிருதங்க இசை நிகழ்ச்சிகளையும் சின்னஞ் சிறார்கள் காவடி, கோலாட்டம், கும்மி போன்ற நடனங்களையும் பல அரங்குகளில் உற்சாகமாக வழங்கி வந்தனர்.

முத்தமிழ் பேரவையின் மற்றொரு பணியாக பாலர் பாடசாலையையும் நடாத்தி வந்தது. இப்பாலர் பாடசாலைக்குப் பொறுப்பாசிரியராக செல்வி. சாந்தினி சோமசுந்தரம் அவர்கள் பணியாற்றினார்.

இக்காலப்பகுதியில் காரைநகரின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த வாரிவளவு நல்லியக்க சபையானது கல்வி,கலை,விளையாட்டு என பல்துறைகளிலும் காரைநகர் வாழ் இளம் தலைமுறையினரை ஊக்குவிக்கும் வகையில் சேவையாற்றி வந்த சபையாகத் திகழ்கின்றமையை கரைநகர் வாழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவர். இச்சபையின் தொண்டராக அரும்பெரும் தொண்டாற்றி கலைஞர்கள், கல்வியாளர்கள், இளைஞர்கள், என அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்று அர்ப்பணிப்போடு சேவையாற்றியவர்கள், பட்டுமாமா என்று அன்பாக அழைக்கப்படும் அமரர். பத்மநாதன் என்றால் மிகையாது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபை தனது பணிக-ளின் ஓர் அங்கமாக வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கு மேடை அமைத்துக் கொடுத்து கலைப்பணி ஆற்றியமையை காரை மைந்தர் எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாது.

அந்த வகையில் வாரிவளவு நல்லியக்கச் சபையினால் நடத்தப்பட்டு வந்த கலைவிழாக்களில் முத்தமிழ் பேரவை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறி பலரது பாராட்டுகளைப் பெற்றுக் கொள்ளத் தவறவில்லை. காரைநகரில் எல்லாப் பகுதிக-ளிளும் இருந்து வரும் நிகழ்வுகளில் முத்தமிழ் பேரவை மாணவர்களின் நிகழ்வுகள் முதன்மை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் முத்தமிழ் பேரவை நி ர்வாகி அமரர்.நடராசா அவர்களின் மறைவானது மன்றத்திற்கு இழப்பை ஏற்படுத்தியது. இருந்தும் துணைவியார் திருமதி. இராசமலர் நடராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மன்றத்தை நடராசா முத்தமிழ் பேரவை எனும் பெயரில் நடாத்தி வந்தார்.

மாணவர்களின் நிகழ்வுகளை அரங்கேற்ற ஓர் அரங்கு தேவையென தமது சொந்தப்பணத்தில் களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் ' நடராசா அரங்கம்' எனும் அரங்கு அமைத்து தந்தையார் அமரர். ஏ.எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் பல அறிஞர்கள் முன்னிலையில் திறப்புவிழா நடாத்தி அன்றும் மாணவர்களின் நிகழ்வுகள் அரங்கேறியிருந்தன.

முத்தமிழ் பேரவையில் கலை பயிலும் மாணவர்கள் கோயில் திருவிழாக்களின்போது கலைநிகழ்வுகளை வழங்கிவருவது மக்களுக்கு கலைகள் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும். மக்கள் நல்ல அறநெறிக் கருத்துகளை அறிந்து கொள்வதற்கும். உதவுகின்றது.

யாழ் பல்கலைக் கழகத்தின் இசைத்துறை முதுநிலைவிரிவுரையாளர் இராகசுரபி. பரமேஸ்வரி கணேசக்கம்பர் மற்றும் பிரித்தானியாவில் இசை ஆசிரியையாகப் பணியாற்றும் இசைக்கலைமணி கமலாசோதி கோபாலபிள்ளை ஆகியயோரும் களபூமி முத்தமிழ் பேரவையில் இசை பயின்று இன்று இசைத்துறையில் பிரபல்யம் மிக்க கலைஞர்களாக பிரகாசிக்கும் மாணவிகளாவர்.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக இயங்காமல் இருந்த பேரவை சுமூக நிலை தோன்ற ஓரிருவரின் ஆதரவுடன் மீண்டும் தனது பணியைத் தொடர்ந்தது பேரவையின் தலைவராக திருமதி. நடராசா இராசமலர் அவர்களும் செயலாளராக திருமதி. பரமேஸ்வரி பொன்னம்பலம் அவர்களும் பொருளாளராக பாலாவோடை தமிழ்கலவன் பாடசாலை அதிபர் திருமதி. சர்வாம்பிகை உலககுருநாதன் அவர்களும் பேரவையின் நிர்வாகசபையில் சேவையாற்றி வருகின்றனர். பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் கோயிலிலும், திக்கரை முருகன் கோயிலிலும் திருவிழாக் காலத்தில் கலைநிகழ்வுகளை வழங்கியும் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் பேரவையின் விழாவை நடத்தியும் சிறார்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கி வட- இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும். பரீட்சைகளுக்குத் தயார்படுத்தி பேரவை தனது கலைப் பணிகளை தளராது தொடர்கின்றது.

எமது மன்றமானது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் 2014ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. கலைப்பணியோடு நின்றுவிடாது சமூகப்பணியையும் முத்தமிழ் பேரவை நடத்தி வருகின்றது. எமது ஊரில் நீண்டகாலம் அர்ப்பணிப்போடு ஆசிரியப்பணியாற்றிய திரு. திருமதி. விநாசித்தம்பி தம்பதிகளின் சேவைநலன் பாராட்டு விழாவை பேரவை நடத்தியிருந்தது.

இன்னல்கள் என்ன வந்தாலும் இன்றும் சொந்த மண்ணில் வாழ்ந்து சேவையாற்றிவரும் மருத்துவர் செல்வி. நகுலேஸ்வரி ஆறுமுகம் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவித்து அண்மையில் முத்தமிழ் பேரவை விழா எடுத்திருந்தது.

நாட்டின்நற்குடிமக்களை ஓர் அரசு எவ்வாறு கௌரவித்துப் பாராட்டுகின்றதோ அவ்வாறே களபூமி முத்தமிழ் பேரவையும் எமது ஊரில் வாழ்ந்து சேவையாற்றும் சேவையாளர்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களையும் பாராட்டி மதிப்பளிக்கின்றது.

இவ்வாறு கலைப்பணியோடு, சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி என தனது பன்முகப் பணிகளையும் மிகுந்த சமூகப் பொறுப்புடனும் ஓர் அசாத்தியத் துணிச்சலுடனும் கடந்த 36 ஆண்டு காலமாக ஆற்றி வரும் களபூமி முத்தமிழ் பேரவை இன்று வரை பழைய மாணவர்களினதும் வெளியூர் நலன் விரும்பிகளினதும் நிதியுதவியுடன் தற்போதும் இசை நடன வகுப்புகளையும் நடத்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களபூமி கலையகம்

குழந்தைகள் இதயம் தான் என்மேடை என்று ஒரு நாடகக் கலைஞன் கூறினான். அந்த இதயத்தின் துடிப்புகளை, அபிலாசைகளை நிறைவேற்றும் பொருட்டு இன்று காரைநகரில் இயங்கும் கலையரங்குகளில் ஒன்றாகத் தோன்றியதுதான் எமது களபூமி கலையகம். களபூமி மக்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்காக 27-07-2013ல் இக்கலையகம் உருவெடுத்தது. காரைநகரிலுள்ள பிற கலையமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் இது பால்யப் பருவத்தில் உள்ளது. இருந்தும் மிகக் குறுகிய காலத்தில் பலரும் போற்றக்கூடிய அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

கலையகம் தோன்றுவதற்குக் காரணகர்த்தாக்களில் ஒருவர் அன்று சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலத்தின் அதிபராக இருந்த திரு.சு.கணேசமூர்த்தி அவர்களாகும் அவருடன் உப அதிபர் பாலாம்பிகை நீலகண்டன், திரு. சண்முகம் சுகந்தன், திரு.சிவா தி. மகேசன் ஆகியோர் மட்டுமன்றி களபூமியில் கலையார்வம் கொண்ட வேறு சிலரும் எடுத்த கூட்டு முயற்சியினால் இக்கலையகம் உருவாகியது. மேலும் எமது மன்றமானது வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் 2014ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. கலையகத்தின் முதல் குருவாகச் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் சங்கீதம் கற்பிக்கும் திருமதி கேதீஸ்வரி யசோதரன் நியமிக்கப்பட்டார் அவரைத் தொடர்ந்து திரு. சிதம்பரநாதன் அவர்கள் மிருதங்க ஆசிரியராகவும். செல்வி சிவதர்சினி பாலசுப்பிரமணியம் பரதநாட்டிய ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர். தற்சமயம் கலையகத்தில் சங்கீதம், வயலின், மிருதங்கம், பரதம் ஆகிய வகுப்புக்களுடன் செல்வி டாகினி பரராசசிங்கம் அவர்களினால் அறநெறி வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன.

கலையகம் தனது முதல் இரண்டு ஆண்டு நிறைவுகளை 2014லும் 2015லும் சிறப்பாக கொண்டாடியது. அத்துடன் ஆடிப்பிறப்பு விழாக்களும் வாணிவிழாக்களும் கொண்டாடப்பட்டன. அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலையக மாணவர்கள் முழுப்பங்களித்தனர். கலையகத்தின் வளர்ச்சியில் காரைநகர் பிரதேசச் செயலகம் ஆதரவும் அனுசரணையும் வழங்கியுள்ளது. என்பதனை மனமகிழ்வுடன் கூறுகின்றோம். இதன் நிமித்தம் பிரதேச செயலருக்கும் அவரது கலாசார உத்தியோகத்தர்களுக்கும். உள்ளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2014ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வடஇலங்கைச் சங்கீத சபை நடாத்திய செய்முறைத் தேர்வில் களபூமி கலையகத்தினூடாக ஆறு மாணவர்கள் சித்தியடைந்தனர் அவர்களில் ஐவர் முதல் பிரிவில் இடம் பெற்றனர். மேலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை 2014 விழாவினையொட்டி இந்து சமய கலாசார அலு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலகல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி பிரதேச மட்டப் பரீட்சையில் எமது கலையகத்தினூடாக திக்கரை இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களில் இருவர் கீழ் பிரவிலும், மூவர் மத்திய பிரிவிலும், இருவர் மேல் பிரிவிலும் சான்றிதழ்கள் பெற்றனர்.அத்துடன் மேற்படி திணைக்களம் நடாத்திய இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை (2014)ல் பதின்மூன்று திக்கரை இந்து அறநெறிப் பாட-சாலை மாணவர்கள் களபூமி கலையகத்தினூடாகத் தோன்றி சிறப்பான புள்ளிகள் பெற்றனர்.

மிகக்குறுகிய காலத்தில் மேற்குறிப்பிட்ட போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றிச்சித்தியடைந்தது போன்று கலையகத்தின் மகுட வாசகத்திற்கணங்க கல்வியுடன் கலை வளர்த்து எமது சிறார்களின் வருங்காலம் சிறப்புற வழி வகுப்போமாக.

நன்றியுடன்
நிர்வாக சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மை காப்போம்

திருமதி. பாலகுமார் திலகவதி
ஆசிரியர்
யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்

பெண்களைத் தெய்வமாகப் போற்றினார்கள் - அன்று
பெண்களை இயந்திரமாக பாவிக்கின்றாாகள் -இன்று
வாழ்வில் உயிர் ஊட்டுபவள் பெண்மை – அவ்வாறான
பெண்மையில் இருந்து வந்தவர்களே களங்கம் விளைவிப்பதா?

தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பது போன்று
படைப்பிற்கு காரணமாகிய பெண்மையை களங்கப்படுத்துவதா?
மென்மையான உடலைக் கொண்ட பெண்மையை
இளந்தளிர்களை அழிப்பது போன்று ஒடிக்கிறார்களே –கயவர்கள்

அச்சம், பயம் எதுவுமின்றி வாழ்ந்த பெண்மைக்கு
எங்கிருந்து வந்ததையா பேரிடி முழுக்கம்? – அதை
நினைத்துப் பார்த்தாலே உடலில் செந்நீர் வடிகிறது.
பெண்மைக்கு இப்படியும் ஒரு களங்கமா? சிந்தியுங்கள்!

மானிடம் பண்பில்லாத கயவர்களே, - இன்று
பெண்மைக்கு களங்கம் விளைவித்தீர்களா? நீதியின்றி
மலைமீது ஏற்றி வைத்த தீபமாகிய பெண்மைக்கு
இன்று அநியாய ஆக்கிரமிப்புக்களாய் மாறிவிட்டது.

சொல்லப் போனால் பழைய காலம்
சொர்க்கமாகத் தெரிகிறது எமக்கு – ஏனெனில்
சுதந்திரமாகப் பெண்கள் நடமாடிய காலமது – ஆனால்
இன்று பெண்மைக்கே களங்கம் விளைவிக்கும் கயவர்கள்

மானிடப் பண்பில்லாத கயவர்கள் - இன்று
பெண்மையையே இடித்து விட்டார்கள் - ஆனால்.....
இதைப் பாத்து தூங்கிடுமா பெண்ணினம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறு கொண்டு எழுந்திடுவோம்! கயவர்களை அழித்திருவோம்!

எறும்பினம் ஒன்றாக வாழ்தல் கண்டீர்!
பெண் தெய்வம் கொண்டிட்ட வீரம் பாரீர்!
கண்டிடவேயன்றி இவையெல்லாம் - நாம்
பெண்மை தனை காத்திடுவோம் வாரீர்!

நறுமணப் பூக்கள் தனில் சுகம் பாரீர்! – பெண்மை
பஞ்சைப் பொல பென்மையானது பாரீர்!
பெண்மையைச் சிதைக்கும் கயவர்களை அமிழ்த்து
புதுயுகம் படைப்போம் வாரீர்!

இளந்தளிர்களை ஈன இரக்கமின்றி அழிக்கும்
கொடிய வெறியர்களை அழிப்போம்
மரணித்துப் போனது இளந்தளிர் அல்ல
தூய்மையான எமது பெண்மையுமே – பாரீர்!

பெண்ணினத்தின் பண்புகள் மதிக்கப்பட்டு – சகல
பெண்களும் நாற் குணாங்களுடன் "பெண்மை" என்ற
பெருமையுடனும் மரியாதையுடனும் வாழ்ந்திட!
நாம் அனைவரும் ஒன்றினைந்திடுவோம்.

இலக்கிய கலைப் போட்டி 2015
பிரதேச மட்டம் - 1ம் இடம்
மாவட்ட மட்டம்-1ம் மட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்களும் அதனை வழங்கும் நிறுவனங்களும்

**வே.கலாவதி**
**திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்**
**பிரதேச செயலகம்,காரைநகர்**

இலங்கையில் கல்வியானது நமது பாரம்பரிய சிந்தனை முறை காரணமாக பாடசாலைக் ,கல்வி பல்கலைக்கழக அனுமதி தொடர்பாகவே நோக்கப்படுகின்றது எனினும் ஆரம்பக் கல்வியில் கற்கும் மாணவர்களின் 2% மாணவர்களே உயர் கல்விக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்கின்றனர். ஏனைய மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக உருவாக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரிகள் ஏனைய தொழிற்பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் கல்விச் சான்றிதழ்களிற்கு சமமாக அங்கீகரிக்கப் படவில்லை. தொழில் கல்விக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும்பொருட்டு1990ம்ஆண்டு20ம் இலக்க மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி சட்டத்தினூடாக மூன்றாம்நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

இதுவே இலங்கையின் தொழில் நுட்ப வாழ்க்கைத் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் (Technical and Vocational Education and Training - TVET) அதி உயர் அமைப்பாகும் இலங்கையில் உயர்கல்வியை வழங்கும் நிறுவனங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவுசெய்வது போல் இலங்கையிலுள்ள சகல தொழில் பயிற்சி நிறுவனங்களும் கட்டாயமாக இவ்வாணைக் குழுவில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.இவ்வாறான பதிவானது பயிற்சி நிறுவனங்களினால் விண்ணப்பிக்கப்பட்டு மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பௌதீகரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு திருப்திப்படும் வகையில் அமையுமெனில் நிறுவனம் ஆணைக் குழுவி-ல் பதிவு செய்யப்படும் இவ்வாறு பதிவு செய்து பெற்றுக் கொள்ளும் சான்றிதழ் ஆனது மாணவர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக காட்சிப்பத்தப்படவேண்டும் இப்பதிவுச்சான்றிதழில் நிலையத்தின் பெளரும் பதிவு இலக்கமும் அதன் தரமும் பயிற்சி வழங்கப்படக்கூடிய பாட நெறிகளும் செல்லுபடியாகும் காலமும் உள்ளடக்கப் பட்டிருக்கும் செல்லுபடியாகும் காலம் முடிவடையுமிடத்து மீள் பதிவிற்கு விண்ணப்பிப்பதன் மூலம் பதிவு செய்யமுடியும் தொழிற்பயிற்சியை வழங்கும் அரச தனியார் அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் இப்பதிவுச் சான்றிதழைப் பெற்றிருத்தல் கட்டாயமானதாகும் இவ்வாறு பெற்றுக்கொள்ளாத நிறுவனங்களை மூடிவிடுவதற்கு மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது. இவ்வாறு பதிவு செய்வதற்கு தொழிற்பயிற்சி நிலையங்களின் தரத்தை உறுதிசெய்தலும் தரமான பாடநெறிகளை நடாத்தும் நிறுவனங்களை பொதுமக்கள் அறியச்செய்வதும் (WWW.tvec.gov.lk) என்ற முகவரியில் தேடுவதன் மூலம் பதிவு செய்த நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலைப் பார்வையிட முடியும்) பிரதான நோக்கமாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட திறன் அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் இணைந்து இலங்கையின் தொழில்நுட்ப தொழிற்கல்வி பயிற்சிக்கான தேசிய சான்றிதழ் திட்டமொன்றை அறிமுகம் செய்தது இது தேசிய தொழிற்தகமை (ஏன்று அழைக்கப்படுகின்றது. பதிவு செய்த நிறுவனங்களில் கற்பிக்கப்படுகின்ற பாடநெறிகள் சான்றுப்படுத்தப்பட்டால் மட்டுமே அப்பாட நெறிக்கான தேசிய தொழில்தகைமைச் சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும்

இந்த தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு திறன்கள் நியமம் தயாரிக்கப்படும் திறன்கள் நியமம் என்பது தொழிலொன்றுக்கு ஏற்புடைய திறன் கூறுகள் அதற்கு ஏற்புடைய இணக்கக் கூறுகள் அதன் நியமங்கள் செய்யப்பட வேண்டிய வேலைப்பரப்பு இருக்க வேண்டிய அறிவு மற்றும் ஆற்றல்கள் என்பவற்றிற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்ட அவணம் ஒன்றாகும் இவ் ஆவணம் ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் திறனுள்ள கைப்பணியாளர்கள் மேற்பார் வையாளாகள் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் வல்லுனர் போன்றோரின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படும் இதனை தயாரிக்கும் பொருட்டு மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவானது திறன்கள் நியமனம் தயாரிக்கவேண்டிய வாழ்க்கைத் தொழில்களை இனங்கண்டு அதிகாரசபைக்கு அறிவிக்கும் அதன் பிறகு உரிய தொழில்களுக்கான திறன் நியமிக்கப்படும். உரிய தரப்பின் நிபுணர்களை தொழில் அமைப்புக்கள் பொது மக்கள் ஆகியோருக்கு இந் நியமனங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் அபிப்பிராயங்கள் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையிலுள்ளதேசியகைத்தொழிற்பயிற்சி மதியுரைக் குழுவினால் செல்லுட்டியானதாக ஆக்கப்படும்

இந் நியமங்களை அடிப்டையாகக் கொண்டு தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் ஆனது வழங்கப்படுகின்றது. இச் சான்றிதழானது வழங்கும் பொருட்டு இலங்கை தேசிய தொழில் நுட்பக் கல்விநிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்பட்டு சான்றுப்படுத்திய தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளனர்கள் சேவையாற்றுகின்றார்கள்.

மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய மட்டங்களைப் பெற்றுள்ள நபர்களுக்கு மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்பயிற்சி ஆணைக்குழுவின் பணிபாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்த தேசிய கைத்தொழில் தகைமைச் சான்றிதழ் ஆனது 7 மட்டங்கள் கொண்டதாக காணப்படும். அவை

**1ம் மட்டம்- அடிப்படை ஆரம்ப ஆற்றல்களுக்கான கைப்பணியாளர்கள்**

**2ம் மட்டம் - அடிக்கடி மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர்கள்**

**3ம் மட்டம் - சிறிய மட்டத்திினை மேற்பார்வையின் கீழ் செயலாற்றக்கூடிவர்கள்**

**4ம் மட்டம் - சுயாதீனமாக செயலாற்றக்கூடிய கைப்பணியாளர்கள்**

**5ம் மட்டம் - மேற்பார்வையாளர்கள்**

**6ம் மட்டம் - முகாமை யாளர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7ம் மட்டம் - திட்டமிடுபவர்கள்**

தேசிய தொழிற்தகமைச் சான்றிதழ்களை இரு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியும்

1.பதிவு செய்து சான்றுப்படுத்தப்பட்ட பாடநெறிகளைக் கொண்டுள்ள பயிற்சி நிலையங்களில் பாடநெறியில் பங்குபற்றி முறையான பயிற்சியின் பின்னர் தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளல்

Eg:- தேசிய பயிலுனர்கைத்தொழிற்பயிற்சிஅதிகாரசபை (NAITA)வாழ்க்கைத்தொழிற்பயிற்சிஅதிகாரசபை (VTA) தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC) தொழில் நுட்பக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்

2.முன்னறிவை இனங்காணல் ஆனது கூடுதலாக வேலைத்தளங்களில் நடாத்தப் படுகின்ற ஒருவகை பகுப்பாய்வு மதிப்பீடாகும் பயிற்சி நிறுவனங்களில் கற்காத/ உத்தியோகபூர்வமற்ற முறையில் கற்ற/ வேலைத்தள அனுபவங்களினுடாக இனங் கண்டு ஒரு அங்கீகரிக்கப்பட்ட மட்டத்தில் திறன் மற்றும் தகைமைகளைப் பெற்றோரை வைத்தல்

இதன் மூலம் புதிய மாணவர்கள் மட்டுமென்றி ஏற்கனவே கைத்தொழில் அறிவு உள்ளவர்களும் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஒருவர் NVQ சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
1.பயிற்சி அனுபவம் முயற்சி என்பவற்றின் அடிப்படையில் திறன்களைப் பெற்றுக் கொள்ளவதன் மூலம் இம்முறையின் மேல்மட்டங்களிலுள்ள தகைமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

2.NVQ சர்வதேச திறன் மதிப்பீட்டு முறையொன்று ஆதலால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு அதிக வாய்ப்புண்டு.

3.NVQசான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வோர் மிக இலகுவாச கைத்தொழில்களைத் தேடிக்கொள்ள முடியும்

Eg :- அண்மைக் காலங்களில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்டும் பல வெற்றிடங்களிற்கு 700 மணித்தியால எல்லை கொண்ட கணனி அறிவு/NVQ சான்றிதழ் கேட்கப்படுவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் ஆனது 1- 4 வரையான சான்றிதழ் கற்கையாக காணப்படுகின்றன. இவற்றை தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை இளைஞர் சேவை மன்றம; (NYSC) தொழிநுட்பக் கல்லூரி போன்றவற்றில் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் NVQ மட்டம் 5,6 என்பவை டிப்ளோமா கற்கை நெறிகளாகும். இந்த தொழிநுட்பவியல் கல்லூரிகள் மாகாணத்திற்கு ஒன்று என்ற ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்திற்கான தொழில் நுட்பவியல் கல்லூரி கொக்குவிலில் அமைந்துள்ளது.

அதேபோல் 7வது மட்டமானது பட்டச்சான்றிதழை வழங்குகின்றது. இலங்கையில் முதலாவது தொழில் நுட்ப பல்கலைக் கழகமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்மலானையில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முதற்தொகுதி பட்டதாரிகள் 2012ம் ஆண்டு வெளியேறினார்கள் எனினும் குளியாப்பிட்டியா யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள தொழிநுட்பவியல் பல்கலைக்கழகங்கள் இந்த ஆண்டே (2015) தமது முதற்தொகுதி மாணவர்களை உள்வாங்கியுள்ளார்கள்

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தொழிநுட்பவியல் பல்கலைக் கழகமான University College Of Jaffna வில் Produ-tion Technology, Mechotronics Cosmetotogy, se-ruce Technoligy, Consruction Techoodogy , Build-ing ஆகிய 8 பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

இந்தவகையில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழை வழங்கும் நிறுவனமாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழில் பயிற்சி நிலையம் காணப்படுகின்றது. இது 2010ம் ஆண்டு ஐப்பசி முதல் இங்கு மாணவர்களிற்கு பயிற்சி நெறிகளை வழங்கி தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டுகின்றது. இங்குள்ள பயிற்சி நெறிகளில் தகவல் தொழிநுட்ப கற்கை நெறியும் தையல்காரர் (Tailar) தேசிய தொழிற் தகைமைச் (NVQ) முஏநுடு -4 சான்றிதழ் நான்கு பெற்றுக் கொள்ளக் கூடிய பயிற்சி நெறிகளாகும் அதேபோல் வீட்டு மின் இணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (Welder) மரவேலைத் தொழில் நுட்பம் கட்டடநிர்மானம் பொன்றவற்றைக் கற்பதன் மூலம் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் 3 பெற்றுக்கொள்ள முடியும் அத்தோடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள Hospitality Monagement பயிற்சி நெறிக்கு NVQ 3 பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. காரைநகர் பிரதேச மாணவர்களும் அயற்பிரதேச மாணவர்களம் தமது கற்கை நெறிகளைப் பின்பற்றுகின்றார்கள் இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நோக்கில் இலவச பஸ் போக்குவரத்துச் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகரிற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே எதிர்காலத்தில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பை அதிகளவில் பெற்றுத் தர இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகர் பயிற்சி நிலையம் நடவடிக்கை எடுக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுக்கெண்டு நாலு வார்த்தை............

**திரு.பொ.சிவராசசிவம்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கலாசார மத்திய நிலையம்காரைநகர்.**

ஏன் கமலம் உன் தலையில என்ன காயம்
மூக்கும் உடைஞ்சிருக்கு முகமும் அதைச்சிருக்கு
இரவு ஏதும் சண்டையோ சச்சரவோ?
இல்லை எண்டு ஒரு நாளும் நீ சொல்லாய்.

மௌனமதை மொழியாக்கி விம்மியவள்
கண்ணீரைத் துடைத்து விட்டு
விட்டு நான் படுற வேதனையை
என்ன என்று தான் சொல்லுறது
உழைப்புக் காரன் எண்டு நம்பி
ஊர்ப் புரோக்கர் சொல் கேட்டு
அக்கம் பக்கம் கேளாமல்
சம்மதிச்சன் தாலி கட்ட

தெய்வத்தை சாட்சி வைச்சு
ஊர் அறிய தாலி கட்டி
மூன்று மாதம் ஆன பின்பு
மூதேசி என்று பட்டம்

அதையுந் தான் பொறுத்திடலாம்
அப்பு ஆச்சி செய்த வினை
அவையள் போய்ச் சேந்திட்டடினம்
நான் கிடந்து மாய்கின்றேன்.

வயதான குமர் மூன்டும்
வளர்ந்த இரண்டு பெடியளுமாய்
முட்டான குடிசை தனில்
குடும்பம் தான் நடத்துகிறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யில் மழை பாராமல்
உழைச்சுக் கொண்டு வாற காசில்
கஞ்சி கூளோ நாம் குடித்து
கொஞ்சம் பசி ஆறுகிறம்

வெக்கம் துக்கம் கெட்டதுகள்
தான் குடிச்சால் போதும் எண்டால்
பாவப்பட்ட ஜென்மங்கள் நாம்
மண்ணை அள்ளித் தின்னுறதோ?

பகல் இரவு பாராமல்
பத்துக் காசு நான் உழைக்க
குடிக்கக் காசு கேக்கிறியோ?
கண் கெட்டுப் போனவனே!

நறுக் கெண்டு நாலு வார்த்தை
நான் இரவு கேட்டு விட்டன்
கட்டியன் கெட்டித்தனம்
மண்டையில தெரியுது பார்.

அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான "சித்தவிலி கெத்தம்" ஆக்கத் திறன் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " வறுமையின் சின்னம்"

**திரு.பொ.சிவராசசிவம்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கலாச்சார மத்திய நிலையம்காரை நகர்.**

அந்த நீண்டு உயர்ந்த கோபுரமும் பரந்து விரிந்த வீதியின் நாலாபுறமும் காவடிகள் கச்சான் கடைகள், அன்னதான சாலைகள் தண்ணீப் பந்தல்கள் என பல இரைச்சல்களின் நடுவே "அரோகரா கரா" என்ற ஆரவாரத்துடன் தேர் இருப்பிடத்தை அடைந்தது பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திலே அழகான சின்னஞ் சிறுசுகள் புளுதி மணலிலே பம்பரம் விட்டு வினாயாடிக் கொண்டிருப்பதை அவன் கண் செட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவர்கள் அணிந்திருந்த அழகான உடுப்புக்கள் நகைகள் எனக்கு ஏன் இல்லை? என்ற ஏக்கம் ஒரு கணம் அவனது மனதினை சஞ்சலமடையச் செய்தது

மறு கணமே தனது முகத்தினைத் தடவிக் கொண்டு பெருமூச்சு விட்டவனுக்கு கோயிலின் மேற்குப் புறத்திலிருந்து ஆரவாரம் அதிகமாக் கேட்கவே தனது பசியினை உணர்ந்து கொண்டான் அந்தப் பக்கம் நோக்கி விரைவாக நடந்தான் அழகான மண்டபத்தின் இரண்டு புறமும் அண்களும் பெண்களுமாக வரிசையில் நின்று கொணடிருந்தனர் சிறிது இடைவெளி இருந்தால் கூட உள்ளே புகுந்து விடலாம் என்ற எண்ணத்துடன் வாசலை நெருங்கியவனை "எல்லாரும் வரிசையா நில்லுங்கோ இன்னும் அரை மணித்தியாலம் செல்லும் எல்லாருக்கும் சாப்பாடு இருக்கு" என்று பட்டு வேட்டியும் தடித்த சால்வையும் அணிந்த அந்த முரட்டு மீசைக்காரர் கூறியது இவனது காதில் விழ சற்றுத் தாமமதித்த பெண்கள் நிற்கும் பக்கமாகச் சென்றான் சுவரின் மேலாகப் பதிக்கப்பட்ட ஜன்னல் கம்பியினூடாக வெளிவந்த சாம்பிராணிப்புகை இவனுடைய நாசிக்குள் ஏறி அரித்தது இவனுக்கு இன்னும் நன்றாகப் பசிக்கத் தொடங்கியது.

இந்த அன்னதானத்தை நம்பியே இவனுடைய வீட்டில் இரு உயிர்கள் பட்டினியாக கிடக்கின்றன அது வேறு இவனது மனதை வாட்டியது வெறுமையாக கிடந்த வயிற்றினுள் வண்டுகளும் புகையிரதமும் புகுந்தது போல கூச்சலும் இரைச் சலுமாக இருந்தது. பெரிய ஒரு கொட்டாவி விட்டு தலையை ஜன்னல் ஒரம் சரித்துக் கொண்டான். அம்மாவின் நினைவு எழுந்தது "பாவம் அம்மா எவ்வளவு கஸ்ரப் படுகிறா ஒரு நேரம் சாப்பிடாத எனக்கே இவ்வளவு பசியெண்டா நேற்று இரவு முழுக்க சாப்பிடாமல் இருக்கிற அம்மாவுக்கு எவ்வளவு பசிக்கும் ?" பத்து வயதின் இள முதிர்வில் மனம் இரும்பாகக் கனத்தது மீண்டும் சுவரோடு தலையைச் சாய்த்துக் கொண்டான்

விழிகள் வீதிக்கு அப்பால் வெகு தொலைலவிலே தெரியும் குடிசை வரை நீண்டது கடும் வரட்சியிலிருந்து இன்னும் விடுபடாத குட்டிக் கிராமத்தில் தான் அவனது சிறிய குடிசையும் இருக்கிறது அந்தக் காலத்தில் குழந்தைகளுக்குச் சோறூட்டுவதற்காக வீட்டின் முற்றத்திலே நின்று நிலவினைக் காட்டினார்கள் வீட்டினுள் இருநது கொண்டே நிலவினைப் பார்க்கும் அதிசயம் இவனுக்கு மட்டுந்தான் கிடைத்திருக்கிறது. கூரையில் கிருகு ஒலைக்குப் பதிலாக ஈர்க்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே மீன்பிடி வலைகள் போல காட்சியளித்தன. இதுதான் இவனுக்கு கிடைத்த வறுமையின் சின்னம் மழை காலங்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடும் வாய்கால் தான் இவர்களுடைய நடைபாதை இப்போது வாய்வால் காய்ந்து புளுதி பறக்கிறது இவர்களுடைய வாழ்க்கையைப்போல

ஏதோ சத்தம் கேட்க தலையினை நிமிர்த்தி கண்ணைத் திறந்து பார்த்தான் முதலாவது சபைக்காக வரிசையில் நிண்டவர்கள் ஆரவாரத்துடன் உள் நுளைந்து கொண்டிருந்தனர் "வாசலுக்குக் கிட்ட வந்திட்டன் இன்னும் கொஞ்ச நேரத்தில் உள்ள போய்ச் சாப்பிடலாம்" என்று நினைத்துக் கொண்டு வயிற்றைத் தடவினான் உள்ளிருந்து போர் விமானம் வேகமாக வருவது போல பெரிய தொந்தியுடைய ஒருவர் "இனி உள்ளுக்கு இடமில்லை கதவை பூட்டப்பா" என்று அதட்டலாகக் கூறினார் கதவும் இழத்துப் பூட்டப்பட்டது. இப்போது முதலாவது சபை தொடங்கியது பருப்பும் குழம்பும் கமகம வென்று மணத்தன. அவனுக்கு பசி மேலும் அதிகரித்தது எட்டி உள்ளே பார்த்த படியே மறுபடியும் தலையினைச் சாய்த்துக் கொண்டான் இன்று காலையில் நடந்தது இவனுடைய நினைவிலே பசியாகப் படர்ந்தது.

குடிசையின் மண் தரையிலே நிலத்தை வெளிக்காட்டிய பாயிலே படுத்தபடி கண்கள் நிறைந்த முகட்டினூடாக பளபளத்த வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவன் குசினிப் பக்கம் திரும்பிப் பார்த்தான் தேனீர் தயாரிப்பதற்கான எந்த வித அறிகுறியுமில்லை. நித்திரையினை விரட்டுவதற்காகவே கண்களை இறுக்கி அழுத்தித் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான் குந்திலே சாய்ந்து பீடியை உறுஞ்சியபடி செல்வத்தைக் கண்டதும் இவனுடைய மனதில் வெறுப்பு விசமாக ஏறியது பகல் முழுவதும் தோட்டத்திலே வெய்யில் அடித்து கூலி வேலை செய்து விட்டு கிடைக்கின்ற கூலியில் கழுத்துவரை குடித்து விட்டு வந்து வெறுமையான சட்டி பானைகளோடு வீரத்தைக் காட்டி விட்டு காலையில் எழுந்து தியானம் செய்பவர்களைப் போல அமைதி பேணும் தகப்பனை நினைக்க அவனிடம் அன்பு பெருகுவதில்லை.

செல்வத்துடன் ஒப்பிடுகையில் தாய்க்கு தோட்ட வேலைகள் கிடைப்பது குறைவு அப்படிக் கிடைத்தாலும் மதிய உணவாக வழங்கப்படும் பாணைச் சுருட்டி எடுத்துக் கொண்டு வந்து இவனுக்கே கொடுப்பாள் வீட்டுக்கு வந்தால் கடன் தொல்லை கணவனின் குடிகாரத் தனம் எல்லாவற்றையும் சமாளித்து இவனுக்காகவே தாய் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தவன் வெறுப்புடன் தண்ணீர்க் குடத்தை நோக்கி நடந்தான் தகப்பனின் குடிகாரத் கோரத் தாண்டவம் தண்ணீர்க் குடத்தைக் கூட விட்டு வைக்கவில்லை தகப்பனை ஒரக் கண்ணால் பார்த்தபடி நெளிந்த குடத்தினைச் சரித்து நீரைப் பருகிவிட்டு நிமிர்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டான் நேற்று வாத்தியார் சொன்னது நினைவுக்கு வந்தது.

"சசிக்குமார் நாளைக்கு நீ புதுக் கொப்பி இல்லாமல் வகுப்புக்கு வரக் கூடாது கொப்பரிட்ட சொல்லி நாலைஞ்சு கொப்பி வாங்கு" என வாத்தியார் சொன்னது இவனுடைய காதில் ஒலித்துக் கொண்டிருப்பதை விட தந்தையிடம் கேட்பதனால் ஏற்படும் விளைவு பற்றிய அச்சமே பல மடங்காக அதிகரித்தது "அப்பா" என்றான் இவனுடைய மென்மையான குரலினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமதிப்பது போல செல்வத்தினுடைய செருமல்கள் ஓங்கி ஒலித்து ஓய்ந்தது பீடித் துண்டினை எறிந்து விட்டு பதட்டமாக எழும்பி நடந்தவன் மேலும் கீழுமாகப் பார்த்தான் "குமார் கிண்டைக்கு கோயில் மடத்தில் அன்னதானம் குடுப்பினம் வேண்டிச் சாப்பிட்டு விட்டு சொப்பிங் பையில கொம்மாவுக்கும் வேண்டியந்து குடு" என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

"அப்பா........

பள்ளிக்கூடம்;...........

வாதிதியார்................

கொப்பி..............."

வார்த்தைகள் வாயிலிருந்து வெளிவர மறுத்தன பீரங்கி செல்கள் பாய்வது போல மிக வேகமாகத் திரும்பியவன் " பள்ளிக்கூடமும் மண்ணாங் கட்டியும் நாளையில இருந்து எனக்கு உதவியா உன்னை தோட்டத்துக்குத்தான் கூட்டிக் கொண்டு போப்போகிறன். பேசாமல் நான் சொல்லுறதை மட்டும் செய்" என உறுதியாகக் கூறிவிட்டுச் சென்றான். பேய் அறைந்தவன் போல் சலனமற்று நின்றவன் கண்ணிலிருந்து வந்த கண்ணீர் அவனது முகம் முழுவதையும் நனைத்துக் கொண்டது பள்ளிக்கூடத்திலே கொலசிப் எண்ட பேரில கொலை செய்கிறார்கள். திறமையும் கெட்டித்தனமும் அதிகமாக இருந்தாலும் வறுமையும் என்னுடன் போட்டி போடுகிறதே எனது கல்வி எனது ஆசை எல்லாம் தோட்டத்திலே புதைபடப் போகிறதே என ஒரு கணம் சிந்தித்தான்.

ஏதோ சத்தம் கேட்டு குசினிப் பக்கம் தலையைத் திருப்பினான். சொறி பிடித்த பெட்டை நாய் ஒன்று ஏதாவது கிடைக்கலாம். என்ற நப்பாசையில் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. உள்ளே எந்தவித சலனமும் இல்லை. பெரு மூச்சுடன் எழுந்து நடந்து குசினியின் உக்கல் ஓலைகளின் நடுவே சொருகி இருந்த "சொப்பின் பையை எடுத்து காற்சட்டைப் பொக்கற்றினுள் துளைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். தேன்கூட்டிலே ஈக்கள் சலசலப்பது போல மண்டபத்தினுள் பலத்த ஆரவாரம் கிளம்பியது. தீடிரென தலையினை நிமித்தி கண்விழித்துப் பார்த்தவனுக்கு இரண்டாவது சபைக்கான ஆயத்தங்கள் தென்பட்டது முதலாவது சபையிலே சாப்பிட்டவர்கள் ஏப்பம் விட்டபடி கை கழுவப் போனார்கள். இவனுக்கு எச்சில் ஊறியது. பொக்கற்றுக்குள் இருந்த பெரிய "சொப்பிங்" பையினை எடுத்து ஆயத்தமாக வைத்திருந்தான். "எப்டியாவது இலை நிறைய வாங்கி இயன்ற வரை சாப்பிட்டு விட்டு மிச்சத்தை பையிலே போட்டு வீட்டுக்கு கொண்டு போக வேண்டும்." என்பதே இவனுடைய நோக்கமாக இருந்தது. அவர்கள் சாப்பிட்ட இலைகளை ஒரு கிடங்கிலே போட்டார்கள் சில நாய்கள் உள்ளே நுழைந்து துளாவின . இவன் வயிற்றைத் தடவியபடி "ஐயோ எவ்வளவு சோற்றை மிச்சம் விட்டிருக்கினம் " இது கூட இல்லாமல் எத்தின பேர்.... கடவுளே" பசி மயக்கத்தில் அவனுக்குத் தலையே சுற்றியது.

இப்போது இரண்டாவது சபைக்காக உள்ள நுளைய ஆயத்தமாக நின்றார்கள். வாசலிலே நின்றவர் வரிசையாக நின்றவர்களைக் கவனிக்கவே இல்லை. தனக்குத் தெரிந்தவர்களை ஒவ்வொருத்தவராக கூவிக் கூவி அழைத்துக் கொண்டிருந்தார். "அண்ணோய் இராசண்ணை இஞ்ச வா. உள்ளுக்கு இடமிருக்கு. மணியக்கா நீயும் பிள்ளையளை கூட்டிக் கொண்டு வா. உள்ளை இடமிருக்கு. "இல்லை அண்ணா நான் வீட்டில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டன். இனி இடமில்லை. "அதுக் கென்ன இதிலையும் கொஞ்சம் சாப்பிட்டுப் பாருங்கோவன். இல்லாட்டி நல்ல தம்பியார் கோவிப்பார் தெரியுந்தானே?... " சரி சரி வாறன் என்ற படி உள் நுளைகின்றார்கள் ஒவ்வொருத்தரும் தங்களுக்குத் தெரிந்தவர்களை ஏனைய கதவுகளாலும் உள் நுளைய விடுகிறார்கள்.

பசி மயக்கத்தினால் பொறுமையை இழந்தவன் மீண்டும் உள்ளே எட்டிப் பார்த்தான். இரண்டாவது சபைக்காகவும் மண்டபம் நிறைந்திருந்தது உள்ளே உணவு பரிமாறுபவர்கள் சுறு சுறுப்பாக இயங்குவது தெரிந்தது. "உள்ள இனி இடமில்லை என ஒரு குரல் "மீண்டும் ஒலித்தது. பெரிய கரை பட்டு வேட்டியுடன் ஒருவர் அங்கும் இங்குமாக நடந்து திரிவது தெரிந்தது. கண்களை விரித்து கூர்ந்து பாரத்தான். அவர் தான் அவனுடைய அந்த கொப்பி வாத்தியார் அவரைக் கண்டதும் இவனுடைய பிடி வரிசையிலிருந்து விலகியது. வெளியே வந்தான் வீதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான். வரிசையில் நின்றவர்கள் புதினமாகப் பார்ப்பதை இவனுடைய கடைக்கண் பார்வை உணர்த்தியது வீதியால் ஏறியவன் சற்றுத் தூரம் நடந்து சென்றதும் திரும்பிப் பார்த்தான் மூன்றாவது சபைக்காக வெள்ளை வேட்டிகளும் சருகைக் சேலைகளும் ஆரவாரப் படுவது தெரிந்தது. "வெறும் வயிற்றோடு கிடக்கும் அம்மா ....." "தோட்ட வேலைக்குப் போன தந்தை......" "கொப்பி கேட்டு மிரட்டும் வாத்தியார்...." பசி மயக்கத்தில் மின்னல் போல எல்லோரும் வந்து மறைகின்றனர். கையில் இருந்த "சொப்பிங்" பையினுள் ஊதி காற்றை நிரப்பி மேலே எறிந்து விட்டு நடக்கத் தொடங்கினான். புழுதிக் காற்றிலே அது மெல்ல மெல்ல பறக்கத் தொடங்கியது. சற்று நேரத்தில் வீட்டினை அடைந்தவன் மீண்டும் களைப்பாற குடத்திலிருந்த எஞ்சிய தண்ணீரையும் சரித்துக் கடித்துவிட்டு குந்துடன் சாய்ந்து தூங்கும் தாயின் மடியிலே தலை சாய்த்துக் கொண்டான்.

முற்றும்......

**அரசஉத்தியோகத்தர்களுகிடையிலான "சித்துவிலி கெத்தம்" போட்டியில் முதலாம் இடம் பெற்ற சிறு-கதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " மாற்றம்"

திரு.மு.சுகந்தகுமார்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,காரைநகர்.

அப்பாடா ஒருவழியாக சீற் கிடைத்துவிட்டது. இல்லாவிட்டால் நான்கு அல்லது ஐந்து மணித்தியாலம் பஸ்சில் நிண்டு கால் உழைஞ்சு போடும் என்று நினைத்தவாறு சீற்றில் உட்கார்ந்தேன்.முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ் அது.பயணிகள் நிரம்பி விட்டார்கள் .ஒன்றிரண்டு சீற்றுக்கள் மிச்சம் இருந்தன. அங்கே இருந்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள். வெள்ளிக்கிழமை ஆதலால் அனைவரது முகங்களிலும் பிரயாணக்களைப்பு என்ற எண்ணத்தையும் மீறி சந்தோஷ களை தெரிந்தது. குடும்பகாரர்கள்இ திருமணமாகாதவர்கள் என பல ரகத்தில் இருந்தார்கள். திங்கட்கிழமை காலை நான்கு மணியில் இருந்து ஆறு மணி வரை உள்ள இரண்டு மணி நேரத்தில் யாழ் மத்திய பேரூந்து நிலையம் அல்லோல கல்லோலப் பட்டுவிடும். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் அரச உத்தியோகத்தர்கள் பெரும்பாலும் ஆசிரியர்கள் என பேரூந்து நிலையம் திருவிழா கோலம் கொள்ளும். பஸ்சை பிடித்தவர்கள் மனைதில் மகிழ்ச்சி-தவறவிட்டவர்கள் "அஞ்சு நிமிசம் பஸ்சை முந்தி கொண்டு போட்டாங்கள். வீட்ட நாலு மணிக்கு எழும்பி இஞ்ச வந்து நாங்கள் ரண்டு மணித்தியாலம் அடுத்த பஸ்சுக்கு காத்திருக்கிறம்" என்ற முணுமுணுப்பு இப்படி பல பேச்சுக்களை கேட்கலாம் பல காட்சிகளை பார்க்கலாம். போதுமடா சாமி என்று தோன்றும் எமக்கு.

அதிலும் பெண் உத்தியோகத்தர்களை நினைத்தால் பாவமாக இருக்கும். சீற் கிடைக்காவிட்டால் கால் கடுக்க நிற்க வேணும். கூட்டத்துக்குள் நின்று நெரிபட வேணும். பஸ்சுக்குள்ளே சாட்டோடு சாட்டாக உடம்போடு உரசும் ஆசாமிகளின் தொல்லை வேறு. பாவம் அந்த பிள்ளைகள் வாங்குகிற கொஞ்ச சம்பளத்துக்கும் அரசசேவை என்ற அந்தஸ்துக்கும் இதுகளை எல்லாம் பொறுத்துக் கொள்ள வேணும் என்பது எழுதப்படாத விதியாகத்தான் இருந்தது அந்தக்காட்சி என் கண்ணில் படும்வரை. வழமையாக முள்ளியவளையில் நின்றுதான் பஸ் ஏறுவேன். அன்று சீற் பிடிக்கவேண்டும் என்பதற்காக முல்லை பஸ் நிலையத்திற்கு வந்து சீற்றும் பிடித்துவிட்டேன். பெண்கள்இஆண்கள்இசிறுவர்கள் என பஸ் ஒரு சின்ன மிருககாட்சி சாலை போல மெதுவாக ஊர்ந்தது. "இவங்களுக்கு எவ்வளவு ஆட்கள் ஏறினாலும் காணாது. மெல்ல மெல்ல ஊர்ந்து யாழ்ப்பாணம் போக எட்டு மணியாகப்போகுது பிறகு கடைசி பஸ்சை விட்டிட்டு நாங்க பஸ் ஸ்ரான்டிலயே நாங்க படுக்கிறது" யாரோ ஒரு இளம் உத்தியோகத்தன் முணுமுணுத்தான். அவன் படுக்கையை வலியுறுத்தி பேச-ியமையால் அவனுக்கு அண்மையில் தான் திருமணம் ஆகியிருக்க வேண்டும் என்று கணிப்பு போட்டுக் கொண்டேன். இந்த மாதிரி குத்துமதிப்பாக கணிப்பு போடும் திறமை எனக்கு பரமேஸ்வரன் பாடசாலையிலேயே வாய்த்தது என என் நண்பர்கள் கிண்டலடிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் கேப்பாபுலவுஇ புதுக்குடியிப்புஇ விசுவமடுஇ முரசுமோட்டை என்று ஒருவழியாக பரந்தன் சந்தியை வந்து அடைந்தது. பஸ் பரந்தன் சந்தியை வந்து அடைந்தது கூட தெரியாமல் பஸ்சுக்குள் பலர் இருந்தார்கள். நித்திரை கொள்ளும்போது பஸ் பரந்தனுக்கு போனால் என்ன? பறந்து போனால் என்ன?. ஆனால் பஸ் முல்லையில் பஸ் புறப்பட்டதில் இருந்து எனக்கு வழமையாக வரும் துக்கம் அன்று வரவில்லை. காரணம் பஸ்சுக்குள் இருந்த ஒருவன் தான். பஸ்சில் ஏறிய அவனை எதேச்சையாகவே நான் பார்த்தேன். நான் சீற்றின் நடுப்பகுதியில் இருந்தபடியால் அவனைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. பஸ்சில் ஏறியதிலிருந்து ஒரே இடத்தில் நின்று கொண்டிருந்தான் அவன். கொண்டக்ரர் முன்னுக்கு போங்கோ முன்னுக்கு என்று கத்தியும் அவன் அசைந்தபாடு இல்லை. அதே அடத்தில் அசையாமல் சீற்றோடு ஒட்டிக்கொண்டு நின்றான். ஏன் இவன் அசையாமல் நிக்கிறான் என யோசித்தவாறு நான் அமர்ந்திருந்தேன். நிறைய சனம் என்ற படியால் அவன் நின்ற இடத்துக்கு முன்னால் உள்ள சீற்றில் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. விசுவமடுவில் கொஞ்ச சனம் இறங்கியது. பஸ்சுக்குள் அப்பொழுதுதான் வெளிச்சம் கொஞ்சம் வந்தது. அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அம்மனிதன் அவ்விடத்திலேயே நிற்பதற்கான காரணம் என்ன என்பதை அறிய முற்பட்டேன். நாற்பது வயது மதிக்கத்தக்க தோற்றம். அணிந்திருந்த ஆடைகள் கூலி வேலை செய்துவிட்டு வீடு திரும்புவதை பறைசாற்றின. அவனுக்கு முன்புறமுள்ள சீற்றில் ஒரு பெண்ணின் தோள்மூட்டுடன் உரசியவாறு நின்றிருந்தான்.பஸ் பிறேக் போடும் போதெல்லாம் அவன் இன்னும் அழுத்தமாக அவள் மீது சாய்கிறான் என்பதை அப்பெண் அவனை முறைத்து பார்ப்பதிலிருந்து விளங்கி கொள்ள முடிந்தது.அவளோ முன்சீற்றின் மேற்புறமுள்ள கம்பியில் சாய்வதும் நிமிர்வதுமாக எப்படி இந்த அவஸ்தையில் இருந்து தப்புவது என நெளிவது போல் தேன்றியது எனக்கு. இப்படியான சம்பவங்கள் பஸ்சுக்குள் நடக்கும் போது வழமையாக பலர் கண்டு கொள்வதில்லை அல்லது கண்ட மாதிரி காட்டிக் கொள்ளதில்லை.ஏனெனில் நாகரிக உலகில் இது எல்லாம் சர்வ சாதாரணம் என்ற நினைப்பு அவர்களுக்கு. உண்மையில் நாகரிகம் என்பது கற்காலம் என்பதிலிருந்து முன்னேறி வருதல் என்பதற்கு பதிலாக மீண்டும் கற்காலத்துக்கு செல்லுதல் என் பலர் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் போலும். சாதாரணமாக பஸ்சுக்குள் இவ்வாறான நடவடிக்கைகளில் இருவர் ஈடுபடும்போது அச்செயல் அவர்கள் சம்மதத்துடன் நடைபெறுகிறதா இல்லையா என்பதை கணித்து விட முடியும். ஆண்களின் வாடை பட்டவுடன் சுடு தோசைக்கல்லில் விழுந்த நீர்த்துளி காணாமல் போவது போல அவ்விடத்தை விட்டகலும் எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறேன். மாறாக எந்த சலனமும் இல்லாமல் அவ்விடத்திலேயே நிற்கும் இன்னொரு வகை பெண்களையும் பார்த்திருக்கிறேன். ஒருமுறை பஸ்சில் சில்மிசம் பண்ணிய ஒருவனை நான் தட்டி கேட்கப் போய் அவனுக்கு அந்த பெண் ஆதரவாக கதைத்தது மட்டுமல்லாமல் அவன் தப்பே பண்ணவில்லை என்றும் பஸ்சில் இது எல்லாம் சகஜம் என்றும் எனக்கு பாடம் நடத்தியது ஞாபகம் வந்தது. பஸ்சுக்குள் இருந்த பலர் இந்த பொடியனுக்கு ஏன் தேவையில்லா வேலை என்ற கோணத்தில் ஏளனமாகப் பார்த்தமையும் என் நெஞ்சை விட்டகலா எண்ணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சம்பவம் நடந்து சில வருடங்கள் கடந்து விட்ட நிலையில் இன்றைய சம்பவத்துடன் அதனை தொடர்பு படுத்தி பார்க்கிறேன். கவனமாகத்தான் இதனை கையாள வேண்டும். எனினும்எனக்குஅவமானம்ஏற்படும்என்பதற்காக அவஸ்தைப்படும் அப்பெண்ணின் நிலையை அப்படியே தொடர விடமுடியாது.இவ்வாறு நான் யோசித்து கொண்டிருக்கும் போது காரியத்தில் இறங்க வேண்டிய தருணமும் வந்தது. ஆனையிறவு படையினரின் காவலரணை கண்டதும் கொண்டெக்ரர் பொடியன் இறங்கி தலைதெறிக்க காவரணை நோக்கியோடினான். பதிவினை முடித்த பின் போன வேகத்தில் திரும்பி வந்து அண்ணை ரைட் என்று கத்தினான் பஸ் மெல்ல குலுக்கலுடன் புறப்பட்டு வேகமாகத் தொடங்கியது. பெருமளவு கார்பெற் றோட்டுக்கள் முடிவடைந்த நிலையில் சீரான வேகத்தில் செல்லும் பஸ்சில் கையைக் கூட விட்டு விட்டு நிற்கலாம் றைவர் பிறேக்கில் கால் வைக்காமல் இருந்தால்? பஸ்சுக்குள்பார்வையைசுழலவிட்டேன்.பஸ்சுக்குள் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். சீற்றுக்கள் பல காலியாக இருந்த போதிலும் அவன் இன்னும் நின்றிருந்தான். அப்பெண்ணை உராய்வதிலிருந்தும் அவன் பின்வாங்குவதாயில்லை. ஆனால் கனவான்களோ சீமாட்டிகளோ இக்காட்சியை கண்டு கொள்ளாமல் பார்வையை இயற்கை காட்சிகளில் தவழ விட்டபடி வந்தார்கள். அல்லது அவ்வாறு பாவனை பண்ணினார்கள். இத்தனைக்கும் அந்த பஸ்சில் தனியொ-ருவனாக அவன்தான் நின்றிருந்தான். வழமையாக ஆனையிறவு நுழைவாயிலைக்கடக்கும் போது என் நெஞ்சு இனம் புரியாததொரு சோகத்தில் ஆழ்ந்து போய்விடும். எல்லா தமிழனுக்கும் அப்படித்தான் இருக்கும் என்று நான் நினைப்பேன். ஆனால் இன்று இதற்கு மேல் பொறுத்துக் கொண்டு இருப்பது என் ஆண்மைக்கே இழுக்கு என்று தோன்றியது. என் மீசை துடித்தது நெஞ்சு பதறியது கைகள் தாமா-கவே முறுக்கிக் கொண்டன. சட்டென்று எழுந்து அவன் நின்ற இடத்துக்கு விரைந்தேன். அவன் தோளில் சற்று பலமாக தட்டினேன். திரும்பி என்ன என்பது போல் பார்த்தான். “அண்ணை நீங்க இவவுக்கு சொந்தமா ? ”என்று கேட்டேன். “இல்ல தம்பி” என்றான் அவன் சாவதானமாக. “அப்ப அவவை உங்களுக்கு தெரியுமா ? ” என்று கேட்டேன்.

“இல்ல” என்றான்.

“பின்ன என்ன ......... க்கு இதில நிக்கிறாய்? ”என் பேச்சு திடீரென்று ஒருமைக்கு தாவியது. “நானும் அப்பயிருந்து பாத்துக் கொண்டு நிக்கிறன் சனத்தோட சனமா நிண்டு உரசிக் கொண்டு வாறீர் இப்ப சனம் இறங்கின பிறகும் உமக்கு விலத்தி நிற்க முடியாதோ நீங்கள் எல்லாம் அக்கா தங்கச்சியோட பிறக்கேல்லையோ ? ” எனக்கு கைகள் இப்பொழுது படபடப்பினால் மேலும் பதறத் தொடங்கி விட்டன. “அண்ணை பஸ்சை நிப்பாட்டுங்கோ இங்க பஸ்சுக்குள்ள நடக்கிற பிரச்சனையைக் கவனிக்காமல் என்ன பஸ் ஓடுறியள்” என்று நான் கத்தினேன். இயக்கச்சி சந்தியால திரும்பின பஸ் பிறேக்குடன் குலுங்கி நின்றது. கொண்டெக்டர் பஸ்சின் நடுப்பகுதிக்கு ஓடி வந்தான். “என்ன பிரச்சனை தம்பி இஞ்ச ? ” என்று கேட்டான். “என்ன பிரச்சனையோ? பஸ்சில ஏறினதில இருந்து இவர் இந்த அக்காவை இடிக்கிறதும் உரசு-றதுமாய் நிக்கிறார் அந்த அக்காவோ இதை தாங்க முடியாமல் நெளியிறா ஆனால் சனம் இறங்கியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விலத்துற பாடு இல்ல" நான் சூடாகினேன். அந்த மனிதனோ "என்ன தம்பி என்னென்னவோ கதைக்கிறீர் அந்த பிள்ளை என்ர தங்கச்சி மாதிரி" என்று அளந்தான். இதன் அடிமுடி காணாமல் இன்று விடுவதில்லை என்ற முடிவுடன் "அக்கா இவர் உங்கள இடிச்சுக் கொண்டு வாறது உண்மைதானே" என்று கேட்டேன். முதன் முறையாக அவள் வாய் திறந்தாள் "ஓம் தம்பி பஸ்சுக்குள்ள ஏறினதில இருந்து இடிச்சுக் கொண்டு நிக்கிறார். நானும் அப்படி இப்படி எல்லாம் வளைஞ்சு நெளிஞ்சு பாத்தன் பக்கத்தில இருக்கிற அம்மாவிட்டையும் சொல்லி பார்த்தன் ஆனால் இவர் அசையாமல் இடிச்சுக் கொண்டு நிக்கிறார் என்ன செய்யிறது நாங்க பொம்பிளையள்" என்று அவள் விசும்பத் தொடங்கினாள். "இவங்களுக்கு எல்லாம் குடுக்கிறதுக்கு ஆக்கள் இல்ல" என்றவாறு இளம் வயதினன் ஒருவன் அநத மனிதனுக்கு அடிப்பதற்கு கையை ஓங்கினான் "பொறும் தம்பி" என்று அவனை தடுத்தவாறே "அண்ணை உங்கட வயசுக்கு மரியாதை தந்து உங்கள சும்மா விடுறம் எல்லா இடத்திலயும் எல்லாரிட்டயும் இது சரிவராது என்டதைப் புரிஞ்சு கொள்ளுங்கோ கவனமா இருங்கோ" என்றேன். தலை குனிந்த படி செய்வதறியாது திகைத்து போய் நின்றான் அவன். பஸ்சுக்குள் சுற்றும் முற்றும் பார்த்தேன். என் செயலுக்கான ஆதரவு அனைவரது முகங்களிலும் தெரிந்தது.அது மேலதிக வலுவை எனக்கு தந்திருக்க வேண்டும். "நாங்கள் எல்லாம் இப்பிடி வேடிக்கை பாத்துக் கொண்டு நிக்கிறதால தான் கண்டவனனும் எங்கள ஏறி மிதிச்சுக் கொண்டு போறான்.எங்கட போக்கு மாற வேணும் அநியாயத்த தட்டிக் கேக்க ஏன் பயப்பிட வேணும்? எங்கட அக்கா தங்கச்சிக்கு நடந்தா நாங்க பாத்துக் கொண்டு நிப்பமோ இல்லத் தானே? ஒற்றுமை இல்லாததால தான் தமிழினம் இந்த நிலையில இருக்கிறம்" என்று என் ஆதங்கத்தைக் கொட்டினேன். பஸ்சில் இருந்தவர்கள் அமைதியாக இருந்தனர். "என்ர சீற்றில போய் இருங்கோ நான் நிக்கிறன்" என்று அவனை பார்ததுக் கூறினேன். வேறு வழி இல்லாமல் போய் சீற்றில் அமர்ந்து கொண்டான். முன் சீற்றிலே கையை அணையாக வைத்து அதிலே தூங்கி விட்டான். அல்லது தூங்கிய மாதிரி நடித்தானோ யார் கண்டது?. அந்த சகோதரியை பார்த்தேன் கண்ணீருடன் நன்றியும் அவள் கண்களில் பளபளத்தன. மறுபடியும் பஸ் குலுக்கலுடன் புறப்பட்டது.பஸ்சின் முன்புறத்தில் கம்பீரத்துடன் நின்று கொண்டேன். எதையோ செய்து முடித்த திருப்தி எனக்குள் இன்று முதன் முறையாக தென்பட்டது. "உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்" என்று வானொலியில் ஒலித்த பாடலில் புதிதாக ஒரு அர்த்தம் இருப்பதாக பட்டது எனக்கு.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eeswaa Digital Press
Tel: 021 222 0233